

திரு அம்மானை
கி.வா.ஜகந்நாதன்

# திரு அம்மானை

(விளக்கக் கட்டுரைகள்)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்.,
46, இராயப்பேட்டை ஹைரோடு
சென்னை — 600 014

உரிமை ஆசிரியருடையது

முதற்பதிப்பு—ஆகஸ்ட், 1980

விலை ரூ. 9-00

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை - 600 002

# முன்னுரை

சைவத் திருமுறைகளில் எட்டாவதாக விளங்குபவை மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும். திருவாசகம் மனத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழி அதன் உருக்குந் தன்மையைத் தெளிவாக்குகிறது. சைவர்கள் மாத்திரமன்றி மற்றச் சமயத்தினரும் ஓதி உணர்ந்து உருகும் வகையில் அந்த அருள் நூல் அமைந்திருக்கிறது. கிறிஸ்தவப்பாதிரியாராகிய ரெவரண்ட் ஜி.யூ. போப் தமிழ் பயின்றார்; தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். திருக்குறளையும் நாலடியாரையும் அவர் ஆங்கில மொழியில் பெயர்த்தார். அவை நீதி நூல்களாதலின் எந்தச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்தவை.

தமிழைப் பயின்ற போது பல வகையான தமிழ் நூல்களையும் அந்தக் கிறிஸ்தவ மதகுரு கற்றார். தேவாரம், திவ்யப்பிரபந்தம் முதலியவற்றையும் படித்திருக்கக் கூடும். அந்த முறையில் திருவாசகத்தையும் படித்தார்; கற்றார்; அதில் ஆழ்ந்தார். அந்தக் கிறிஸ்தவருடைய உள்ளத்தையும் அது உருக்கியது. "ஆங்கிலமே, இத்தகைய நூல் ஒன்று ஆங்கு இலமே!" என்று எண்ணியிருக்கவேண்டும். அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். எனவே, 'திருவாசகத்துக்கு உருகாதார்' என்பது சாதி சமயங் கடந்து யாவருக்கும் அநுபவமாவதையே சொல்வதாகக் கொள்ளலாம்.

இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டி ஏங்கி நிற்கும் ஆத்மாவின் வேதனையைத் திருவாசகம் நன்கு

வெளியிடுகிறது. இறைவனை எந்த உருவில் வழிபட்டாலும் அவனருளைப் பெறவேண்டும் என்று ஏங்கும் வேதனை பொதுவானது. அரசியானாலும் தொழில் செய்யும் பெண்ணானாலும், இந்தியப் பெண் ஆனாலும் ஆங்கிலப் பெண்ணானாலும் பிரசவ வேதனை என்பது எல்லோருக்கும் பொதுவானது. அதுபோல உபாசனை வகைகளும், உபாசனா மூர்த்திகளும் வேறுபட்டாலும் அருளைப் பெற வேண்டும் என்று ஏங்கும் ஏக்கம் அடியார் யாவருக்கும் பொதுவானது. ஒருவருடைய ஏக்கத்தை அப்படியே ஏங்கும் மற்றவர் புரிந்து கொள்ள முடியும்.

இந்த ஏக்கத்தைத் திருவாசகத்தில் நிரம்பக் காணலாம். அதற்கு மேலும் இந்த அருள் நூலுக்கு ஒரு சிறப்பு இருக்கிறது. பிரசவ வேதனைப் பட்ட தாய் குழந்தையை ஈன்றதும் ஒருவகைச் சோர்வை அடைகிறாள். அந்தச் சோர்வு அவளுடைய இன்பத்தோடு இணைந்து நிற்பது. அப்படியே இறைவனுடைய திருவருளின்பத்தை நுகர்ந்தவர்களுக்கும் ஒருவகைச் சோர்வு தட்டும். அந்தச் சோர்வும் இன்ப மயமானது.

அருளநுபவம் பெற்ற ஆனந்தாதிசயப் பெருக்கில் அன்பர்கள் துள்ளிக் குதித்து வாயாரப் பல பேசி மகிழ்வார்கள். அருளுக்காக ஏங்கியபோது புலம்பிய புலம்பலுக்கு ஈடாக இந்த ஆனந்தாதிசயப் பெருமித வெளியீடு இருக்கும். மணிவாசகர் திருவாசகத்தில் இந்த இரண்டையும் பார்க்கலாம்.

இறைவன் திருவருளின்பத்தை அநுபவித்து,

"பருகியும் ஆரேன், விழுங்கியும் ஓல்லகில்லேன்"

என்று ஆரவாரித்தவர் மணிவாசகர். அந்த இன்பப் பெருக்கின் நிறைவிலே தோன்றும் உணர்ச்சியின் வெளி

யிடாகிய பாடல்களை யாவரும் பாடமுடியாது. மணிவாசகர் அத்தகைய பாடல்களைப் பாடினார். அவை இறைவன் திருவருளால் இந்தப் பிறவியிலே பேரின்ப அநுபவம் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்கும்.

"அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்"

என்று அந்த அநுபவத்தைக் கூறுகிறார் மணிவாசகர். அதனால் அவருடைய திருவாக்கு ஒளியுடைய மணி வாக்காகத் திகழ்கிறது. தொட்ட தொட்ட இடமெல்லாம் அருள் மின்சாரத் தாக்கின் அதிர்ச்சியை அவர் திருவாக்கில் காணலாம்.

பலகாலும் திருவாசகத்தை ஓதி ஓதி ஓரளவில் இன்புறும் பேறு எளியேனுக்குக் கிடைத்தது. பாட்டிலே ஊன்றி ஆழ்ந்து நின்றேன். 'கிடைத்தற்கரிய அமுத நூல் ஒன்று தமிழருக்குக் கிடைத்திருக்கிறது' என்ற எண்ணம் திருவாசகத்தை நினைக்கும்போதெல்லாம் என் உள்ளே எழுகின்றது.

திருவாசகப் பகுதிகளில் ஒன்றாகிய திருவெம்பாவைக்கு விளக்கம் சொல்லி விரிவுரை ஆற்றும் வாய்ப்பு எனக்குச் சில முறை கிடைத்தது. அந்தப் பகுதிக்குரிய விளக்கத்தைத் தனி நூலாக எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இறைவன் திருவருளால் அது முற்றுப் பெறும் என்று நம்புகிறேன்.

இடையில் திருவம்மானை என்னும் பகுதியில் ஆழ்ந்தேன். இருபது பாட்டுக்கள் அடங்கிய அதில் ஈடுபட்டுச் சிந்தித்தேன். சிந்திக்கச் சிந்திக்க, அதன் நுட்பமும் திட்பமும் தெரியலாயின. அந்த உணர்வோடு இருக்கும் போது, அதன் விளக்கத்தை எழுத்தில் வடிக்கலாமே என்ற எண்ணம் தோன்றியது. படித்து உணரும்போது

ஆழ்வதைவிட எழுதப் புகும்போது பின்னும் அதிகமாக ஆழ்ந்து சுவைக்கும் இயல்பு உண்டாகிறது.

திருவம்மானையில் உள்ள இருபது பாடல்களையும் பல கால் ஓதிச் சிந்தித்து விளக்கம் கண்டதன் விளைவே இந்தப் புத்தகம். ஒவ்வொரு பாடலின் விளக்கத்தையும் தனித் தனியே தலைப்பிட்டுக் கட்டுரை வடிவில் எழுதியிருக் கிறேன்.

அருணகிரிநாதர், அபிராமி பட்டர், மூவர் ஆகியோருடைய திருவாக்குகளில் ஈடுபட்டு, அவர்கள் திருப்பாடல்களுக்குரிய விளக்கக் கட்டுரைகளை எழுதிப் புத்தகமாக வெளியிடும் வாய்ப்பை முருகன் திருவருளும் என் ஆசிரியப் பெருமானாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களின் ஆசியும் எனக்குக் கிடைக்கச் செய்தன. அந்த இரண்டையும் துணைக்கொண்டே இந்த விளக்கக் கட்டுரைகளையும் எழுதினேன்.

இந்த அருட்பாடல்களின் ஆழத்தை நான் என்ன கண்டு விட்டேன்! கல்வி கேள்வியும் அநுபவமும் உடைய வர்கள் இவற்றைச் சுருதி யுக்தி அநுபவங்களைக் கொண்டு விளக்கப் புகுந்தால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும். தாமரை மலர்வதைக் கண்டும் அல்லிப் பூ மலராமல் இருப்ப தில்லை. அவ்வாறு என் புன்மதியால் அறிந்தவற்றை, அல்லிப்பூவாக இல்லாவிட்டாலும் தும்பைப் பூவாகவேனும் பெரியோர் மதிக்கட்டும் என்ற எண்ணமே இந்தப் புத்தகத்தை வெளியாக்கும் துணிவை உண்டாக்கியது.

இதைத் தமிழுலகம் ஏற்கும் என்று நம்புகிறேன்.

'காந்தமலை' }
சென்னை-28 }

கி. வா. ஜகந்நாதன்
26-7-1980

# உள்ளுறைத் தொகுப்பு

திருவம்மானையில் இறைவனுடைய கோலத்தையும் இயல்புகளையும் அவன் எழுந்தருளியிருக்கும் சில தலங்களையும் அடியார்களின் இயல்பையும் அவர்கள் இறைவன் திருவருளால் பெறும் அநுபவத்தையும் மாணிக்கவாசகருக்கு இறைவன் திருவருள் புரிந்ததையும் காணலாம்.

சிவபெருமான் தன் திருவடியில் கழலை அணிந்திருக்கிறான். திருவடியே கருணையைப் பில்குகிறது அது மிக்க பெருமையை உடையது; தாமரை போலக் கண்ணுக்கு நிரம்பிய எழிலுடன் விளங்குவது; பொலிவு பெற்றது; செக்கச் சிவந்தது. அவன் யாரையும் அஞ்சலித்தறியாத வனுகையால் அவன் கைகள் சேர்ந்தறியாதவை. அவன் செய்ய வாயை உடையவன். திருமார்பில் முப்புரி நூல் அணிந்துள்ளான். தோள் நிரம்ப வெள்ளைத் திருநீற்றைப் பூசியிருக்கிறான். திருமுடியின்மேல் துண்டமாகிய பிறை விளங்குகிறது. மந்தார மாலையையும் கொன்றையையும் அவன் அணிந்திருக்கிறான். கொன்றைமாலையில் தேன் நிரம்பியுள்ளது. அவன் திருமேனி செம்பொன்னைப் போல ஒளி வீசுவது. அதனுல் அவனைச் செய்யான் என்கிறார். அவன் கரிய திருக்கழுத்தை உடையவன். நுதலில் கண்ணையுடைய தனிச் சிறப்பைப்பெற்றவன். தன் சடாபாரத்தில் கங்கையை வைத்திருக்கிறான். பின்னிய சடையினுல் பிஞ்ஞகன் என்ற திருநாமம் இறைவனுக்கு அமைந்தது.

அவனுடைய திருமேனியில் ஒரு பாதியில் அம்மை இருப்பதால் மாதிருக்கும் பாதியன், மாதியலும் பாதியன், பெண் ஆளும் பாகன், செப்பார் முலைபங்கன், கிளிவந்த மென்மொழியாள், கேழ்கிளரும் பாதியன், பெண் சுமந்த பாகத்தன் என்கிறார். அவன் அநாதியாகவே வரும் தொல் புகழை உடையவன்; விண் சுமந்த கீர்த்தியை உடையவன்; பண்நிறைந்த பாடல்களைப் பெற்றவன். அவன் விடையின்

மேல் ஊர்ந்து வருபவன்; அது வேகமாக நடப்பது. அழகிய குதிரையின் மேலும் எழுந்தருளி வருவான்.

அவனுடைய அனந்த கல்யாண குணங்களை எண்ணி இன்புறுகிறார். அவன் உயிர்களுக்கெல்லாம் தாய் போல நின்று அருள் பாலிப்பவன். கோனாகி நிற்பவன். அளவிறந்த பல்லுயிர்க்கும் மண்ணை ஆளும் மன்னவர்க்கும் மாட்சிமையைத் தருபவன். தானே உலகேழும் ஆகி, எங்கும் செறிந்தவன். எப்பொருளுக்கும் ஆதாரமாய் இருப்பவன். எல்லாப் பொருளும் சென்று அடையும் இடமாக இலகுபவன். எல்லா உலகங்களுக்கும் கடவுளாக உள்ளவன். அண்டங்களுக்கெல்லாம் மூலப் பொருளாகிய முதல்வன். ஞானசொரூபி. மெய்ப் பொருள்களில் காட்சி தருபவன். அன்பர்க்கு மெய்யனாகவும் அல்லாதார்க்குப் பொய்யனாகவும் இருப்பவன். அப்பாலைக்குப் அப்பாலாக நிற்பவன். மும் மூர்த்திகளுக்கும் முன்னே இருப்பவன். எவை அழிந்தாலும் அழியாமல் நின்று நிலைப்பவன். அன்பர்களுக்குத் தெளிந்த தேனைப் போலவும் இனிய அமுதத்தைப் போலவும் இருப்பவன். அவனுடைய சிறந்த பெற்றிகள் வேறு யாரிடமும் காண முடியாதவை.

அவன் அனலேந்தி ஆடுகிறான். கடலில் வலைவீசி மீன் பிடிக்கும் திருவிளையாடலைச் செய்தவன் அவன். தக்கன் செய்த யாகத்தில் சந்திரனைத் தேய்த்து, இந்திரன் தோள்களை நெரித்து, தக்கன் தலையை அரிந்து, கதிரவன் பல்லைத் தகர்த்துச் சிந்தி, தேவர்களை ஓடச் செய்தவன்.

அவன் இந்திரனும் பிரமனும் திருமாலும் காணுவதற்கு அரியவன். பாரிலுள்ளார், வானில் உள்ளார், பாதாளத்திலுள்ளார், வேறு இடங்களில் இருப்பவர் யாராலும் காண்டற்கு அரியான். இந்திரன் முதலியோர் காட்டில் மெய் இளைக்கத் தவம் செய்வார்கள்; பல பிறவிகளை எடுப்பார்கள். காமியத் தவம் செய்பவர்களாதலின் அவர்களால் அவனைக் காண முடிவதில்லை. அவன் தேவர்களுக்கெல்லாம் மேலான தேவனாக இருப்பவன்.

இவ்வாறு அருமை உடையவனாக இருந்தாலும் மெய்யன்பு உடையவர்களுக்கு எளியவன். அவர்களுக்கு மெய்ப் பொருளாகத் தோற்றுவான். அவர்கள் குற்றங்களை நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டுவான்; அவர்களுடைய சுற்றத் தொடர்பை அறுப்பான்; பாசத்தைப் பற்றுமற் செய்து அவர்களைத் தான் சென்று பற்றுவான்; பற்றறச் செய்து பேரானந்தத்தை வழங்குவான். பழ அடியார்களுக்கு அந்தமிலா ஆனந்தத்தை ஈந்தருள்வான். நெஞ்சை உருக்கி அவருள்ளே இருப்பான். அவர்களுக்குத் தேனாகவும் அமுதாகவும் இனிப்பவன் அவன்.

அன்பர்கள் ஓயாமல் அவனை நினைந்து உருகுவார்கள்; அவன் திருவடியே சரணமென்று புகுவார்கள்; எல்லாவற்றையும் அவன் திருவடிக்கே அர்ப்பணம் செய்வார்கள்; தம்மை அவனுக்கே புகலாக ஒப்புவிப்பார்கள்; 'என் ஆனை என் அப்பன்' என்று போற்றுவார்கள்.

மாணிக்கவாசகர் சன்மார்க்க நெறியில் நின்று இறைவனையே நாயகனாகக் கொண்டு காதல் புரிந்தவர். உடனிருக்கும் அன்பர்களைத் தோழியாக்கிப் பாடுகிறார். இறைவன் அணியும் கொன்றையை இந்த நாயகியார் சூடுகிறார்; அவனுடைய திருத்தோளைக் கூடுகிறார். முயங்கி மயங்கி நிற்கிறார். அவன் சிறிது புறக்கணிப்பது போலத் தோற்றினால் ஊடுகிறார். அவனுடைய திருவாய் மொழிக்கும் இதழூறலுக்கும் ஏங்கி நிற்கிறார். உள்ளுருகித் தேடுகிறார். அவன் கழலையே சிந்திக்கிறார், பாடுகிறார். அவன் அருள் பெற்று மலர்ச்சி பெறுகிறார். 'நம் கை வளை சிலம்பவும் காதில் உள்ள குழைகள் ஆடவும் குழல் புரளவும் தேன் பாயவும் வண்டு ஒலிப்பவும் அவனைப் பாடுவோம்' என்று தோழியரிடம் சொல்கிறார்.

சிவபெருமான் இந்த நிலவுலகத்துக்கு எழுந்தருளிக் குருநாதனாகக் கோலங்காட்டி மணிவாசகரை ஆட்கொண்டான். அந்தப் பரிசையெல்லாம் அவர் பாராட்டு

அந்தணனாய் வந்து அறை கூவி வீடருளினானும். பூதலத்தே போந்தருளிப் பிறப்பறுத்து ஆட்கொண்டான். அவர் கண் காண எளியனாக வந்து தன்னையே நாடும் பித்தை உண்டாக்கி மீட்டும் இவ்வுலகுக்கு வாரா வழியை அருளினான். அந்த வழி வானோர் அறியா வழி. ஆனையாய்ப் புழுவாய் மனிதனாய்த் தேவனாய்ப் பல பிறவிகளை எடுத்து இளைத்த அவரை ஆட்கொண்டு, ஊனை உருக்கி, வினைகளை ஓட்டி, தேனையும் பாலையும் கன்னலையும் போல இனிமை தந்து, தன் தொழும்பில் ஈடுபடுத்தினான் இறைவன். ஊனாய் உயிராய் உணர்வாய்க் கலந்தான். திருப்பெருந்துறைக்கு வந்து காத்திருந்து, அவரைக் கண்டு இரங்கி, பெருங் கருணையால் அவர் உள்ளே ஒளி திகழும்படி செய்து தண்ணளி வழங்கினான்.

இறைவன் தாய்போலத் தலையளி செய்து உடம்புக்குள் புகுந்து உரோமங்கள் சிலிர்ப்பெய்த, கல்லைப் பிசைந்து கனியாக்குவது போல அவரைப் பக்குவப்படுத்தி ஆனந்த வெள்ளத்தில் அழுத்தினான்; வினைகளைக் கடிந்தான்; தாள் தாமரையைக் காட்டித் தன் கருணைத்தேன் காட்டினான். அவர் பிச்சேறி நிற்றலை நாட்டினர் கண்டு நகையாட, அவர் யாவற்றுக்கும் மேலான வீட்டின்பத்தை அடையும்படி செய்தான்; அந்தமிலா ஆனந்தத்தை வழங்கினான்.

அவருக்காக இறைவன் குதிரையின்மேல் ஏறி வந்து, மண் சுமந்து கூலி கொண்டு, பாண்டியனால் அடிபட்டுப் புண் சுமந்தான்.

அவன் எழுந்தருளியிருக்கும் தலங்களைச் சொல்கிறார். தம்மை ஆட்கொண்டருளிய திருப்பெருந்துறையைப் பன்னிரண்டு இடங்களில் எடுத்துரைக்கிறார். அது பாண்டியனது ஆட்சிக்குள் இருந்தமையால் தென்னன் பெருந்துறை என்கிறார். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் சிறப்புக்களை உடைமையால் அது சீரார் பெருந்துறையாகிறது. அன்பர்கள் வந்து போற்றிப் பேணும் திருத்தலம் அது. அங்கே மதிலில் ஓவியங்களைத் தீட்டியிருக்கிறார்கள். கொத்துக் கொத்தாக

மாலைகளைப் போல மலர்கள் மலரும் பொழில்புடைசூழ்ந்தது அந்தத் தலம்.

பாண்டி நாட்டை, 'தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாடு' என்றும், 'தென்பாண்டி நாடு' என்றும் சொல்கிறார். அதைத் தன் திருவிளையாடல்களாலும் கருணையினாலும் இறைவன் சிவலோகமாகவே ஆக்குவித்தானாம். பாண்டி நாட்டில் உள்ள மதுரையை ஆரவாரம் மிக்கமையால் கலிமதுரை என்கிறார். சோழ நாட்டில் உள்ள தில்லைநகர் புக்குத் திருச்சிற்றம்பலத்தில் இறைவன் மன்னியிருக்கிறான். திருவையாற்றில் அமர்ந்திருக்கிறான். திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ளான். அண்ணாமலையிலும் விளங்குகிறான்.

இறைவனைப் பல திருநாமங்களைச் சொல்லிப் புகழ்கிறார். அங்கணன், அந்தணன், அப்பன், அம்மான், ஆள்வான், ஈசன், என் ஆனை, கடவுள், கோன், சிவன், சேவகன் என்றும், தத்துவன், தாயானவன், தென்னன் என்றும் சொல்கிறார். நாயகன், பிஞ்ஞகன், பெம்மான், பேராளன் என்றும், மறையான், மன்னன், மாதிருக்கும் பாதியன் என்றும், வித்தகன், வேதியன் என்றும் குறிக்கிறார்.

சில அருஞ்சொற்களை ஆளுகிறார். பிறவியைப் பிறவு என்றும், மன்னன் என்பதை மன்னன் என்றும், தொடர்பு என்பதைத் தொடர்வு என்றும் சொல்கிறார்.

மணிவாசகருடைய அன்பும், உருகும் தன்மையும், ஆனந்த அநுபவத்தால் உண்டான வியப்பும் இந்த இருபது பாடல்களிலும் விரவி நிற்கின்றன. திருவாசகத்தில் எந்தப் பகுதியிலும் இத்தகைய இயல்புகளைக்காணலாம். வெல்லப் பிள்ளையாரில் இனிக்காத பகுதி எது?

# பொருளடக்கம்


முன்னுரை ... iii

உள்ளுறைத் தொகுப்பு ... vii

1. அங்கருணை வார்கழல் ... 1
2. பித்துப் பிடிக்கச் செய்தவன் ... 10
3. சிந்தனையை உருக்குபவன் ... 20
4. அமுதின் தெளிவு ... 29
5. கருணை வெள்ளம் ... 38
6. கருணைத்தேன் ... 47
7. தாயான தத்துவன் ... 56
8. புண்சுமந்த பொன்மேனி ... 64
9. அந்தம் இலா ஆனந்தம் ... 74
10. தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான் ... 80
11. அப்பாலைக்கு அப்பால் ... 87
12. பிறவாமல் காப்பவன் ... 97
13. அன்பர்க்கு மெய்யான் ... 105
14. தொழும்பில் ஈடுபடுத்தியவன் ... 114
15. தக்கயாக சங்காரம் ... 122
16. வானோர் அறியா வழி ... 128
17. காதல் அநுபவம் ... 135
18. எளிவந்த பெருமான் ... 142
19. இன்னமுதை அன்னான் ... 149
20. பேரானந்தம் ... 156

# திரு அம்மானை

## 1. அங்கருணை வார்கழல்

மாணிக்கவாசகர் இறைவனிடம் ஆராத அன்பு கொண்டவர். உருகி உருகி அவனுடைய புகழைப் பாடுகிறவர். பெண்கள் கூடி விளையாடும் விளையாட்டுக்களைக் கண்ட பொழுதெல்லாம் அவரே பெண்ணாய் விடுவார். பெண்களோடு பெண்ணாகத் தம்மை உள்ளத்தளவிலே மாற்றிக்கொண்டு, சிவபெருமான் புகழைப் பாடிக் களிப்பார். அந்தப் பெண்களோடு சேர்ந்தே தம்மை மறந்து களித்துக் கூத்தாடியிருக்கவும் கூடும்.

பெண்கள் அம்மானை ஆடிப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். மூன்று அம்மானைக் காய்களைக் கொண்டு இரண்டு காய்களை இரண்டு கைகளிலும் மற்றொன்றை மேலும் இருக்கும்படியாக மாற்றி மாற்றி ஆடுகிறார்கள்; மிகவும் கவனமாக ஆடுகிறார்கள். அவர்கள் பாடும் போது சிவபெருமானுடைய புகழைப் பாடி ஆடுகிறார்கள். அவர்களில் ஒருவராக இருந்து பாடுகிறார் மணிவாசகர்.

இறைவனுடைய திருவடியை முதலில் நினைக்கிறார். அந்தப் பாதம் ஒரு காலைக்கு ஒரு கால் அழகு பொங்கித் ததும்புவது; அருள் நிரப்பிப் பொங்குவது; தாமரை

மலரைப் போலத் தண்மையும் செம்மையும் மலர்ச்சியும் மணமும் எழிலும் மென்மையும் நிரம்பிப் பொங்குவது; பொங்கும் மலர்ப்பாதம். அதனைக் காணவேண்டும் என்று தன் வலிமையிலே நம்பிக்கை கொண்டு திருமால் அதைத் தேடப் புகுந்தான். 'பாதாளம் ஏழினும் கீழ்ச் சொற்கழிவாக' உள்ள அதைக் கீழே சென்று காணலாம் என்று நினைத்தான். பன்றி வடிவம் எடுத்துப் பூமியைத் தோண்டி அகழ்ந்து சென்று பார்க்க முயன்றான். போகப் போகப் பாதம் இருக்கும் இடம் தெரியவில்லை. எல்லாப் பொருளையும் கண்டுவிடும் ஆற்றலை உடைய செம்மையான கண்ணை உடையவன் அவன். முயன்று தேடிச் செல்லச் செல்ல அந்தக் கண்கள் பின்னும் சிவப்பை அடைந்தன. அப்படிச் சென்று இடந்தும் அவனால் காணமுடியவில்லை. காணவேண்டும் என்ற அன்பும் ஆர்வமும் கொண்டு நாடியிருந்தால் அதைக் கண்டிருக்கலாம். கண்டு விடுவோம் என்ற ஆணவமுனைப்போடு, தன் வலிமையிலே நம்பிக்கை கொண்டு முயன்றதனால் அதனைக் காண முடியவில்லை.

**செங்கண் நெடுமாலும் சென்று இடந்தும் காண்பரிய**
**பொங்கும் மலர்ப்பாதம்**

நாமாக முயன்று அதைக் கண்டு விடலாம் என்ற ஆணவ முனைப்பு இருக்கும் வரையிலும் அந்தத் திருவடி தட்டுப்படாது. இந்த உண்மையை உலகத்துக்குக் காட்டவே இந்தத் திருவிளையாடல் நடைபெற்றது.

அத்தகைய திருப்பாதம் அடியவர்களுக்கு எளிதாக இருக்கிறது. அன்பினால் உருகும் அடியவர்கள் அதைத் தேடிச் செல்வதில்லை. அடியவர்களைத் தேடிக் கொண்டு அதுவே செல்கிறது.

யாரும் காண்பதற்கரிய அந்தத் திருப்பாதம் அடியவர்களுக்கு அருள் செய்து அவர்களுக்குத் தன்னைக்

கொடுப்பதற்கு விரைகிறது. அடியவர்கள் வாழும் இந்தப் பூதலத்துக்கே வந்தருள்கிறது. இறைவன் தன் அடியார்களுக்குத் தன் திருவடி இன்பத்தை வழங்க இங்கே வருகிறான்.

**பொங்கும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளி.**

'நம்முடைய திருவடியைக் காணுவதற்கு இவர்கள் அன்பினால் ஏங்கித் தவிக்கிறார்களே! இவர்களுக்கு அருள் வழங்கவேண்டும்' என்று திருவுள்ளம் கொண்டு அவன் இங்கே போந்தருள்கிறான்.

இறைவனுடைய திருவடி பிறப்பை அறுக்கும் திருவடி.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்பார் திருவள்ளுவர். இறைவன் அடியைச் சேர்ந்தால் பிறப்பு அற்றுவிடும். இறைவன் திருவடியைத் தேடிச் சென்று அடைய முடியாது. ஆனாலும் அவன் அதனைத் தன் அடியார்களுக்குக் காட்டத் தானே நிலத்தில் அடி பதிய வந்து அவர்களை ஆட்கொள்கிறான். வானின்று இழிந்து மழை பொழிந்து குளத்தில் தேங்குவதைப் போல, அந்த அடி அடியார்களிடம் வந்து தங்கி அவர்களுடைய பிறப்பை அறுத்து ஆட்கொண்டருள்கிறது.

மழை பெய்யும் போது, இன்னபடி இருந்தால்தான் நீர் அங்கே பொழியும் என்று இல்லை. சிறிய பள்ளமானாலும் பெரிய குளமானாலும் அது நீரைப் பொழிகிறது. இறைவனும் அப்படியே அருள் மழையைப் பெய்கிறான். இது அழுக்கு நிரம்பிய பள்ளமாயிற்றே என்று மழை நினைப்பதில்லை. அடியார்கள் தம் தகுதி உயர்ந்ததென்று எண்ணமாட்டார்கள். இறைவன், தம் தகுதி போதாமல் இருந்தாலும், அதனைக் கருதாமல் கருணையை வழங்கு

இருனை என்று எண்ணி அவனுடைய பெருந் தன்மையைப் பாராட்டுவார்கள்; 'எம்முடைய தகுதியில்லாத சிறிய இயல்பைக் கருதாமல் ஆட்கொண்டான்' என்று உருகிப் போவார்கள்.

**எங்கள் பிறப்பு அறுக்கிட்டு**
**எம் தரமும் ஆட்கொண்டு.**

'எங்கள் அற்பமான தரத்திற்காகக் கூட அவன் ஆட்கொண்டானே!' என்று அதிசயம் கொண்டு அவன் பெருங்கருணையைப் போற்றுவது அடியவர்களின் இயல்பு.

இவ்வாறு ஆட்கொண்டவன் யார்? திருப்பெருந் துறையில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனே இத்தகைய அருளைப் பாலித்தான். பாண்டி நாட்டில் உள்ள திருத்தலம் அது. சிவபெருமான் தென்னாட்டைத் தன் இராசதானியாகக் கொண்டு சர்வலோகங்களையும் ஆளுகின்றவன். அவன் **தென்னன்.** தென்னாட்டில் திருப்பெருந்துறையையே தன் திருமாளிகை உள்ள நகரமாகக் கொண்டு எழுந்தருளி யிருக்கிறான். அந்த நகர் எங்கும் எழில் கொழித்து விளங்கு கிறது. எங்கே பார்த்தாலும் தென்னமரங்கள் அடர்ந்து வளர்ந்த சோலைகளைக் காணலாம. வானை நோக்கி நிமிர்ந்து வளர்வது தென்னமரம். இறைவன் எழுந்தருளிய திருநகரில் நாம் வளர்கிறோம் என்ற விண்ணுணர்த்தோடு தென்னமரங்கள் வளர்ந்துள்ளன. இறைவனுக்கு அபிஷேகத்துக்கு இளநீரும் நிவேதனத்துக்குத் தேங்காயும் தரும் மாண்பு படைத்திருக்கிறோம் என்ற பெருமிதத் தோடு அவை வளர்ந்தோங்கி நிற்கின்றன.

**தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்.**

ஊருக்குள் புகும்போதே அதன் வளத்தை இந்தத் தென்னஞ் சோலை காட்டிவிடுகிறது. நெஞ்சு குளிர்ந்த அன்பர்கள் வாழும் இடமாதலின் அங்கே நிலமும் குளிர்ந்

திருக்கிறது. அதனால் தென்னஞ்சோலை வளமாக வளர்கிறது. அடியார்கள் அருள் நீர் பருக வரும் பெரிய துறை அது. கடற்கரையில் தென்னமரங்கள் செழித்து வளரும். அருட்கடலாகிய சிவபெருமான் எழுந்தருளும் இந்தப் பெருந்துறையில் தென்னமரங்களை அடர்ந்து ஓங்கி வளரும் போது, அடியவர்கள் திரண்டு வந்து இறைவனுடைய அருளைப் பெறுவதில் ஆச்சரியம் இல்லை.

நல்ல இடம் கண்டு இராசதானி நகரை அமைத்துக் கொள்ளும் மன்னனைப் போல, இறைவனாகிய தென்னன் இங்கே வந்து தன் தலைநகரை அமைத்துக் கொண்டிருக்கிறான். தான வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைத்துக் கொள்ளவில்லை. தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு, எளிதில அருளை வழங்க வேண்டும் என்பதற்காகவே இங்கே நித்திய வாசம் செய்கிறான்.

அவன் அடியார்களின தரத்தை நோக்கித்தான் ஆட்கொள்ளுகிறான் ஆனால் அடியார்கள் அப்படி எண்ணுவதில்லை. 'எமக்கு என்ன தகுதி இருக்கிறது? அன்பர்களுக்குள் மிகமிகக் கீழ்த்தரத்தில் இருபபவர்கள் நாஙகள். ஆயினும் இந்தத் தாழ்வான தரத்தைப் பொருட்படுத்தாமல் எம்முடைய சிறிய தகுதிக்கும் அவனுடைய அருள் கிடைக்கிறது. எம் தரத்துககும அவன் வந்து ஆட்கொள்கிறான்' என்று விம்மிதம் அடைகிறார்கள்.

அவன் அந்தணனாக எழுந்தருளுகிறான். அருள் கொப்புளிக்கும் அழகிய கண்மேனோடு வருகிறான். பொறிக்கும் அறிவுக்கும் எட்டாத அவன் அந்தண்மையுடையவனாக அடியார் கண் காண இங்கே எழுந்தருளுகிறான். இதுவே பெருங்கருணை. இதைவிடப் பெருங்கருணை ஒன்று உண்டு. அடியார்கள் தன்னைத் தேடிக்கொண்டு அலையாதபடி அவர்களை அழைக்கிறான். "இங்கே வாருங்கள். நான் உங்

களுக்காகக் காத்திருக்கிறேன்" என்று அறைகூவுகிறான். அன்னதானம் செய்கிறவர்கள் முரசடித்துப் பசியுடைய வர்களை அழைப்பது போலே அவன் அறைகூவுகிறான். என்ன முரசடித்தாலும் செவிடர்கள் காதில் விழாது. இறைவனிடம் அன்பில்லாதவர்களுக்கு அவன் அறை கூவுவது தெரியாது.

இவ்வாறு அறை கூவித் தன்பால் வந்த பேரன்பர் களுக்கு அவன் வீட்டைத் தந்தருளுகிறான். கால மெல்லாம் அலேந்து, இறைவன் திருவருள் கிடைக்குமோ என்று ஏங்கி, அலமந்து வாழும் அன்பர்களுக்கு அவன் அறை கூவல் கேட்கிறது. தன்னை விட்டுப் பிரிந்த அன்னையைத் தேடும் குழந்தை நாடித் தேடி, அவள் அழைக்கும் குரலை இனமறிந்து கொண்டு ஓடிச் செல்வதைப் போலே, அடி யார்கள் வருகிறார்கள். "இனி நீங்கள் தேடி அலேய வேண்டாம்; சுகமாக இந்த வீட்டில் இருந்து வாழுங்கள்" என்று அவர்கள் என்றும் இன்புற்று வாழும் வீட்டைத் தந்தருள்கிறான்.

"ஒருபூ தரும்அறி யாத்தனி வீட்டில் உரைஉணர்வற்று
இருபூத வீட்டில் இராமல்என்றான்"

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

அருட் பெருக்கால் இறைவன் அந்தணனாக இங்கே எழுந்தருளி வந்து, அன்பர்களை வாருங்கள் என்று கூவி அழைத்து வீட்டை அருள்கிறான். இந்தக் கருணையை எவ்வாறு அளவிடுவது! அவன் தன் திருவடியையே வீடாகக் காட்டுகிறான். அது உயிர்க் கூட்டங்களுக்குத் துன்பம் தரும் பகையாகிய பாசத்தை அறுத்து வெற்றி நடைபோடுவது. அதற்கு அடையாளமாகக் கழலை அணிந் திருக்கிறது. அந்தத் திருவடிதானே இங்கே எழுந்தருளி

நலம் செய்கிறது? அதன் கருணை நீண்டது. அது வார்கழல்.

'அந்தக் கழலணிந்த அடியைப் பாடுவோம்; அம்மானை ஆடுவோம்' என்று மகளிரோடு சேர்ந்து பாடுகிறார் மணிவாசகப் பெருமான்.

செங்கண் நெடுமாலும் சென்று இடந்தும் காண்பரிய
பொங்கும் மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்புஅறுத்திட்டு, எம்தரமும் ஆட்கொண்டு,
தெங்கு திரளசோலைத் தென்னன், பெருந்துறையான்,
அங்கணன், அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அம்கருணை வார்கழலே பாடுதுங்காண், அம்மானாய்!

* அம்மானை ஆடும் பெண்ணே, தென்னமரங்கள் அடர்ந்து செறிந்த சோலைகளையுடைய தென்னாட்டில் உள்ள சிவபெருமான், திருப்பெருந் துறையில் நித்திய வாசம் செய்பவன், சிவப்பையுடைய கண்ணைப் பெற்ற நெடிய திருமாலும் சென்று நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் காண்பதற்கரியதும், அருள் பொங்குவது மாகிய தாமரை மலரைப் போன்ற திருவடி பூமியில் பட நடந்து வந்து அருளி, எங்கள் பிறப்பை அறுத்துவிட்டு, எம்முடைய் தாழ்ந்த தகுதிக்கும் உரியவனாக வந்து எங்களை அடிமையாகக் கொண்டு, அழகிய கண்ணை உடையவனாகவும், அந்தணனாகவும் கோலம் காட்டி, வலிய அழைத்து எங்களுக்கு வீட்டை அருள் செய்கின்ற அழகிய கருணையை உடைய நீண்ட அந்தத் திருவடிகளை நாம் பாடுவோம்.*

[காண்பதற்கு ஏற்ற தகுதியுடைய செங்கண்ணை உடையவனாக இருந்தும் அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. கண் இருந்தும், காணவேண்டும் என்ற அன்புத் துடிப்புள்ள கருத்து இன்மையால் காண முடியவில்லை. நின்றவாறே எல்லாவற்றையும் கணிசிக்கும் அவன்

மூயன்று இடந்தும் காண்பரிய பாதம் இறைவன் திருவடி. எங்கள் - ஒன்றுக்கும் பற்றாத அடியேங்களுடைய - தரம். தகுதி; தரமுப்-தரத்துக்கும். தெங்கு-தென்னை. அங்கணன்- அருள் வழங்குவதனால் அழகு பெற்ற கண்; வள்ளல்கள் பிறருக்குக் கொடுப்பதனால் மகிழ்ச்சி அடைவது போல மகிழ்ந்து, அந்த உவகையால் மதர்த்த கண்கள்; 'ஈத்துவக்கும் இன்பம்' பெற்ற கண்கள். அந்தணனாக எழுந்தருளும் இயல்பு சிவபெருமானுக்குரியது. அவன் அநாதி அந்தணன். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணன் அவன். குழந்தைகள் தன்னை எங்கே தேடி அலைகிறார்களோ என்று எண்ணிக் குரல் கொடுக்கும் அன்னையைப் போல அறைகூவுகிறான். அவன் செயலே ஆனாலும் அவனுடைய திருவடியின் செயலாகச் சொன்னார்; உபசார வழக்கு. வள்ளலின் கையைச் சிறப்பிப்பது போல அடியைச் சிறப்பித்தார். பல காலமாக அருளை வழங்கிக் காலத்தாலும், அடியார் இருக்குமிடம் தேடிச் செல்லும் நெடுமையை உடையதாகி வடிவத்தாலும் வார்ந்த கழல் அது.

தனித்தனியே பாடுவதைவிட அன்புடையோர் யாவரும் கூடிப் பாடினால் அவன் பின்னும் இரங்கி அருள் செய்வான்.

இடந்தும்: உம்மை, உயர்வு சிறப்பு. காண்பு அரிய- காணுதற்கு அரிய. எங்கள் என்றது எல்லா அடியார்களையும் சேர்த்துச் சொன்ன உளப்பாட்டுப் பன்மை. தரமும்: உம்மை, இழிவுசிறப்பு. திரள் என்பதற்குக் காய்கள் திரண்டு காய்க்கின்ற என்று பொருள் கொள்ளலும் ஆம். தென்னன் என்பது நாட்டையும், பெருந்துறையான் என்பது நகரையும் குறித்தவை. நாட்டை அடைமொழிகளால் சிறப்பித்தவர் ஊரைச் சிறப்பிக்கவில்லை, பெருந்துறை என்ற பெயரே போதுமாக இருக்க அதற்கு வேறு

அடை ஒன்றும் வேண்டியதில்லை. கண்ணுக்கு அழகு அருள்; "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" (திருக்குறள்). அறை கூவி எங்கோ செல்லும் எங்கள் காதிலும் விழும்படி உரக்கக் கூவி, வீடிருக்கும் இடம் தேடி அலையும் வருத்தமின்றி, எளிதில் அடையும்படி தானே அழைத்து அருளும் பெருங்கருணையாளன் இறைவன்.

அம்கழல், கருணைக் கழல், வார்கழல் என்று சிறப்புக்களைக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். காண்பதற்கு அழகியதாகவும், அணுகினால் கருணையை வழங்குவதாகவும், அன்பருள்ள இடத்தே சென்று நலம் செய்வதாகவும் இருப்பதால், 'அங்கருணை வார்கழல்' என்றார்.]

திருவாசகத்தில் திரு அம்மானை என்ற பதிகத்தில் உள்ள முதற்பாட்டு இது.

# 2. பித்துப் பிடிக்கச் செய்தவன்

இறைவன் தமக்கு அருள் புரிந்த செயலை எண்ணி எண்ணி விம்மிதமுற்று உருகுபவர் மாணிக்கவாசகர். தகுதியுள்ள அன்பர்கள் பலர் இருக்கவும் சிறிதேனும் தகுதியில்லாத நம்மை அவன் ஆட்கொண்டான் என்று அடிக்கடி சொல்வார். பெரியவர்கள் இப்படித்தான் நினைப்பார்கள். சிறியவர்களோ தாம் பெறவேண்டியதைப் பெறவில்லையே என்று ஏங்குவார்கள். தாம் ஏதோ பெரிய பக்தி உடையவர்களைப் போலவும், அரிய சாதனைகளைச் சாதித்து விட்டவர்களைப் போலவும் இறுமாந்து, தம் தகுதிக்கு ஏற்ற பதவி கிடைக்கவில்லையே, மதிப்பை உலகத்தார் தரவில்லையே என்று எண்ணி எண்ணி மனம் குலைவார்கள்.

தாம் செய்தது சிறிதென்றும் பெற்றது பெரிதென்றும் உத்தம அடியார்கள் எண்ணியிருக்க, தாம் செய்த அளவுக்குத் தமக்கு இறைவன் தக்கபடி பலன் கொடுக்கவில்லை என்று பூரியர் நினைப்பார்கள். பூரியர்கள் அவ்வாறு எண்ணுவது அகந்தையின் விளைவு. அகங்கார மமகாரங்களை அடியோடு விட்டொழித்த அன்பர்கள் தாம் பெற்ற சிறிய நலனையும் பெரிதாக எண்ணி, இறைவன் பெருங்கருணை கொண்டு தமக்கு நன்மை செய்தான் என்று உருகுவார்கள். இந்த இயல்பின் தலைநிலத்தில் இருப்பவர் மணிவாசகர். நாம் எல்லாம் அவரை, "அறிவாற் சிவனே

என்பது திண்ணம்" என்று பாராட்ட அவரோ தம்மை, "நாயினும் கடையேன்", "புழுத்தலைப் புலையனேன்" என்று சொல்லிக் கொள்கிறார்.

இறைவன் திருவருள் கிடைத்தற்கு எத்தனை அருமை என்பதை அவர் நன்கு உணர்ந்தவர். அவனுடைய திருவருளைப் பெறுவதற்காக ஏங்கித் தவித்து நிற்பவர் பலர் என்ற எண்ணம் அவருக்கு எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். வாசலில் ஆயிரம் பிச்சைக்காரர்கள் காத்து நிற்கவும் ஓர் அன்னதாதா கடைக் கோடியில் நிற்கும் ஒருவனை அழைத்துச் சென்று உணவு அருந்தினால் அவனுக்கு எத்தகைய உணர்ச்சியிருக்குமோ அத்தகைய உணர்ச்சியை உடையவர் மணிவாசகப்பெருமான்.

இறைவன் தமக்கு எளியனாக இருக்கும் தன்மையை எண்ணுகிறார். அதன் பெருமையை நன்கு உணர அவர் ஒப்பு நோக்கிப் பார்க்கிறார். எத்தனை பேருக்கு அவன் அரியவனாக இருக்கிறான்! ஒருவரா, இருவரா? பெரும் பான்மையோர் அவன் அருளைப் பெறாமல் இருக்கிறார்கள். அவன் அருளென்னும் தண்ணீர் பாயாத பாலை நிலமாகவே உலகம் முழுவதும் காட்சி அளிக்கிறது. அதனிடையே தாம் மட்டும் பசுஞ்சோலையாகத் திகழ்வது போல நினைக்கிறார். அதனால் அவர் அகங்காரம் கொள்ளவில்லை; இறைவனுடைய கருணை மிகுதியையே எண்ண அந்த ஒப்பு நோக்குப் பயன்படுகிறது.

இவ்வுலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் இறைவன் காணுவதற்கு அரியவனாக இருக்கிறான். உலகில் தோன்றிய மணிவாசகர் தம்முடன் உலக வாழ்வில் உள்ள யாவரையும் பார்க்கிறார். பாரோரால் காண்டற்கு அரியானாக இருக்கிறான் இறைவன் என்பதை உணர்கிறார்.

**பாரார்...ஆராலும் காண்டற்கு அரியான்.**

இனி, தேவர்களாவது அவனைக் கண்டு மகிழ்கிறார்களா? நம்மைவிட உயர்ந்த இடத்தில் இருப்பவர்களாயிற்றே! போகம் நிறைந்த அவர்களுக்குத் தம் பதவிக்குமேலே ஒன்று இருக்கிறதே என்று தெரிவதில்லை. அவர்கள் இறுமாப்புடன் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பூவுலகத்தில் உள்ளவர்களைப் பார்த்து, 'நாம் உயர்ந்த நிலையில் இருக்கிறோம்' என்ற செருக்குடன் இருக்கிறார்கள். அதனால் அவர்களாலும் காணுவதற்கு அரியவனாக இருக்கிறான் இறைவன். வானத்தில் சந்திரன் ஒளிரும் போது கூனிக் குறுகித் தரையைப் பார்க்கிறவனுக்குச் சந்திரன் தெரிவானா?

**விசும்புள்ளார்... ஆராலும் காண்டற்கு அரியான்.**

உலகங்களை மூன்று வகையாகப் பிரித்துச் சொல்வார்கள். அந்தர் மத்திய பாதலம் என்பவை திரிபுவனங்கள். இவற்றை, "முப்புணர் அடுக்கு" என்று தமிழில் சொல்வார்கள். வானில் உள்ளவர்கள் காண்பதற்கு அரியவனாகிய ஆண்டவனைப் பாதாளத்தில் உள்ள நாகர் முதலியவர்கள் காண்பதுண்டா எனின், அவர்களும் காண்டற்கு அரியவன் அவன்.

**பாதாளத்தார் ... ஆராலும் காண்டற்கு அரியான்.**

புவனங்கள் எத்தனையோ உண்டு. தேவலோகம், பூலோகம், பாதாளலோகம் ஆகியவற்றுக்கு அப்பாலே கணக்கில்லாத புவனங்கள் இருக்கின்றன. சதுர்த்தச புவனங்கள் என்பது ஒரு கணக்கு. இவற்றையன்றி வேறு வேறு புவனங்களும் பல உண்டு. அந்தப் புவனங்களில் வித்தியேசுவரர் முதலியவர்கள் இருக்கிறார்கள். அவர்

களாவது அவனைக் கண்டார்களா எனின் அவர்களும் காண்டற்கு அரியவனாக அவன் இருக்கிறான்.

**புறத்தார் ஆராலும் காண்டற்கு அரியான்.**

இத்தகைய அருமைப்பாடுடையவன், யாருமே காண்டற்கு அரியவனாக இருப்பானானால், இறைவன் என்று ஒருவன் இருக்கிறானா என்ற ஐயமே நமக்கு உண்டாகி விடும். யாருமே காணமுடியாத, உணர முடியாத, ஒரு பொருள் இருக்கிறதென்பதற்கு என்ன சாட்சி? ஆகாசத் தாமரை யாரும் கண்டதில்லை. அப்படி ஒன்று இல்லாத தனால் யாரும் காண்பதில்லை. அவ்வண்ணமே ஆராலும் காண்பதற்கரியவனாக இறைவன் இருக்கிறான் என்றால், அவன் வெறும் கற்பனைப் பொருள் என்றே நினைக்கத் தோன்றும்.

அவன் அப்படி இல்லை. அவனைச் சிலர் காண்கிறார்கள். இராமகிருஷ்ண-பரமஹம்ஸர், "கடவுளைக் கண்டீரா?" என்று கேட்ட நரேந்திரருக்கு "குழந்தாய்; நான் கண்டேன்; உனக்கும் காட்டுவேன்" என்று உறுதி அளித்தார். அடியவர்கள் அவனைக் காண்பார்கள். மற்றவர் களுக்கெல்லாம் அரியவனாக இருக்கும் அவன் உண்மை யான அன்பர்களுக்குக் காண்பதற்கு எளியவனாக இருக்கிறான். "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்று அப்பர் முழங்குவது போல அடியார்களை முழங்கச் செய்கிறவன் இறைவன்.

அப்படிச் சிலருக்கு எளியவனாக இருப்பதனால் அவனுடைய பெருமை சுருங்குவதில்லை. நாட்டில் பலரும் அறியும் ஒருவரைப் பெரியவர் என்றும், தலைவர் என்றும் சொல்கிறோம். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான மக்களுக்குத் தெரிந்தவராக இருக்கிறாரோ அவ்வளவுக்கு, அவ்வளவு அவர் பெரிய தலைவர் என்று போற்றப்படுவார்.

இறைவன் பெரும்பான்மையானவர்கள் காண்பதற்கு அரியவன். மிகச் சிலரே அவனைக் காண்கிறார்கள். என்றால் அவன் எப்படிப் பெருமையை உடையவன் ஆவான்? இதைச் சற்றே சிந்திக்கவேண்டும்.

உலகத்தில் உள்ள மலைகள் எல்லாவற்றிலும் உயர்ந்தது இமயமலை. அதன் உச்சியில் பல சிகரங்கள் உள்ளன. எவரெஸ்ட் என்ற சிகரம் எல்லாவற்றையும்விட உயர்ந்தது. அது மிக்க பெருமை பெற்றது. அதை எத்தனை பேர் போய்ப் பார்த்திருக்கிறார்கள்? மிக மிகச் சிலரே அதனைப் பார்த்தவர்கள் பல பேருக்குத் தெரியாமையினால் அதன் பெருமை குன்றிவிட்டதா? அது பெருமையில் நிமிர்ந்து நிற்கிறது. இறைவனும் அத்தகையவனே. பலரும் காணற்கு அரியவனாக இருப்பதனால் அவன் பெருமை மிகுகிறதேயொழியக் குறைவதில்லை.

**ஆராலும் காண்டற்கு அரியான்; எமக்கு எளிய பேராளன்.**

அவனுடைய விலாசம் என்ன? அவன் தென்னாட்டைத் தன்னுடைய சொந்த நாடாகக் கொண்டிருக்கிறான். எல்லா உலகங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் அவன் இறைவனாக இருந்தாலும், அடிக்கடி தொண்டர்கள் வந்து காணும்படி தென்னாட்டில் இருக்கிறான்.

"தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!"

என்று மணிவாசகரே போற்றியிருக்கிறார் அல்லவா?

அந்த நாட்டில் அவன் இராசதானியாக இருக்கிறது திருப்பெருந்துறை. இதை முன்பாட்டிலும் சொன்னார்.

**பேராளன், தென்னன், பெருந்துறையான்.**

அவன் மணிவாசகரை ஆட்கொண்டான். அவர் அமைச்சராக இருந்தவர். பெரிய பதவியை உடைய அரசனோடு பழகியவர். உலகப்பொருள்களினூடே வாழ்ந்து வந்தவர். அவரை ஆண்டவன் ஆட்கொண்டான். இப்போது அவருக்கு வேறு எந்தப் பொருளிலும் நாட்டம் இல்லை. எப்போதும் சிவனே, சிவனே என்று ஓலமிடுகிறார். எதைக் கண்டாலும் சிவபெருமானுடைய நினைவே எழுகிறது. உணவிலும், உடையிலும், நீரிலும், பாரிலும் அவருக்குச் சிவபெருமானே காட்சியளிக்கிறான். எதைக் கண்டாலும் சிவமயமாக இருக்கிறது. அவருக்குச் சிவப்பித்துத் தலைக்கு ஏறிவிட்டது. ஊரார் எல்லாம் அவரைக் கண்டு நகைக்கிறார்கள். பைத்தியம் பிடித்தவர்களைக் கண்டு உலகம் நகைப்பது இயல்புதானே?

"நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப"

என்று வேறோரிடத்தில் அவர் பாடுகிறார். அவர் போகும் போது, "அதோ பைத்தியம் போகிறது" என்று ஊரவர் எண்ணி நகைக்கிறார்கள். அவர்கள் கூறும் இழிப்புரையை அவர் சட்டை செய்வதில்லை. அவர்கள் பழிக்கப் பழிக்க அவருடைய பித்து அதிகமாகிறது. அவர்கள் கூறும் பழிப்பையெல்லாம் தம்முடைய அணிகலனாக ஏற்றுக் கொள்கிறார்.

"நாடவர் பழித்துரை பூணதுவாக"

என்று அவரே சொல்கிறார். பிறர் பழித்து ஒதுக்கும் கந்தைகளையும் ஓட்டை உடைசல்களையும் சேர்த்து அணியும் பைத்தியக்காரரைப் போல அவர் இருக்கிறார்.

இத்தகைய பித்தை இறைவனே அவரிடம் உண்டாகப் பண்ணினான்; அவரைப் பித்தராக அடித்துவிட்டான்; பைத்தியத்தன்மையை அவரிடம் ஏற்றிவிட்டான்; டாக்டர் இஞ்செக்ஷன் போடுவதைப் போல ஏற்றிவிட்டான்.

**தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி.**

*[பிச்சு—பித்து.]*

உலகத்தில் பித்துப் பிடித்தவர்களுக்கு ஊரவர் பழி மட்டுமா உண்டாகிறது? அவர்களுக்கு எத்தகைய இன்பமும் கிட்டுவதில்லை. அவர்கள் அவப்பித்துப் பிடித்தவர்கள். அடியவர்களோ சிவப்பித்துப் பிடித்தவர்கள். உலகத்தவர்போல் நடவாமையினாலும், பழியைக் கருதாமையினாலும், ஒன்றையே சொல்லிக் கொண்டிருப்பதனாலும் அவர்கள் பித்தராக இருக்கிறார்கள். ஆனால் இந்தப் பித்தினால் அவர்களுக்குப் பெறற்கரிய பேறு கிடைக்கிறது. பெரும்பித்தனைப் பற்றிக் கொண்ட பித்தர்கள் அவர்கள்.

தமக்குப் பித்தை ஏற்றியதனால் விளைந்த நன்மையைச் சொல்கிறார் மணிவாசகர். இந்த உலகில் மிக்க அறிவுடைத்து, தெளிவான நிலையில் இருப்பதாகத் தம்மை நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் இறந்தும் பிறந்தும் திரிந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் சிவப்பித்தேறியவர்கள் இனி இந்த உலகத்தில் வந்து பிறக்க மாட்டார்கள். அந்தப் பித்தர்களுக்கு மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராத நிலையை இறைவன் அருள்வான். பித்தை ஏற்றுகிறவனும் அவனே; அதன் பயனாக வாரா வழியை அருள்பவனும் அவன்தான்.

**பிச்சேற்றி வாரா வழிஅருளி.**

இனிமேல் இந்த உலகத்தில் பிறவாத பேறு அவர்களுக்குக் கிடைக்கிறது. இது எதிர்காலத்தில் உண்டாகப் போகும் பயன். இப்போது என்ன கிடைக்கிறது? இறைவனே எழுந்தருளி வந்து அவர்களுடைய உள்ளத்தில் குடிபுகுகிறான்.

**வாரா வழிஅருளி, வந்து என் உளம்புகுந்த.**

அவன் உளம் புகுந்ததனால் அவர்களுக்கு இப்போதே இணையில்லாத இன்பம் கிடைத்து விடுகிறது. அமுதத்தை உண்டாரைப் போலப் பேரானந்தப் பெருவாழ்வில் இருக்கிறார்கள். அவன் அமுதாய் இருக்கிறான்; உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதமாக அவன் இருக்கிறான்.

**ஆரா அமுதாய்.**

ஆர்தல்-நிறைவு பெற்றுத் தெவிட்டுதல்; இதோடு போதும் என்ற உணர்வை உண்டாக்குதல். ஆரா-அந்த உணர்ச்சியை உண்டாக்காமல் ஒருகாலைக் கொருகால் இனிமை தந்து, தெவிட்டாமல் உள்ள.

இறைவனுக்கு அன்பர்களிடம் பெருங்காதல் இருக்கிறது. அன்பர்கள் அவனிடம் வைக்கும் அன்பைக் காட்டிலும் அவர்களிடம் அவனுக்கு உள்ள அன்பு மிகமிகப் பெரிது.

" தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி"

என்று மணிவாசகரே பாடுவார். அன்பர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று அவன் தேடுகிறான். அலை நிரம்பிய கடலில் வலைபோட்டு மீனைப் பிடிப்பவனைப் போல அவன் இருக்கிறான். பிரபஞ்ச மென்னும் விரிந்த இடத்தில் அன்பர்கள் சிலபேர்தாம் இருப்பார்கள். இறைவன் தன் அருள் வலையை வீசி அந்த மீன்களைப் பிடிக்க வருகிறானும். அந்த மீன்களைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை அவனுக்கு அதிகமாக இருக்கிறது. தலையில் பெருஞ்சுமையைச் சுமப்பவன், யாரேனும் அதை வாங்கிக் கொள்ளமாட்டார்களா என்று ஏங்கியிருப்பது போல, அவன் அருளைச் சுமந்து கொண்டு நிற்கிறான்; அதை வாங்கிக் கொள்வார்களைத்

தேடி அலைகிறான். அன்பர்களுக்கு அருளை வழங்க வேண்டும் என்று அவனுக்கு உள்ள விருப்பம் சாமானியம் அன்று; அது பேராசை; அது கடல் போல விரிந்தது; அவன் பேராசையில் கடலைப் போல இருக்கிறான்.

**அலைகடல்வாய் மீன்விசிறும் பேராசை வாரியனை.**

குழந்தைக்குப் பால் கொடுக்காமல் இருக்கும் தாய்க்குப் பால் கட்டிக்கொண்டு வேதனை உண்டாகும். எப்படியாவது குழந்தையைப் பிடித்து வந்து பாலை ஊட்ட வேண்டும் என்று தவிப்பாள். ஆண்டவன் அப்படித் தவிக்கிறவன். "அவனை நாம் பாடுவோம்" என்று பெண்களோடு சேர்ந்து அம்மானை ஆடுகிறார் மணிவாசகர்.

**பேராசை வாரியனைப் பாடுதுங்காண், அம்மானாய்!**

அம்மானை ஆடும் பெண்கள் ஒவ்வொரு பாட்டிலும் அம்மானை என்றோ அம்மானாய் என்றோ சொல்லி முடிப்பது வழக்கம். அம்மானாய் என்பதற்கு அம்மானை ஆடும் பெண்ணே என்று பொருள் கொள்ளலாம்.

**பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்**
**ஆராலும் காண்டற்கு அரியான், எமக்குஎளிய**
**பேராளன், தென்னன், பெருந்துறையான், பிச்சுஏற்றி**
**வாரா வழிஅருளி, வந்துஎன் உளம்புகுந்த**
**ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்**
**பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

* அம்மானை ஆடும் பெண்ணே, நிலவுலகில் உள்ளவர்கள், தேவலோகத்தில் உள்ளவர்கள், பாதாள லோகத்தில் உள்ளவர்கள் ஆராலும் தரிசனம் செய்வதற்கு அரியவன், அடியார்களாகிய எமக்கு எளியனாக உள்ள பெருமையை உடையவன், தென்னாட்டைத் தன் நாடாக்கிக்கொண்டவன், திருப்பெருந்துறையில் நித்திய வாசம் செய்கிறவன், என்னைத் தன்பால் பித்துக்

கொள்ளும்படி ஆக்கி, அதன்பயனாக இனி இந்த உலகத்தில் பிறந்து வாராத மார்க்கத்தை அருள் செய்து, இப்போது வந்து என் உள்ளத்தில் புகுந்தவன், தெவிட்டாத அமுத மாய் இருப்பவன், அலைகின்ற கடலில் மீனுக்காக வலைவீசு பவனைப் போல அடியவர்களைத் தேடிச் செல்லும் பேராசை கடலைப் போலக் கொண்டவனாகிய சிவபெரு மானைப் பாடுவோம்.*

புறத்தார் ஆகிய ஆராலும். எமக்கு என்றது மற்ற அடியார்களையும் உளப்படுத்தியது; இறைவனால் ஆட் கொள்ளப் பெற்ற பெருமிதத்தால் பன்மையாகச் சொன்ன தாகவும் கொள்ளலாம். பேராளன்-பெரியவன், புகழை உடையவன். தென்னன்-தென்னாட்டைத் தன் நாற்றங் காலாகக் கொண்டவன்; பாண்டியனாக வந்தவன் என்றும் பொருள்கொள்ளலாம். வாராவழி-இந்த உலகத்தில் மீட்டும் பிறந்து வாராத நெறியை. உளம்புகுந்த வாரியனை என்று கூட்டுக. அலைகடல்வாய் - அலைகின்ற கடலினிடத்தே. மீன் விசிறும்-மீனுக்காக வலையை வீசும்; வலை என்ற சொல்லை வருவித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

பேராசையாகிய கடலை உடையவனை; ஆசை கடல் போல எல்லையிறந்ததாக இருக்கிறது. பாடுதும்-பாடு வோம். காண்: அசை.

பலருக்கு அரியனாக இருக்கும் இறைவன் அடியவர் களுக்கு எளியவனாக வந்து அருள் செய்வான் என்பது கருத்து.

திருவம்மானையில் இரண்டாம் பாட்டு இது.

# 3. சிந்தனையை உருக்குபவன்

மேலே இருக்கிறவர்கள், செல்வம் கல்வி முதலிய வற்றில் பிறரை விட உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், தம்மை விடத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களிடம் வந்து அவர்களோடு அளவளாவி அவர்களுக்கு உதவி புரிந்தால் அவர்கள் உயர்ந்தவர்கள் ஆவார்கள். பொதுவாக உலகத்தில் உள்ளவர்கள் தம்மைவிட உயர்ந்தவர்களோடு நட்புப் பூணுவதையே விரும்புவார்கள். தங்களினும் தாழ்ந்தவர்களோடு கலப்பதில் அவர்களுக்கு விருப்பம் இருப்பதில்லை.

ஆனால் பண்பிலே சிறந்தவர்கள் தம்மினும் தாழ்ந்தவர்களைக் கண்டு மனம் இரங்கி அவர்களோடு பழகி அவர்களுடைய அல்லல்களைத் தீர்க்க முற்படுவார்கள். தனக்கு மேல் யாரும் இல்லாத இறைவன் கருணை மிகுதியினால் தன் பக்தர்களுக்கு அருள் புரிய வேண்டிக் கீழே இறங்கி வருகிறான். அப்படி வருவதனால் தன்னுடைய நிலை இழிந்து விடும் என்று கருதாமல் அவர்களுக்கு நலம் செய்யத் திருவுள்ளம் கொள்கிறான்.

இந்திரன் முதலிய பெரிய பதவி வகிக்கிறவர்களுக்கு இந்த இயல்பு இருப்பதில்லை. அவர்கள் வானத்தில் இருந்தபடியே தம்முடைய பதவியினால் செருக்குற்றுத் தம்மைவிட மேலான பதவி வகிப்பவர்களைப் பார்த்து, அந்தப் பதவியைப் பெறவேண்டும் என்ற ஆவலுடன் இருப்பார்கள்.

இந்திரன், திருமால், பிரமன், மற்றவர்கள், தேவர்கள் யாவருமே இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் தம் இடத்தை யாரேனும் பிடித்துக் கொள்வார்களோ என்ற அச்சத்தால் தம் பதவிகளை இறுகப் பற்றிக்கொண்டு விடாமல் இருக்கிறார்கள். அவர்கள் வானுலகத்திலே இருந்துகொண்டு இறுமாந்து நிற்கிறார்கள்.

**இந்திரனும் மால்அயனும் ஏனோரும் வானோரும்**
**அந்தரமே நிற்க.**

அழுக்கான இடத்தில் வாழும் ஏழை மக்கள் இல்லங்களுக்குச் செல்வர்கள் செல்ல அருவருப்பு அடைகிறார்கள். அங்கே போனால் அந்த அழுக்கானது தம்மையும் பற்றிக் கொள்ளும் என்ற அச்சம் அவர்களுக்கு உண்டாகிறது. பெரியவர்களுக்கு இந்த எண்ணம் உண்டாவதில்லை. கங்கையாறு அழுக்கான இடத்தில் பாய்ந்தால் அது அழுக்கடையுமா? அது பாயும் இடம் எல்லாம் புனிதம் அடைகிறது. சாக்கடையும் கங்கையோடு சேர்ந்தால் அது கங்கையே ஆகிவிடுகிறது.

'ஊர்அங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்.'' **(நாலடியார்)**

இறைவன் கங்கையைப் போல எதனாலும் அழுக்கடையாமல் விளங்குகிறான். தான் செல்லும் இடங்களையெல்லாம் புனிதமாக்குகிறான். அவனிக்கு வரும் போது அவனுடைய கருணை வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்து அடியவர்களை ஆனந்தம் அடையச் செய்கிறது. அவர்கள் அந்தக் கருணை வெள்ளத்தில் குள்ளக் குளிரக் குளித்துத் தம்முடைய தாபங்களையெல்லாம் போக்கிக் கொள்கிறார்கள்.

**வானோரும் அந்தரமே நிற்க, சிவன் அவனி வந்தருளி.**

வானத்தில் உலாவுகிற மேகம் தண்மை பெற்றால் மழையாகி நிலவுலகில் இறங்குகிறது. இறைவனும் அப்படித்தான் இறங்கி வந்து கருணை பாலிக்கிறான்.

"வானமாய் நின்றின்ப மழையாய் இறங்கிஎனை
வாழ்விப்பது உன்பரங்காண்"

என்று தாயுமானவர் பாடுகிறார்.

இங்கே இறங்கி வரும் சிவபெருமான் அடியார்களை ஆட்கொள்ளுகிறான். தகுதியை உடைய அன்பர்களுக்கு அவன் அருள் வழங்குகிறான். அவனுக்கு அன்பர்களின் தகுதியை எடை போடத் தெரியும். அவனுடைய திருவருளுக்கு ஆளான பக்தர்கள் உயர்ந்தவர்கள்.

ஆனால் அந்தப் பக்தர்கள் தம்மை அப்படி நினைப்பதில்லை. தம்மை மிக இழிந்தவர்களாக எண்ணுவார்கள். தம் தகுதியை நோக்கி இறைவன் தம்மை ஆட்கொண்டான் என்று கருதுவதில்லை. "எம்முடைய தகுதியை நோக்கினால் எமக்கு ஆண்டவன் அருள் கிடைக்க வாய்ப்பில்லை. என்றாலும் அவன் தன் அளவற்ற கருணையினால் எம்முடைய தரத்திற்கும் மதிப்பளித்து ஆட்கொண்டான்" என்றே சொல்வார்கள்.

**சிவன் அவனி வந்தருளி எம் தரமும் ஆட்கொண்டு.**

அடியார்களின் கண் காணும்படி எழுந்தருளி வந்து அவன் கருணை பாலிக்கிறான். அவன் எப்படி இருக்கிறான்? திருநீற்றைப் பூசியிருக்கிறான். அவன் திருத்தோள்களில் திருநீறு பளிச்சென்று விளங்குகிறது. முகத்தை ஏறெடுத்துப் பார்க்காமல், அடக்கத்தோடு அன்பர்கள் தமக்கு அருள் வழங்கும் பெருமானுடைய திருக்கரங்களையும் தோளையும் பார்க்கிறார்கள். கொடை பெறும் ஏழை, வள்ளலுடைய கையையே பார்ப்பது போல, அன்பர்கள் அவன் திருப்புயங்களை நோக்குகிறார்கள். அவன் சிவபெருமான் என்

பதைக் காட்டும் திருநீறு அங்கே தெரிகிறது. தன் தோள் களில் நீற்றைப் பூசியவனாய் அவன் கோலம் காட்டுகிறான்.

**எம்தரமும் ஆட்கொண்டு, தோட்கொண்ட நீற்றனாய்.**

அந்தத் திருக்கோலம் காணக் காண அழகாக இருக் கிறது. சுத்த தத்துவத்தின் நிறம் வெண்மை. இறைவன் வெண்ணீறு சண்ணித்த திருத்தோள்கள் சத்துவத்தின் வடிவமாகவே விளங்குகின்றன.

அந்தத் திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்ட அன் பர்கள் அதை உண்முகத்தே எண்ணி எண்ணிக் களிக் கிறார்கள். கண்முன்னே இனிய கனியைக் கண்டவர்கள் அதை உட்கொள்வது போல இந்தச் சிவப்பழத்தை அவர்கள் உட்கொள்கிறார்கள்; சிந்தையிலே வைத்துக் கொள்கிறார் கள். கண்ணுக்கு எழில்தரும் புறக்காட்சிக்கு மேலே போய், உள் முகத்தே அவனை வைத்துத் தியானிக்கும்போது அவர் கள் உருகிப் போகிறார்கள். 'நம்முடைய கண்ணைக் கவர்ந்து உட்புகுந்து கருத்தையும் கவர்கிறானே! இந்தப் பரமோப காரத்துக்குரிய தகுதி நமக்கு இல்லாவிட்டாலும் இவன் அருளை வாரி வழங்குகிறானே!' என்ற எண்ணம் மேலிட, அவர்கள் அந்தக் கருணையை எண்ணி எண்ணி உருகு கிறார்கள். இறைவனே அப்படி உருக்குகிறான் என்று நினைக்கிறார்கள்.

"உருகுவித்தால் யாரொருவர் உருகா தாரே"

என்று **அப்பர்** பாடுவார்.

**தோட்கொண்ட நீற்றனாய்ச்**
**சிந்தனையை வந்து உருக்கும்.**

அந்தச் சிவபெருமான் எங்கே இருக்கிறான்? இந்த உலகத்துக்கு வந்து திருப்பெருந்துறை என்னும் தலத்தில் நித்திய வாசம் செய்கிறான். அந்தப் பெருந்துறை அவன்

வாழும் இடமென்னும் சீரைப் பெற்றுவிட்டது. கப்பல் வந்து இறங்கும் துறையில் அதில் வந்த பண்டங்களைக் கொள்வதற்கு மக்கள் வந்து குழுழுவார்கள். அந்தத் துறை கப்பலுக்கு ஏற்றபடி பெரியதாக இருக்கும். பெரிய துறையில்தான் கப்பல் வரமுடியும். அப்படி ஒரு கப்பல் வந்து விட்டால் மக்கள், "பட்டினம் பெற்ற கலம்" என்று நாடி வந்து பண்டங்களைப் பெற்றுப் பயனடைவார்கள்.

பெருந்துறை இறைவனென்னும் கப்பல் வந்து தங்கும் துறைமுகமாக விளங்குகிறது. அடியார் பலரும் புகுந்து கப்பலிலுள்ள பண்டங்களைப் பெற்று மகிழும் துறை அது. சிறிய துறைகளில் ஓடந்தான் வரும்; கப்பல் வராது. திருப்பெருந்துறை சிவபெருமானாகிய கப்பல் வந்து இறங்கும் பெரிய துறை; அதுவே அதற்குரிய சீர்.

**சிந்தனையை வந்து உருக்கும்**
**சீர் ஆர் பெருந்துறையான்.**

இத்தகைய துறையில் வந்து அருளை வழங்கும் இறைவன் மணிவாசகரை ஆட்கொண்டான். அவரை ஆட்கொள்ள வேண்டுமென்று குதிரைச் சேவகனாக வந்தான். வேதத்தையே குதிரையாக்கி அதன்மேல் இவர்ந்து வந்தான், மணிவாசகப் பெருமான் தமக்காக இறைவன் பரிமேற் கொண்டு வந்ததை எண்ணுகிறார். அவன் வந்து காட்சி தந்ததனால் அவருடைய பாசக்கட்டு விட்டது. பாண்டியன் அவ்வரை விடுதலைசெய்தது பெரிதன்று. அவன் இந்த உடம்பிலுள்ள உறுப்புக்களுக்குத்தான் விலங்கு போட்டான். குதிரைகள் வந்தவுடன் அவரை விடுதலை செய்தான். அது பெரிய காரியம் அன்று.

உயிர்கள் எப்போதும் பாசம் என்னும் தளைப்பட்டுக் கிடக்கின்றன. விலங்கிடப்பட்ட குற்றவாளிகளை ஒரு

சிறையிலிருந்து மாற்றி வேறு சிறைகளுக்குக் கொண்டு போவது போலப் பாசத்தளையில் பட்ட ஆன்மாக்களை வெவ்வேறு பிறவி எடுக்கச் செய்கிறான் இறைவன். இரு வினைகளாகிய குற்றம் நீங்கினவர்களின் விலங்கைத் தறித்து விடுதலை செய்கிறான்.

"ஏழையின் இரட்டைவினை ஆயதொர் உடற்சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்."

என்பது **அருணகிரியார்** திருவாக்கு.

இறைவன் குதிரையின் மேற்கொண்டு வந்து மணி வாசகருடைய கட்டு நீங்கும்படி அருள் செய்தான்.

**பந்தம் பரியப் பரிமேற் கொண்டான்.**

பந்தத்தை நீக்கிய பிறகு அவன் ஆனந்தத்தை வழங்கினான். அந்த ஆனந்தம் முடிவின்றி இருப்பது. உலகியற் சுகங்கள் முடிவை உடையவை. என்றும் பொன்றாத ஆனந்தம் சிவானந்தம். அந்தச் சிவானந்தத்தை இந்த உலகத்திலேயே பெறும் வண்ணம் இறைவன் அருள் புரிவான். அப்படிப் பெற்றவர்களை ஜீவன் முக்தர்கள் என்று சொல்வார்கள். நாம், 'இவ்வுலகத்திலிருந்து விடுபட்டு மேலே போய் முத்தியுலகத்தில் ஆனந்தம் பெறவேண்டும்' என்று நினைக்கிறோம். ஆனால் இறைவன் தானே இங்கே எழுந்தருளி வந்து அன்பர்களுக்குப் பேரானந்தப் பெருவாழ்வை வழங்குகிறான். நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் கிடக்கும் குழந்தைக்கு அன்னை உணவை எடுத்துச் சென்று ஊட்டுவதைப் போல ஆனந்தத்தை ஊட்டுகிறான்; அந்தமிலா ஆனந்தத்தை வழங்குகிறான்.

இந்த உலகத்தில் நாம் அடையும் சுகத்துக்கு எல்லையுண்டு. உலக சம்பந்தமான எதற்குமே ஒரு முடிவுண்டு. ஆனால் இறைவன் வழங்கும் ஆனந்தம் இங்கே கிடைத்

தாலும் அது அழிவடையாது; அந்தமிலா ஆனந்தமாக இருக்கும். சேற்றிலே விழும் உணவோ, உடையோ மாசுபட்டு விடும். ஆனால் மாணிக்கம் விழுந்தால் அது மாசடைவதில்லை. குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கந்தானே?

அவ்வாறு இந்த உலகத்தில் இந்த உடம்பில் இருக்கும் போதே பெறும் ஜீவன் முக்தியாகிய ஆனந்தம், உலகம் என்னும் சூழ்நிலையினாலும், உடம்பில் இருக்கும்போது வழங்குவதாலும் மலினம் அடைவதில்லை; இறுதியைப் பெறுவதில்லை; அந்தமிலா ஆனந்தமாகவே இருக்கும்.

**பரிமேற்கொண்டான் தந்த**
**அந்தமிலா ஆனந்தம்.**

இறைவன் வழங்கிய ஆனந்தம் அது. அதை நினைக்கும் போது அவனுடைய கருணைப் பெருக்கை வியக்கத்தோன்றுகிறது. இந்திரன் முதலியவர்கள் இந்த உலகத்தை அலட்சியமாகப் பார்த்து, வானகத்தில் நிற்கிறார்கள்; ஏதோ உயர்நிலையில் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! அவர்கள் ஏமாந்து போனவர்கள். இந்த உலகத்திற்கு இறைவன் எழுந்தருளி வந்து மெய்யடியார்களுக்கு அந்தமிலா ஆனந்தத்தை அருளும் ஏற்றத்தை அவர்கள் அறியார்கள். "அவர்கள் அந்தரத்திலே நிற்கட்டும். நாம் இறைவனருளால் பெற்ற ஆனந்தத்தைப் பாராட்டிப் பாடி அம்மானை ஆடுவோம்" என்று மணிவாசக நாயகியார் பாடுகிறார்.

இந்திரனும் மால்அயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
எம்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தம்இலா ஆனந்தம் பாடுதும்காண், அம்மானாய்!

*அம்மானை ஆடும் பெண்ணே, இந்திரனும் திருமாலும் அயனும் மற்றப் பெரிய பதவியில் உள்ள குபேரன் முதலியவர்களும் அவர்கள் அல்லாத தேவர்களும் வானுலகத்திலிருந்து இறங்கி வராமல் அங்கேயே தம் பதவிகளை இறுகப்பிடித்துக் கொண்டு நிற்க, சிவபெருமான் இந்த நிலவுலகத்துக்கு எழுந்தருளி வந்து, ஒன்றுக்கும் பற்றாத எங்கள் சிறிய தகுதிக்கும் மதிப்புத் தந்து ஆளாகக் கொண்டான்; திருத்தோளில் திருநீற்றை அணிந்து கொண்ட கோலமுடையவனாய், எம்முடைய உள்ளத்திலே புகுந்து உருக்குகின்றவனும், சிறப்பையுடைய திருப்பெருந் துறையில் நித்தியவாசம் செய்கிறவனும், என் பாசக் கட்டானது நீங்கும்படி குதிரையின்மேல் இவர்ந்து வந்தவனுமாகிய இறைவன் எமக்கு வழங்கிய இறுதியற்ற சிவானந்தத்தைப் பாராட்டிப் பாடுவோம்.*

[மாலும் அயனும் என்று உம்மையை மாலுக்கும் கூட்டுக. ஏனோர் என்றது, தேவலோகத்தில் இந்திரனைப் போன்ற பதவிகளில் இருப்பவர்களை. வானோர் என்றது மற்றத் தேவர்களை. அந்தரம்—வானுலகம். நிற்க—தேவலோகத்தினும் இழிந்தது என்ற எண்ணத்தினால் இங்கே வரக் கூசி நிற்க. 'அவர்கள் அந்தரத்தில் நிற்கிறார்கள். யாம் இங்கே இருந்தபடியே நலம் பெற்றோம்' என்கிறார். எம் தரமும்-எம்முடைய சிறியதகுதிக்கும்; தரம் என்றது தம்முடையது தாழ்வான தகுதி என்று எண்ணிய படி. தரமும்: உம்மை, இழிவுசிறப்பு. தோள்-புயம், கை இரண்டையும் குறித்தது. சிந்தனை-உள்ளம்; "சிந்தனை நின்றனக்காக்கி" என்பது மணிவாசகர் பிறிதோரிடத்தில் சொல்வது. அவனியில் இறங்கி வந்தருளியதோடு யாம் இருக்கும் இடத்தையும் தேடிவந்தான் என்பதைக்குறிக்க, 'அவனி வந்தருளி; வந்து உருக்கும்' என்று இருமுறை வருகையைச் சொன்னார். பந்தம்-பாசக்கட்டு. பரிய-நீங்க.

பரிமேற்கொண்ட வரலாறு **திருவிளையாடற்புராணத்தில்** வருகிறது. தருதல், ஒப்போனுக்குத் தருவதைச் சொல்லும் சொல்; மிகவும் கீழ்ப்பட்ட எங்களுக்கு அருள் செய்ய இறங்கி வந்து எங்களையும் தனக்குச் சமானமாக வைத்து ஆனந்தம் தந்தான் என்பதைக் குறிக்கிறது. அந்தம் இலா ஆனந்தம் - காலத்தாலும் இடத்தாலும் சூழ்நிலையினாலும் முடிவையடையாத பேரின்பம். பாடுதும்-பாடுவோம். காண்: அசை. அம்மானை என்பது அதை ஆடும் பெண்ணுக்கு ஆகுபெயராய் நின்று விளியேற்று அம்மானாய் என வந்தது.

அவனைப் பாடுவது பொதுவான இயல்பு; அவனுடைய திருவருளால் பெற்ற ஆனந்தம் பெருவியப்பைத் தருவதாதலின் அதனையே பாடுவோம் என்கிறார். குழந்தை தனக்குப் பொம்மையைக் கொடுத்தவரை நினையாமல் கிடைத்த பொம்மையையே பார்த்துப் பார்த்து மகிழ்வதைப் போன்ற நிலை இது.]

இது திருவாசகத்தில் உள்ள **திருவம்மானையில்** மூன்றாவது திருப்பாடல்

# 4. அமுதின் தெளிவு

தேவர்கள் எல்லாரும் சற்றே சிந்திக்கப் புகுந்தார்கள். உலகத்திலுள்ள மக்கள் பக்தியும் தவமும் செய்து இறைவன் திருவருளைப் பெறுகிறார்கள் என்பதை அறிந்தார்கள். 'நாமும் அப்படித் தவம் செய்து திருவருளைப் பெற்றால் என்ன? நமக்கு ஆற்றலில் குறைவா? எண்ணியதை எண்ணியபடி முடிக்கும் திண்மையில்தான் குறைவா? நாமும் ஏன் தவம் செய்யக் கூடாது?' என்று எண்ணினார்கள். 'உண்ணுதலை விட்டுப் பட்டினி கிடந்து நாமும் தவம் செய்யப் புகுவோமே!' என்று தீர்மானித்தார்கள்.

உடனே ஒரு காட்டை அடைந்தார்கள். வான்வந்த தேவர்கள் கான் வந்து விட்டார்கள். கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்யலானார்கள். அவர்களிற் சிலர் உடம்பு வற்றி எலும்பும் தோலும் ஆகிவிட்டது. சிலர் உட்கார்ந்த இடத்தில் புற்றே எழுந்து விட்டது. கடுமையான தவத்தை மேற்கொண்டார்கள். யாரும் செய்ய முடியாத அளவுக்கு அவர்கள் தவம் செய்யலானார்கள்.

புறத் தோற்றத்தில் அவர்கள் தவமுனிவர்களே ஆகிவிட்டார்கள். ஆனால் அவர்கள் உள்ளம் எப்படி இருக்கிறது? அவர்கள் தவம் செய்து பழக்கப் படடவர்களே. எவ்வளவோ சமயங்களில் இறைவனை

நினைத்துத் தியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு வேறு பாடு. அவர்கள் செய்த தவமெல்லாம் ஏதேனும் ஒரு பயனைக் கருதியே செய்தவை. தம்முடைய பதவி பறி போகாமல் இருக்கவும், இன்னும் மேலான பதவியைப் பெறவுமே அவர்கள் தவம் செய்து பழக்கம்.

> "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்;
> மனம்நின்பால்
> தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாம்
> தொழவேண்டி."

என்று மணிவாசகரே வேறோரிடத்தில் பாடுவார். அந்த வாசனை அவர்களை விட்டுவிடுமா? இப்பொழுதும் அந்த விருப்பம் அவர்களை விடவில்லை. மனிதர்களை விடத் தாம் மேலானவர்கள் என்ற எண்ணம் அவர்களிடமிருந்து எப்போதும் நீங்குவதில்லை. இப்போதும் அந்த எண்ணத் தோடே தவம் புரிந்தார்கள். மனிதர்கள் பெறாத பெரிய மேலான பயனைப் பெறவேண்டும் என்ற ஆசை அவர்கள் உள்ளத்தில் சுருதி போட்டுக் கொண்டிருந்தது. 'உள்குவார் உள்ளத் திருக்கும்' இறைவன் இந்த இயல்பை அறிய மாட்டானா?

தேவர்கள் தவம் புரியத் தொடங்குவதை மாலும் அயனும் இந்திரனும் பார்த்தார்கள். 'நாம் மட்டும் சும்மா இருப்பதா?' என்று அவர்களும் தவம்செய்யப் புகுந்தார்கள். அவர்களுடைய உள்ளத்திலும் தாம் உயர்ந்தவர்கள் என்று இருந்த எண்ணம் போகவில்லை. அவர்களும் உடம்பு வற்றிப் போகத் தவம் செய்தார்கள். காட்டில் அமர்ந்து தம்மைச் சுற்றியும் புற்று எழுந்து வளரும்படியாகத் தவத்தில் ஆழ்ந்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு இறைவன் காட்சி கிடைக்க வில்லை. அகந்தையை அடியோடே போக்கி நிற்கத் தெரிய

வில்லை, அவர்களுக்கு. உடம்பினால் தவமுனிவர்களாய் விட்டாலும், உள்ளத்தால் இன்னும் தம் பெருமையை மறவாத தேவர்களாகவே இருந்தார் [illegible]ம்மை மறந்து இறைவனைத் தியானிக்கும் உள்ளப் [illegible]ங்கு அவர்களிடம் இல்லை. ஆகவே இறைவன் அவர்களுக்குக் காட்சிதரவில்லை. இன்னும் அவர்கள் காண்பரிய ஒருவனாகவே இருந்தான்.

**வான்வந்த தேவர்களும்**
**மால் அயனோடு இந்திரனும்**
**கான் நின்று வற்றியும்**
**புற்று எழுந்தும் காண்பரிய**
**தான்.**

அவனைத் தேடிக் கொண்டு மால், அயன், இந்திரன், தேவர்கள் ஆகியவர்கள் தவம் புரிய, அவர்கள் உள்ளத்துக்குத் தட்டுப்படாமல் இருக்கும் இறைவன், உண்மையில் தம்மை மறந்து, ஆத்மசமர்ப்பணம் செய்பவர் யார் என்று பார்த்தான். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருந்து அதைத் தட்டிப் பார்க்கும் சர்வாந்தர்யாமியாகிய அவன், அந்தத் தேவர்களின் உள்ளத்திலே பதவி மோகம் என்னும் புற்று எழுந்திருப்பதைக் கண்டான். உடல் வற்றியும் உள்ளத்தில் ஆசை வற்றாமல் இருப்பதை உணர்ந்தான். புறஞ்சுவர் கோலம் செய்து உள்ளே குப்பையைக் கொட்டியிருந்தால் அத்தகைய வீட்டிற்குள் புகுவதற்கு யாருக்காவது மனம் வருமா? "இவர்கள் உள்ளம் நாம் தங்குவதற்கு ஏற்றதன்று" என்பதை உணர்ந்தான். தான் தங்குவதற்கு ஏதேனும் தூய்மையான அகம் எங்கே இருக்கிறது என்று தேடுகிறவன் அவன். தேவர்களின் உள்ளம் குப்பை மண்டிக் கிடப்பதை அறிந்து அந்தப் பக்கமே போக விரும்பாமல், வேறு எந்த இடம் நமக்கு ஏற்றதாக இருக்கும் என்று தேடினான்.

அவனுக்கு அப்படி ஓர் இடம் கிடைத்தது பூவுலகத்தில் உள்ள மெய்யன்பர்கள் தமக்கு உள்ள எல்லாவற்றையும் தனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, எந்தப் பயனையும் எதிர் பாராமல், 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்'தை அவன் கண்டான். "ஓ! நாம் குடிபுகுந்து தங்குவதற்குரிய இடமும் இருக்கிறதே! எங்கெங்கோ தேடினோமே! இப்படி ஒரு தூய இடம் இருக்கும்போது வேறு இடங்களைத் தேடி அலைய வேண்டுமா?" என்று எண்ணி அந்த மெய்யடியாரை நோக்கி வந்தான்.

**தான் வந்து.**

பக்தர்கள் தம்மை இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய தகுதி பெற்றவர்களாக எண்ணுவதில்லை. தம்மை மிக இழிந்தவர்களாகவே எண்ணி, 'நம் தகுதியின்மையை நோக்கி இறைவன் வராமல் இருந்து விடுவானே' என்று ஏங்கி, எல்லாவற்றையும் மறந்து, உள்ளத்தில் உள்ள காமம் முதலிய தூசுகளையெல்லாம் ஒழித்து, அதைத் தூயதாக வைத்திருந்தார்கள். இறைவன் அந்த உள்ளமே தன்னுடைய இல்லமாக எண்ணி அதை அணுகினான். தம்மை நாய் போன்றவர்களாக, இழிந்தவர்களாக எண்ணி உருகும் அவர்களுக்கு அருள் செய்யப் புகுந்தான். அவர்கள் குழந்தையைப் போல இருந்தார்கள். ஆடம்பரமான உடை உடுத்தவில்லை. தவத்தைப் பிறர் காணச் செய்யவில்லை. உள்ளத்திலுள்ள அகந்தைப் பேயை ஓட்டிச் சுத்தப்படுத்தி வைத்திருந்தார்கள்.

தன் குழந்தையை நாடிவரும் தாயைப்போல இறைவன் வந்தான். அந்த மெய்யன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அருளைச் செய்யப் புகுந்தான். அவர்களிடம் தலைமையான அன்பு அவனுக்கு உண்டாயிற்று.

**தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு.**

மாணிக்கவாசகர் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர். தமக்கு இறைவன் தலையளி செய்ததை எண்ணுகிருர். அழுக்கு மூட்டையாகிய இந்த உடம்பை ஞானிகள் அருவருப்பார்கள். ஆனாலும் அந்த வீட்டில்தானே அவர்கள் குடியிருக்கிறார்கள்? அது சிறு குடிசை போல இருந்தாலும் உள்ளே சுத்தமாக இருக்கிறது. மணிவாசகர் உள்ளம் தூய அன்பு மணமும் ஞான ஒளியும் வீசும் சிறு குடிலாக இருக்கிறது.

இறைவன் அந்த இடத்தில் புகுந்தான். ஊன் நிரம்பிய உடம்புக்குள் அவன் புகுந்தான் அதற்குள்ளே அவன் எழுந்தருளியவுடன் அந்த உள்ளத்தில் ஒளி உண்டாயிற்று. சுத்தம் செய்த இடத்தில் விளக்கை வைத்தால் எங்கும் ஒளி பரவுவதைப் போல ஆயிற்று. அங்கே புகுந்தவுடன் அந்த உள்ளத்தில் ஒளி உண்டாக, அதன் விளைவாக அந்த உடம்பிலும் சில மாற்றங்கள் உண்டாயின, உடம்பிலுள்ள உரோமங்களெல்லாம் குத்திட்டு நின்றன. அவற்றிற்குத் தனியே உயிரைத் தந்ததுபோல அவை நிமிர்ந்து நின்றன. வீட்டு வாயில் திண்ணையில் சும்மா கிடந்த மக்கள் உள்ளே அரசன் புகுந்தான் என்பது தெரிந்து எழுந்து நின்று பரபரப்பாக இருப்பார்கள். அங்கே யாவரும் மலர்ச்சியுடன் நிற்பார்கள். அவ்வாறே உள்ளே அருட்கடலாகிய இறைவன் புகுந்ததனால் புறத்தே அற்புதம் நிகழ்ந்தது. அவன் உரோமங்களுக்குள்ளே உயிரைப் பெய்துவிட்டானே? இவ்வளவு காலம் இல்லாத புளகாங்கிதம் அல்லவா இப்போது உண்டாகிவிட்டது?

தன் நாயகன் தன்னைத் தொட்டவுடன் காதலிக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறியும். ஆனந்த உணர்ச்சியின் ஆரம்பம் அது. அப்படி இறைவனாகிய நாயகன்

உள்ளே புகுந்தவுடன் உரோமங்கள் உயிர்பெற்றனபோல் புளகம் போர்த்து நின்றன. அப்படி நிற்கும்படி அவன் பண்ணி விட்டான்.

**ஊன் வந்து, உரோமங்கள் உள்ளே உயிர்ப் பெய்து.**

பிறகு ஒரே ஆனந்தந்தான். காதலன் காதலியைத் தொட்டவுடன் அவளுக்கு மெய் புளகம் அரும்புகிறது. அதற்கு முன்னே, அவன் அவள் இருக்கும் தனியறையில் புகுந்தவுடனே உடம்பெல்லாம் குப்பென்று வியர்க்கிறது, தொட்டவுடன் என்றும் இல்லாத புதுமையாகப் புளகாங்கிதம் உண்டாகிறது. மணிவாசகர் இந்த நிலையில் இருந்தார்.

பிறகு ஆனந்த அநுபவம் கிட்டியது. அந்த அநுபவத்தை எப்படிச் சொல்வது? தேனை உண்டால் எப்படி இருக்கும்? அதைச் சொல்லலாமா? அது நாவில் மாத்திரம் சுவையை உண்டாக்கும். இறைவன் கழல் அவருடைய் உள்ளத்தே தேன் புகுந்தது போலப் புகுந்தது. உடம்பெல்லாம், உள்ளமெல்லாம் நாவாகி அந்தத் தேனைச் சுவைத்தால் எப்படி இருக்கும்? அப்படி ஓர் இன்ப அநுபவம் ஏற்பட்டது.

தேனையா சொல்வது? அது உலகத்தில் கிடைப்பது தானே? இந்த ஆனந்தாநுபவத்தைத் தர அதற்குச் சக்தி ஏது? சுவை பெற்ற பண்டங்களை அமுது என்று சொல்கிறோம். அந்த அமுதை நாம் கண்டதில்லை; சுவைத்த தில்லை. ஆனால் அது எல்லாவற்றையும் விட அதிகமான சுவையுடைய தென்று யாவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அமுதந்தானோ இது? தேவர்கள் உண்ட அமுதம் அன்று இது. அது கடலைக் கடைந்தபோது கலங்கிக் குழம்பி வந்தது. இந்த அமுதம் குழப்பம் இல்லாதது;

குழப்பத்தைத் தெளிவிப்பது. **அமுதின் தெளி** என்று ஒரு வகையாகச் சொல்லலாம்.

புலனுகர்ச்சி மண்டிக் கிடந்த உள்ளத்தில் உயிரைப் பெய்யும் தெளிந்த அமுதாக இனிக்கிறது; அந்தத் தெளிவில் ஒளியும் இருக்கிறது. மெய்ஞ்ஞானம் என்னும் ஒளியும் புலன் கடந்த பேரானந்தமும் இப்போது நிரம்பி வழிகின்றன. உரோமாஞ்சிதம் அதற்கு அடையாளமாக இருக்கிறது.

**தேன் வந்து அமுதின் தெளி வந்து ஒளி வந்த.**

இந்த இன்ப அநுபவமும் மெய்ஞ்ஞான ஒளியும் கிடைக்க என்ன காரணம்? மிக்க பெருமையை உடைய இறைவன் திருவடி உள்ளே புகுந்தமையால் உண்டான விளைவு இது. அந்தக் கழல் நீண்டது; எங்கே அன்பர் இருந்தாலும் அவர் வரையில் நீளும் திருவடி; **வார்கழல், வான் வந்த வார்கழல்** அது.

அவன் உலகத்துக்கு வந்தான். மணிவாசகருக்குத் தலையளி செய்தான். சேய்க்குத் தாய் தன் முழு அன்பையும் வாரி அளிப்பதுபோல அளித்தான். அவருக்கு உள்ளே புகுந்தான். அதன் பயனாகப் புறத்திலும் மெய்ப்பாடுகள் உண்டாயின. உரோமங்கள் தனியே உயிர் பெற்றவை போலக் குத்திட்டு நின்றன. அவனால் விளைந்தது ஆதலின் அவனே அப்படிச் செய்தான் என்றுதான் சொல்லவேண்டும். பிறகு தேன் வந்த சுவையும் அமுதின் தெளிவு வந்த அநுபவமும் உண்டாயின; ஒளி படர்ந்தது. 'பெறுதற்கரிய இந்த அநுபவத்தைத் தந்த அவனுடைய நீண்ட திருவடியை, அம்மானை ஆடும் பெண்ணே, நாம் பாடுவோம்' என்று கூறுகிறார் மணிவாசகப் பெருமான்.

**வான்வந்த தேவர்களும்**
**மால்அயனேடு இந்திரனும்**
**கான்நின்று வற்றியும்**
**புற்றுஎழுந்தும் காண்பரிய**
**தான்வந்து நாயேனைத்**
**தாய்போல் தலையளித்திட்டு,**
**ஊன்வந்து உரோமங்கள்**
**உள்ளே உயிர்ப்பெய்து,**
**தேன்வந்து அமுதின்**
**தெளிவின் ஒளிவந்த**
**வான்வந்த வார்கழலே**
**பாடுதும்காண் அம்மானாய்!**

* வானுலகத்தில் வந்த தேவர்களும் திருமாலும் பிரமனும் இந்திரனும் காட்டில் பல காலம் நின்று உணவில்லாமல் உடம்பு வற்றியும், சுற்றிலும் புற்று எழுந்து நிற்கத் தவம் செய்தும் காண்பதற்கு அரிய இறைவன், அடியேன் இருக்கும் இடத்துக்கு வந்து, நாய் போல இழிந்த அடியேனைத் தாயைப் போலச் சிறந்த அன்பு காட்டி, என் உடம்புக்குள் புகுந்து, என் மயிர்க்கால்களுக்குள்ளே உயிரைப் புகுத்தி அவை புளகம் போர்க்கச் செய்து, தேனின் சுவை வரவும், தெளிந்த அமுதத்தின் சுவையும் ஒளியும் வரவும் செய்த, தம்மைப் போற்றினவர்களுக்கு இன்பம் வரும்படி செய்யும் பெருமையை உடைய நீண்ட திருவடியை, அம்மானை ஆடும் பெண்ணே, நாம் பாடுவோமாக! *

[வான்—தேவலோகம். மாலோடு, அயனோடு என்று கூட்டுக; ஓடு: எண் ஓடு. கான் நின்று—காட்டில் பல காலம் நின்றபடியே. புற்று எழுந்தும்—தம்மைச் சுற்றிப் புற்று எழும்படி செய்தும்; எழுந்து — எழ; எச்சத்திரிபு. காண்பு — காணுதற்கு. தான் — இறைவன். நாயேன் — வெறுத்துக் கக்கிய பொருளை

மீண்டும் உண்ணப் புகும் நாயைப் போல, அநுபவத்தால் இது தீயதென்று அறிந்தும் சிற்றின்பத்தை நுகரப் புகும் தன்மையுடையவன்; நல்லோர் அவையுள் புகுந்தால் ஓட்டும் இழிதகவையுடைய நாயைப் போல மெய்த்தொண்டர்கள் கூட்டத்தில் புகும் தகுதியில்லாதவன். தலையளித்திட்டு—தலையளி செய்து. 'நான் யாவரினும் கடையவனாக இருந்தும் நான் பெற்றது எல்லா அளியினும் சிறந்த அளி' என்றார். ஊன் வந்து—உடம்புக்குள் வந்து; ஊன்: ஆகுபெயர். உயிர்ப்பெய்து—உயிரை ஊட்டி. இறந்த உடலம் உயிர் பெற்று எழுந்து நின்றாற்போலே, இதுகாறும் வாளா புறம் போர்த்திருந்த உரோமங்கள் இப்போது குத்திட்டு நின்றன. தேன்—தேனின் சுவை; ஆகு பெயர். வந்து - வர; எச்சத் திரிபு. அமுதின் தெளியோடு ஒளி வந்த கழல். கழல்-காலில் அணியும் வீர கண்டை; இங்கே திருவடியைக் குறித்தது; ஆகுபெயர். வான்—பெருமை. முதலின் வினையாகிய தலையளித்திட்டு என்பது சினைவினையாகிய ஒளிவந்த என்றதனோடு முடிந்தது. தான் தலையளித்திட்டு. ஊன் வந்து பெய்து ஒளி வந்த கழல், வான்வந்த கழல்,வார்கழல். கழலே: ஏகாரம், பிரிநிலை; மற்றவற்றைப் பாடாமல் அதனையே பாடுவோம் என்றபடி; தேற்றமும் ஆம். காண்: அசை.]

இறைவனுடைய பெருங்கருணையை வியந்து பாடியது இது.

திருவாசகத்தில் **திருவம்மானையில்** வரும் நான்காவது பாட்டு இது.

# 5. கருணை வெள்ளம்

தம்மை நீசர் என்று நினைக்கின்ற நைச்சியானு சந்தானத்தில் எல்லாரினும் விஞ்சி நிற்கிறவர் மாணிக்க வாசகர். மிகவும் இழிந்த நிலையில் இருந்த தம்மைத் தன் பெருங் கருணையால் ஆட்கொண்டான் இறைவன் என்பதை அடிக்கடி நினைப்பூட்டிக் கொள்வார்.

நம்முடைய மனம் நம்மை ஆட்கொண்டு தன்வழியே நடக்கச் செய்கிறது. மனம் போன போக்கிலே நாம் போய்க் கொண்டிருக்கிறோம். இந்த மனம் நெகிழ்ச்சி உடையதாக இருக்குமானால் அங்கே இறைவனுடைய திரு வடி பதியும்; திருவருள் விலாசம் நிரம்பும். ஆனால் இது வோ கல்லைப்போல இருக்கிறது. பிறருடைய துன்பம் கண்டு நெகிழ்வதும் இறைவனுடைய கருணையை எண்ணி உருகுவதுமாகிய இயல்புகளை உடைய மனமே கனிந்த மனம். அல்லாத மனம் கல்மனம்.

“நெஞ்சக் கனகல்” என்றும், “திணியான மனோசிலை” என்றும் அருணகிரிநாதர் கூறுவார். இந்தக் கல் ஜீவகாருண் யத்தால் நெகிழ்வதும் சிவ கருணையைப் பெற ஏங்கி உருகு வதும் உடையதாக இருந்தால் இறைவன் திருவருள் கிடைக்கும். இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் உறைகிறான். ஆனாலும் அவன் திருவடி அங்கே பதிவ தில்லை. உருகினால் பதியும்.

மாணிக்கவாசகர் சொல்கிறார்.

"என் மனம் கல்போல இருக்கிறது. சுற்றிச் சூழ உள்ள ஜீவர்களின் துன்பத்தைக் கண்டு நெகிழவில்லை. சிவபெருமான் கருணைக்காக ஏங்கி உருகவில்லை. மனத்தினால் மனிதன் நல்லவனும் பொல்லாதவனும் ஆகிறான். நானோ நல்ல மனம் படைக்கவில்லை. கனிவு என் மனத்தில் இல்லை. என் மனம் காயாக, வெம்பியதாக இருக்கிறதே அன்றிப் பழுக்கவில்லை. பழுத்த மனம் உடையவர்களை இறைவன் ஆட்கொள்கிறான். அவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான்."

"பழுத்தமனத்து அடியர் உடன் போயினர்"

என்று வேறோரிடத்தில் மணிவாசகர் பாடுகிறார்.

"கல்லாகிய மனத்தைப் பெற்ற யான் எல்லாரினும் கடைப்பட்டவனாக இருக்கிறேன். அடியார்களின் கூட்டத்தில் சேராமல் எங்கெங்கோ அலைகிறேன். அடியார்கள் இழித்து ஒதுக்கிய போகங்களையே அநுபவிக்க எண்ணித் திரிந்து கொண்டிருக்கிறேன். ஊரவர் தூக்கி எறிந்த எச்சிலை நக்கி உண்ணும் நாயைப் போல இருக்கிறேன்."

**கல் ஆம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை.**

'இவ்வாறு அலைந்த என்னை இறைவன் ஆட்கொண்டான்' என்று சொல்ல வருகிறார்.

அவன் சர்வ வல்லமை உள்ளவன்; அகடித கடனா சாமர்த்தியம் உள்ளவன்; பிறரால் செய்ய முடியாத செயல்களைச் செய்ய வல்லவன். அவனுடைய அருளைப் பெற்றவர்களே செயற்கரிய செய்யும் பெரியாராக இருக்கும்போது, அவனுடைய செயலைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? அவன் எல்லாம் செய்ய வல்ல சித்தன்.

**வல்லாளன்.**

அவன் எல்லாப் பிரபஞ்சத்துக்கும் தலைவனாக இருந்தாலும் அடியார்கள் அணுகிப் போற்றி வழிபடுவதற்காக வடிவம் கொண்டு தென்னாட்டில் எழுந்தருளியிருக்கிறான். தென்னாட்டிலும் திருப்பெருந்துறையையே தன்னுடைய தலைநகராகக் கொண்டு நித்திய வாசம் செய்கிறான். அடியார்கள் தன்னைத் தேடி அலைந்து வருந்தாமல் அவர்கள் எளிதிலே கண்டு போற்றி வழிபடும்படி அங்கே எழுந்தருளியிருக்கிறான்.

**தென்னன், பெருந்துறையான்.**

அத்தகைய கருணைப் பிரான் மாணிக்க வாசகரை ஆட்கொண்டான். "என்னைப் பித்துப் பிடிக்கச் செய்தான். தன்னையன்றி வேறு எதனையும் நாடாமல், அணுகாமல் இருக்கும் சிவப்பித்து என் தலையில் மண்டிக் கொண்டது. அந்தப் பித்தை அவன் என்னிடத்தில் ஏற்றி விட்டான்" என்கிறார்.

**பிச்சு ஏற்றி.**

"அவன் மெய்யடியாரைத் தேடி அலைகிற பித்தன். என்னையும் தன்னை நாடித் தேடி நிற்கும் பித்தன் ஆக்கிவிட்டான். இந்தப் பித்து ஏறியவுடன் என் பழைய நிலை மாறியது. என் மனம் கல்லாக இருந்தது கனியாகிவிட்டது; நெகிழ்ச்சியும் சுவையும் உடையதாயிற்று. அன்பினால் உருகும் நெகிழ்ச்சியும் அருளினால் சிவாநுபவம் பெறும் சுவையும் இதன்பால் உண்டாகிவிட்டது. பசுகரணம் பதி காரணம் ஆகிவிட்டது. கல்லைப் பிசைந்து கனியாக்கி விட்டான். கனிந்த பக்குவம் அடைந்த பிறகு மேலும் அவன் எனக்கு இன்பம் அருள முன்வந்தான். நான் இன்பம் எங்கே என்று தேடியலையாமல் தன்னுடைய கருணை

வெள்ளத்திலே அழுத்திவிட்டான். வெள்ளத்திலே ஆழ்ந்தவனுக்குத் தன் உணர்வு இல்லாமல் போய்விடும். மூச்சு முட்டி உணர்வை இழப்பான். அவ்வாறு நான் ஜீவ போதத்தை இழந்துவிட்டேன். அவனுடைய கருணை வெள்ளத்தினுள் அமிழ்ந்து வேறு எந்தப் பொருளையும் உணராமல், என்னையே இழந்து அதன் மயமாக ஆகிவிட்டேன். அவ்வாறு என்னை அவன் தன் கருணை வெள்ளத்தில் அழுத்திவிட்டான்.''

**கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை வெள்ளத்து அழுத்தி.**

மனம் கல்லாக இருந்தால் கருணை வெள்ளத்தில் ஆழ்த்தினாலும் அது வேறுபட்டே கிடக்கும். சுற்றிச் சூழக் கருணை பரவியிருந்தாலும் மனத்திலே அது ஊறுவதில்லை. கல்லை ஆயிரங்காலம் தண்ணீரிலே போட்டிருந்தாலும் அதில் ஈரம் பாய்வதில்லை. இதை நன்கறிந்த இறைவன் மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்தில் அழுத்தினான். கட்டி தட்டி நின்ற மனம் இப்போது அந்தக் கருணை வெள்ளத்தில் மூழ்கிக் கரைந்து இல்லாமலே போய்விட்டது.

இறைவனுடைய பெருமைகளையும் திருவருளையும் இடைவிடாமல் நினைந்து உருகும் மனம் நாளடைவில் தன் செயல்களை இழந்து கடைசியில் இல்லாமலே போய்விடும். சர்க்கரைப் பொம்மையால் கடலின் ஆழத்தை அளவிட எண்ணி அதை அதற்குள் விட்டால் அது அளப்பது போலக் கீழே செல்லும். செல்லச் செல்ல அது கரைந்து கொண்டேவரும். கடைசியில் அது இல்லாமலே போய்விடும். மனோவிருத்திகளை இல்லாமல் செய்வதற்கு இறைவனுடைய திருவுருவத்தியானமும் அவன் இயல்புகளை நினைந்து உருகுவதும் ஏற்ற வழிகள். சர்க்கரைப் பொம்மையாகிய

உவமையை இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லியிருக்கிறார்.

ஒரு நாயைத் தெள்ளுப்பூச்சிகள் மொய்த்துத் தொல்லைப்படுத்தின. அது ஒரு குச்சியை வாயில் கவ்விக் கொண்டு ஒரு குளத்தில் இறங்கியது. முழங்கால் ஆழம் வரைக்கும் சென்றது. கால்களிலிருந்த பூச்சிகள் உடம்பிலே ஏறிவிட்டன. பிறகு கழுத்தளவு நீருக்குள் சென்றது. பூச்சிகள் யாவும் தலையில் போய் அமர்ந்து கொண்டன. பிறகு அந்த நாய் முகத்தில் பாதி மறையும்படி மூழ்கியது. தெள்ளுப்பூச்சிகள் அதன் வாயில் இருந்த குச்சியில் மொய்த்துக் கொண்டன. பிறகு அந்த நாய் அந்தக் குச்சியை நீரில் விட்டுவிட்டது. தெள்ளுப் பூச்சிகளின் தொல்லையினின்று அது விடுதலை பெற்றது.

மனத்தில் எத்தனையோ பூச்சிகள் இருக்கின்றன. காமம், குரோதம் முதலிய அவகுணங்கள் அதில் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. இறைவனுடைய கருணைக்கு ஆளாகி மெல்ல மெல்லப் பக்குவம் ஏறி வரும்போது அந்தக் குணங்கள் ஒழியத் தொடங்கும். இறைவனுடைய கருணை வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டால் வினைகள் யாவும் ஒழிந்து விடும். அவ்வாறு இறைவன் மணிவாசகரைத் தன் கருணை வெள்ளத்தில் ஆழ்த்தி முன்பு மொய்த்திருந்த வினைகளையெல்லாம் போகும்படி செய்து விட்டானும்.

**தன் கருணை வெள்ளத்து அழுத்தி**
**வினை கடிந்த வேதியனை.**

இறைவன் வேதத்தை அருளியவன்; வேதத்தை எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பவன்; வேதத்தின் பொருளாக இருப்பவன். அதனால் அவனை,

"வேதியா வேத கீதா"

என்று அருளாளர்கள் பாடுவார்கள். ஆகவே 'வினைகடிந்த **வேதியனை**' என்றார். அந்தண உருவம் கொண்டு தம்மை ஆட்கொண்டதை எண்ணியும் அவ்வாறு சொன்னார்.

திருப்பெருந்துறையில் சிவபெருமான் மாணிக்க வாசகரை ஆட்கொண்டான். அவரை ஆட்கொண்ட துறை அது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வோரிடத்தில் அநுக்கிரகம் கிடைக்கும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொருவர் குடும்ப வைத்தியராக இருப்பார். அவ்வாறு திருப்பெருந் துறையில் எழுந்தருளிய பிறவிப் பிணி மருத்துவனாகிய இறைவன் அவ்விடத்துக்கு வந்த மணிவாசகரை ஆட்கொண்டான்.

எல்லாரும் சென்று உடம்பைக் காட்டி மருந்து பெற்றுச் சிகிச்சை பெறும் பொதுமருத்துவமனைகளும் நாட்டில் இருக்கின்றன. அதுபோலப் பொதுவான தலம் ஒன்று இருக்கிறது; அதற்குப் பொது என்றே பெயர் அமைந்திருக்கிறது.

"பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்"

என்று **கீர்த்தித் திருவகவலில்** வருகிறது. அதற்குச் சிற்றம் பலம் என்று பெயர். 'பொது நடத்தரசாகிய புண்ணியன்' அங்கே யாவரும் காண நிலைபெற்று நின்று ஆடுகிறான். அது தில்லை என்னும் திருத்தலத்தில் இருக்கிறது. அங்கே அவன் புகுந்து சிற்றம்பலத்தில் மன்னுகிறான். அங்கே அவன் மன்னுவதால் யாவரும் கண்டு தரிசித்துப் பேறு பெற எளிதாக இருக்கிறது.

"மன்னுக தில்லை, வளர்கநம் பத்தர்கள்"

என்று அதன் பெருமையை நினைந்து அருளாளர்கள் வாழ்த்துவார்கள்.

**தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்.**

அவன் சிற்றம்பலத்தில் நிலையாக வாசம் செய்தாலும் அடியார்கள் அழைத்தால் அவர்களுக்கு அருள் செய்ய அங்கே எழுந்தருள்வான். கடுமையான நோயாளிகளை அவர்கள் வீட்டுக்கே சென்று பார்க்கும் மருத்துவரைப் போல அவன் அடியார்களை நாடி வருவான். டாக்டர்கள் கார் வைத்திருக்கிறார்கள். உல்லாசப் பயணத்துக்காக அன்று; நோயாளிகள் உள்ள இடத்துக்கு விரைந்து சென்று கவனிப்பதற்காக வேகமாகச் செல்லும் வாகனத்தை வைத்திருப்பார்கள். இறைவனும் விடை யென்னும் வாகனத்தை வைத்திருக்கிறான். அடியார்கள் உள்ள இடத்துக்குச் சென்று அருள் பாலிப்பவன் என்பதையே அந்த வாகனம் உணர்த்துகிறது.

இறைவனுடைய திருவுருவம், அவனுடைய அங்கங்கள், உபாங்கங்கள், பிரத்தியங்கங்கள் யாவையுமே சில கருத்துக்களைக் குறிப்பன. நுண்பொருளைப் பருப் பொருளாகக் காட்டினால்தான் விளங்குமென்று இறைவன் அவற்றைக் கொண்டிருக்கிறான். அவன் விடையூர்தியை உடையவனாக இருப்பது, கருணையினால் அடியார் வேண்டு மிடம் செல்லும் கருணையாளன் என்பதைக் காட்டுவது.

அவனுடைய இடபவாகனம் மந்தமாக நடப்பது அன்று; வேகமாக நடப்பது; இறைவனுடைய கருணையின் வேகத்துக்குத் துணை செய்வது.

**ஒல்லை விடையானை.**

"அத்தகைய பெருமானைப் பாடுவோம்" என்று நிறைவு செய்கிறார் மணிவாசகர்.

**ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய்!**

தமக்கு அருள் செய்த பெருங்கருணையைப் பாராட்டி, மற்றவர்களும் மெய்யன்புடையவர்களானால் வந்து கண்டு நலம் பெறும்படி பொதுவான சிற்றம்பலத்தில் மன்னு கின்றான் என்றும், அன்பு முறுகி நின்றால் அவர்கள் உள்ள இடத்துக்கே சென்று அருள் வழங்குவான் என்றும் அறி விக்கும் வகையில் இந்தத் திருப்பாசுரத்தைப் பாடுகிறார் மணிவாசகப் பெருமான்.

**கல் ஆம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை**
**வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றிக்**
**கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை**
**வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்**
**தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்**
**ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய்!**

* அம்மானை ஆடும் பெண்ணே, கல் ஆக நெகிழ்ச்சி யின்றியுள்ள மனத்தினால் இழிந்து, அன்பருடன் சேர முடியாமல் கடை நிலத்தில் உள்ள, நாய் போலத் தூய்மை யின்றிக் கிடந்த அடியேனை, எல்லாம் வல்ல பிரானும் தென்னாட்டைத் தனக்குரிய நிலமாகக் கொண்டு திருப் பெருந்துறையில் நித்திய வாசம் செய்பவனுமாகிய, எனக்குச் சிவப்பித்தை உண்டாக்கி, மனமென்னும் கல்லைப் பிசைந்து நெகிழ்ச்சியும் சுவையும் உடைய கனி யைப் போல ஆக்கி, தன்னுடைய கருணையாகிய வெள்ளத் தில் அழுத்தி எல்லாவற்றையும் மறக்கச்செய்து, பிறவிக்குக் காரணமாகிய வினைகளையெல்லாம் அழித்த அந்த அநாதி அந்தணனை, யாவரும் தன்னைத் தரிசனம் செய்து பேறு பெறும்பொருட்டுத் தில்லையம்பதியிலே எழுந்தருளித் திருச்சிற்றம்பலமாகிய பொதுவில் தங்கியுள்ளவனும், அடியார் உள்ள இடத்துக்குப் போவதற்கு வேகமாகச் செல்லும் இடபவாகனத்தை உடையவனுமாகிய சிவபெரு மானைப் பாடுவோம்.*

[கல்லா மனத்துக் கடையேன் என்று பிரித்துக் கல்வி கல்லாத மனத்தையுடைய கடையவனாகிய யான் என்றும் பொருள் கொள்ளலாம். "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்று **சம்பந்தர்** கூறுவார். வல்லாளன்-சர்வ சக்திமான். கல்லை—மனமாகிய கல்லை, மனத்தைக் கனி யாக்கி என்னைக் கருணை வெள்ளத்தில் ஆழ்த்தினான் என்க. வினை—பாவம்; பிறவிக்குக் காரணமாகிய கன்மங்கள், பெருந்துறையானாகிய வேதியனை என்று கூட்டுக. ஒல்லை—விரைவு. பாடுதும்—பாடுவோம். காண்: அசை.]

**திருவம்மானையில் 5-ஆவது பாட்டு இது.**

# 6. கருணைத் தேன்

அம்மானை ஆடும் பெண்களில் இருவர் பேசிக் கொள்கிறார்கள்.

**ஒருத்தி:** தோழி, இதைக் கேட்டாயோ?

**தோழி:** என்ன சொல்கிறாய்?

**அவள்:** ஒருவன் ஒரு மாயம் செய்தானே; அதைச் சொல்கிறேன். அதைப்பற்றி முன்பு கேட்டிருக்கிறாயோ?

**தோழி:** கேட்டதில்லையே! இப்போது சொல்; கேட்கிறேன்.

**அவள்:** அவன் யார் தெரியுமா?

**தோழி:** தெரியாதே!

**அவள்:** நீ பெருந்துறைக்குப் போயிருக்கிறாயா?

**தோழி:** போயிருக்கிறேன்.

**அவள்:** அங்கே திருக்கோயிலுக்குப் போனதுண்டா?

**தோழி:** திருப்பெருந்துறைக்குப் போய் இறைவன் திருக்கோயிலுக்குப் போகாமல் இருப்பார்களா? அங்கே போவதே அவனைத் தரிசிப்பதற்குத்தானே?

**அவள்:** கோயில் திருமதிலைப் பார்த்திருக்கிறாயா?

**தோழி:** ஆம். அந்தத் திருமதில்கள் சுண்ணாம்பு தீட்டப் பெற்று வெள்ளை வெளேரென்று இருக்கும். சுத்த

சத்துவத்தின் அடையாளம் வெண்மை. அந்தச் சூழல் சத்துவகுணம் நிரம்பியது என்பதை அந்த வெண்ணிறமே காட்டும்.

**கேட்டாயோ தோழி. கிறிசெய்தவாறு. ஒருவன்?**
**தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்.**

**அவள்:** அந்தப் பெருந்துறை பாண்டி நாட்டில் உள்ளது. தென்னனாகிய பாண்டியனது அரசாட்சியில் இருப்பது அது. அந்தத் திருத்தலத்தை அடிக்கடி அவன் தரிசிக்கலாம். அத்தகைய பேறு அவனுக்குக் கிடைத்திருக்கிறது. சிவபெருமான் எனக்குச் செய்த திருவருளை எண்ணிப் பார்க்கையில் வியப்பாக இருக்கிறது. ஏதோ மாயவித்தை செய்தது போலத் தோன்றுகிறது.

**தோழி:** என்ன மாயம்?

**அவள்:** நான் எப்படி இருந்தேன்! ஒன்றுக்கும் பற்றுதவளாகிய நான் எந்த விதத் தகுதியும் இல்லாதவளாக, அறியாமை மிக்கவளாக இருந்தேன். அத்தகைய என்னிடம் மாயம் செய்தான்.

**தோழி:** என்ன மாயம்? ஏமாற்றிவிட்டானு?

**அவள்:** என்னை ஏமாற்றவில்லை. என்னையே மாற்றி விட்டான்; நான் பெறுத அநுபவங்களைப் பெறச் செய்து விட்டான்.

**தோழி:** சற்றே விளக்கமாகச் சொல்.

**அவள்:** நான் பெருந்துறை சென்றேன். அங்கே அவன் எழுந்தருளி என்னை ஆட்கொண்டான். இதுவரையில் வேறு யாரும் எனக்குக் காட்டாதவற்றையெல்லாம் காட்டினன். இதுவரையில் கண் இருந்தும் குருடியைப் போல இருந்த எனக்கு ஞானக் கண்ணைத் திறக்கப்பண்ணி,

இதுகாறும் காணாத அற்புதக் காட்சிகளைக் காணச் செய்தான்.

**காட்டாதன எல்லாம் காட்டி**

**தோழி :** என்ன என்ன காட்டினான்?

**அவள் :** அவன் அருளைப் பெறுவதற்கு முன் இந்த உலகத்தை நான் பார்த்த பார்வையே வேறு. பேதபுத்தியால் பார்த்தபடியால் எல்லாம் வெவ்வேருக, நானு விதமாகத் தோற்றின.

**தோழி :** இப்போது என்ன ஆயிற்று?

**அவள் :** எல்லாம் அவன் மயமாகத் தோற்றுகின்றன. அவன் சிவத்தையே காட்டிவிட்டான். மங்களமும் கருணையும் நிறைந்த சிவத்தைத் தரிசித்தேன். அவனே அந்தச் சிவந்தான். அவன் தன்னையே உள்ளவாறு காட்டினான். அந்தக் காட்சியினால் மெய்யுணர்வு பெற்ற யான் ஒரே வியப்பில் மூழ்கினேன்.

**தோழி :** பிறகு?

**அவள் :** அவனுடைய வடிவத்தைக் கண்டு மயங்கி நிற்கையில் நான் பற்றிக் கொள்ளும்படி தன்னுடைய திருவடித் தாமரைகளைக் காட்டினான்.

**தாள் தாமரை காட்டி.**

**தோழி :** அவன் தாளைக் கண்டதனால் உனக்கு என்ன கிடைத்தது?

**அவள் :** அவனுடைய திருத்தாளே இன்ப வடிவானது. அதுவே மோட்சம் என்பது. அது தாமரை போல ஒளிர்ந்து தேன் பில்கியது.

**தோழி :** தேனு?

**அவள் :** ஆம்; அதில் கருணை யென்னும் தேன் பொங்கியது. அதை நான் பெற்று நுகர்ந்தேன். அந்தத் தேனை உண்டதனால் என்னுடைய நிலையே மாறிவிட்டது.

**தன் கருணைத் தேன் காட்டி.**

**தோழி :** எவ்வாறு மாறியது?

**அவள் :** வண்டு தேனைக் குடித்து மயங்கிக் கிடப்பது போல நான் ஆகிவிட்டேன். இயல்பாக நான் செய்யும் செயல்களெல்லாம் வேறுபட்டன. உலகத்துப் பொருள்களைக் கண்டு, இவையே நமக்கு இன்பம் தருவன என்று இருந்த நிலை மாறிவிட்டது. விளையாட்டுப் பொருள்களைக் கண்டு எவ்வளவு மகிழ்ச்சியோடு முன்பெல்லாம் ஈடுபடுவேன்! இப்போது அவற்றிலே மனம் செல்லவில்லை. உணவு, உடை, அணிகலன் இவற்றில் எவ்வளவு விருப்பம் வைத்திருந்தேன்! அவை யாவும் அவனுடைய கருணைத் தேனுக்கு முன்னால் பொருளற்றுவிட்டன. அந்தத் தேனை உண்ட மயக்கத்தால் பித்துப்பிடித்தவளைப் போல ஆகிவிட்டேன். அவனையும் அவன் கருணைத் தேனை வழங்கியதையும் எண்ணி எண்ணிப் பூரிக்கிறேன். மகிழ்ச்சியினால் புன்முறுவல் பூக்கிறேன். நகை செய்வதற்குக் காரணம் யாதும் இல்லாமல் இருக்க, நானாகச் சிரிப்பதைக் கண்டு, என்னைப் பார்த்தவர்கள் என்னைக் கண்டு சிரிக்கிறார்கள். என்னைப் பித்தி என்று சொல்லி நாட்டில் உள்ளவர்கள் நகை செய்கிறார்கள்.

**நாட்டார் நகை செய்ய.**

**தோழி :** அப்படிப் பலரும் உன்னைப் பார்த்து நகை செய்யும்படி நீ இருப்பானேன்? அதனால் உனக்கு என்ன லாபம்?

**அவள் :** முன்பெல்லாம், இறைவன் திருவருளுக்கு ஆட்பட்டவர்கள் இருக்கும் நிலையைக் கண்டு நானே சிரித்ததுண்டு. அவர்களுடைய புறக் கோலத்தையும், தம் உடம்பைக் கவனியாமல் இருப்பதையும், எல்லாப் பெண்களையும் போல உலகியலில் ஈடுபட்டு ஓடியாடி விளையாடாமல் இருப்பதையும், எப்போதும் எதையோ நினைத்துக் கொண்டு மகிழ்வதையும் கண்டு நானே பரிகசித்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் அதன் உண்மை தெரிகிறது. இந்த உலக சுகம் பெரிதென்ற நிலை மாறி வேறொரு பெரிய இன்பத்தைக் கண்டவர்கள் அவர்கள் என்ற உண்மை புலனாகிறது.

**தோழி:** என்ன இன்பம் அது?

**அவள்:** இந்த உலகத்தை நாம் வாழும் இடமாகவும் இந்த ஊரை நம் சொந்த ஊராகவும் இந்த வீட்டை நமக்கே உரிய வீடாகவும் எண்ணி இதுகாறும் ஏமாந்திருந்தேன்; உண்மையை உணராமல் மயங்கியிருந்தேன்.

**தோழி:** இப்போதும் தேனுண்ட மயக்கத்தில்தானே இருக்கிறாய்?

**அவள்:** இந்த மயக்கம் வேறு; அந்த மயக்கம் வேறு. அந்த மயக்கம் உண்மையல்லாதவற்றை உண்மை என்று கருதிய மயக்கம்; 'பொருள் அல்லவற்றைப் பொருளாகக் கருதும், மருள்.' அதனால்தான் பிறவித்துன்பத்தை அடைகிறோம். இந்த வீடு, வீடு அன்று. உயிர்குடியிருக்கும் இந்த உடம்பே நிலையான இல்லம் அன்று. அப்படியிருக்க நாம் குடியிருக்கும் இந்தக் கட்டிடம் நிலையாகுமா? இவையெல்லாம் உண்மை அறியாத மயக்கத்தால் பற்றியிருக்கும் இடங்கள். இவை கீழானவை. ஆனால் உண்மையான வீடு இன்னது என்பதை நான் இப்போது உணர்ந்து

கொண்டேன். அதுவே எல்லாவற்றிற்கும் மேலானது. நானும் என்போன்ற அடியார்களும் அதை அடையும்படி அவன் செய்தான்.

**நாம் மேலை வீடு எய்த.**

**தோழி:** அவ்வாறு அந்த வீட்டை எய்துவதற்காக அவன் என்ன செய்தான்.

**அவள்:** பொன்னுக்கும், பொருளுக்கும், ஆடைக்கும், அணிக்கும், உணவுக்கும், உறையுளுக்கும் ஏங்கிக் கிடக்கும் விருப்பம் ஒழிந்தது. யார் யாரையோ நச்சி அவற்றைப் பெற இரந்து நிற்கும் அவலம் போயிற்று. என்னிடம் இல்லாத பொருளைப் பெறுவதற்காக, அதை உடையவரிடம் சென்று இரந்து, அவருக்கு ஆளாகித் தொண்டு செய்து வாழ்ந்த உலகியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது. இப்போது நானும் அவன் அடியார்களும் ஆர்க்கும் குடியல்லோம். அந்தக் கோமானுக்கே என்றும் மீளா அடிமைகளாகிவிட்டோம். நாமா ஆனோம்? அவனே தன் கருணையினால், இந்த நிலையற்ற வீட்டை விட்டு நிலையான வீட்டைப் பெறும்படி எங்களை வந்து ஆண்டு கொண்டான். 'ஒரு பூதரும் அறியாத் தனி வீட்டில் உரை உணர்வு அற்று இரு, பூதவீட்டில் இராமல்' (**கந்தர் அலங்காரம்**) என்றான்.

**தோழி:** அவனுக்கு ஆளாக்கி உரிமைப் படுத்த யாரை யேனும் அனுப்பினானா?

**அவள்:** அவனே எழுந்தருளி வந்து, காட்டாதன எல்லாம் காட்டி, சிவம் காட்டி, தாள் தாமரை காட்டி, தன் கருணைத் தேன்காட்டி, ஆளாகத் தானே கொண்டான். இது எத்தனை வியப்பான செயல்! நினைத்தால் மாயம்போல

இருக்கிறதே! அப்படி அவன் ஆளாகக் கொண்டு ஆண்டு கொண்ட திறத்தை எண்ணிப் பாடி அம்மானை ஆடுவோம்.

**ஆள் தான் கொண்டு ஆண்டவா பாடுதும்காண் அம்மானாய்!**

இறைவன் திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டு இன்பம் தந்து, இனிப் பிறவாமல், மேலான வீட்டை அடையலாம் என்ற உறுதியைத் தந்த பெருங்கருணையை நினைந்து, தம்மைப் பெண்ணாக்கிக் கொண்ட மணிவாசக நாயகியார், தோழிக்கு உரைப்பதுபோலப் பாடுகிறார்.

**கேட்டாயோ தோழி, கிறிசெய்த வாறுஒருவன்?**
**தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்**
**காட்டா தனஎல்லாம் காட்டிச் சிவம்காட்டித்**
**தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி**
**நாட்டார் நகைசெய்ய, நாம்மேலை வீடுஎய்த,**
**ஆள்தான்கொண்டு ஆண்டவா பாடுதும்காண் அம்மானாய்!**

* தோழி, அம்மானை ஆடும் பெண்ணே, ஒப்பற்ற வனாகிய இறைவன் மாயம் செய்த விதத்தைக் கேட்டாயோ? சொல்கிறேன் கேள். சுதை தீட்டுதலைப் பெற்ற திருமதில் புடை சூழ்ந்ததும், பாண்டியனுக்குரியதுமாகிய திருப்பெருந்துறையில் நித்தியவாசம் செய்யும் சிவபெருமான், அடியேனுக்கு இதுகாறும் காட்டாத மெய்ஞ்ஞானக் காட்சிகளையெல்லாம் காட்டி, சிவ பரம்பொருளாகிய தன்னையே நான் தரிசிக்கும்படி செய்து, தன்னுடைய திருவடித்தாமரையைக் காட்டி, அதிலிருந்து பொங்கும் கருணையென்னும் தேனை நுகரச்செய்து, நாட்டில் உள்ளவர்களெல்லாம் அடியார்களாகிய நாங்கள் நிலைமாறியிருப்பதைக் கண்டு நகை செய்யவும், நாங்கள் எல்லாவற்றிற்கும் மேலான வீட்டின்பத்தை அடையவும், அந்தப் பெருமான் தானே எழுந்தருளி வந்து தனக்கு

அடிமையாகச் செய்து ஆண்டுகொண்ட அற்புதத்தைப் பாடுவோம்.*

[கிறி - மாயம்; "கண்டும் கண்டிலேன் என்னகண் மாயமே!" என்று மணிவாசகர் பிறிதோரிடத்தில் சொல்வார். 'தோழி, ஒருவன் கிறி செய்தவாறு கேட்டாயோ?' என்று கூட்டிப் பொருள் செய்க. திட்டு திட்டப்பெற்ற சுதை: முதல் நிலை பெயராகிச் செயப்படுபொருளுக் காயிற்று. தென்னன்-பாண்டியன். "காட்டா தனவெல்லாம் காட்டிப் பின்னர்க், கேளா தனவெல்லாம் கேட்பித்து என்னை, மீட் டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான், எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே!" என்று பிறிதோரிடத்தில் இந்த மாய வித்தையைப்பற்றிச் சொல்லுகிறார் மணி வாசகர். சிவம் காட்டி- சிவமாகிய தன்னைக் காட்டி. தாளைத் தாமரையாக உருவகித்தவர் அதனோடு இயையக் கருணையைத் தேனாக உருவகம் செய்தார். தாமரை காட்டியது கண் காணும்படி. தேன் காட்டி என்பது தேனின் சுவையை நுகரச் செய்து என்று பொருள் கொள்வதற்குரியது. காண்டல், அநுபவத்தில் உணர்வதற்கும் வரும்; 'ருசி கண்ட பூனை' என்ற வழக்காலும் இதை அறியலாம். நாட்டார் - உலகியலிலே நாட்டம் கொண்டு அதையே பெரிதென்று பாராட்டும் இயல்புடைய நாட்டில் உள்ள மக்கள். நகை செய்ய 'இவள் இருந்தவாறு என்னே!' என்று பரிகசித்துச் சிரிக்க. "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப" (போற்றித் திருவகவல், 68) என்றும், "உலகமெல்லாம், சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (திருத்தெள்ளேணம், 3) என்றும் பிற இடங்களிலும் சொல்வார். மேலை: ஐ, சாரியை. மேலான வீடு என்றது முத்தியை. வீடு

என்பதற்குத் தங்கு என்றும் நீங்கு என்றும் பொருள்கள் உண்டு. நாம் வாழும் வீடு சில காலம் தங்குவதற்குரிய விடுதி போன்றது; இதைத் துச்சில் என்பார் வள்ளுவர். முத்தியாகிய வீடு எல்லாப் பாசங்களையும் விட்டு விடுதலையடைந்து பெறுவது. "இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்று ஔவையார் கூறுவது காண்க. தான் ஆள் கொண்டு; தான்-சிவபெருமான். கொண்டவா-கொண்டவாற்றை; கொண்ட அற்புதத்தை. காண்: அசை. அம்மானாய்-அம்மானை ஆடும்பெண்ணே.]

இது திருவம்மானையில் ஆறாவது பாடல்.

# 7. தாயான தத்துவன்

நினைப்பும் மறப்பும் நமக்கு இயல்பாக உள்ளவை. ஆனால் நான் என்ற உணர்வு நம் உள்ளத்தின் அடித்தளத்தில் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற மனோ விருத்திகளில் ஒன்றாகிய அகங்காரமே தான் என்ற உணர்வு. அது எப்போதும் நம்மிடமிருந்து நீங்குவதில்லை. எல்லாவற்றையும் மறந்து உறங்கும்போதுகூட அந்த உள்ளுணர்வு இருந்துகொண்டு தான் இருக்கும்.

மெய்யன்பர்களுக்கு அந்த உள்ளுணர்வு வேறு வகையாக இருக்கும். இறைவனுக்கு அடியேன் என்ற உணர்வே அது. அந்த நினைவு ஒரு கணமும் அவர்கள் உள்ளத்திலிருந்து நீங்குவதில்லை. அவர்கள் எப்போதும் ஓயாமல் இறைவனை உள்ளத்தில் உள்கும் இயல்புடையவர்கள்.

**ஓயாதே உள்குவார்.**

அவ்வாறு உள்குவாருடைய தூய உள்ளத்தில் இடம் பிடித்துக்கொண்டு இறைவன் தங்குவான். மற்றவர்களின் உள்ளத்தில் அவன் இருந்தாலும் அவன் உள்ளான் என்ற உணர்வு அவர்களுக்கு இருப்பதில்லை. அன்பர்களோ எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பதனால் அவர்கள் உள்ளத்தில் என்றும் மறைவின்றி அவன் காட்சி தந்து

கொண்டிருப்பான்; அவர்களுடைய அந்தரங்கத்தில் நின்று அவர்களை வழிநடத்துவான்.

**ஓயாதே உள்குவார் உள் இருக்கும் உள்ளானை.**

ஆனால் மற்றவர்களுக்கு நெடுந்தூரத்தில் இருப்பவன் அவன்.

> "காண்டற் கரிய கடவுள் கண்டாய்
> கருதுவார்க்கு ஆற்ற எளியன் கண்டாய்"

என்பது அப்பர் திருவாக்கு. "புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க" என்று மணிவாசகரே பாடுவார். அவன் மற்றவர்களுக்குச் சேயோனாக இருப்பான்.

**சேயானை.**

தீய சக்திகளை யெல்லாம் அழிக்க வல்லவன் அவன், அதுவே அவனுடைய பெருவீரம்; சேவகம். அவன் ஆற்றிய வீரச் செயல்களை நினைவுறுத்தும் எட்டுத் தலங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றை அட்ட வீரட்டானம் என்பர். வீரஸ்தானம் என்பதே வீரட்டானம் எனத் தமிழில் மருவி வந்தது, மூலஸ்தானம் என்பது மூலட்டானம் என்று வருவது போல. வீரட்டானம் என்பதை வீரட்டம் என்றும் வழங்குவது உண்டு. அந்த வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள வீரன் அவன்.

**சேவகனை.**

அவன் எங்கும் இருந்தாலும் சில தலங்களைத் தன்னுடைய அருளை வழங்கி, அன்பர்களைக் குள்ளக்குளிர அருளில் குளிக்கும்படி செய்யும் துறைகளாகக் கொண்டிருக்கிறான். அவற்றில் பெரிய துறையாக இருப்பது,

பாண்டியனுடைய ஆட்சிக்குள் இருக்கும் திருப்பெருந் துறை.

**தென்னன் பெருந்துறையில் மேயானை.**

அந்தத் தலத்தை விரும்பி வந்து நித்திய வாசம் செய்கிற வன் அவன்.

அநாதி அந்தணனாகிய அவனை வேதியன் என்று அடிக் கடி கூறுவார் மாணிக்கவாசகர்.

**வேதியனை.**

உலகத்தில் உள்ள ஆன்மாக்களுக்கு அருளை வழங்கு கிறவன் அவன். அவனுடைய சக்தி அருள். அந்த அருட் சக்தியே அம்பிகையாக வடிவெடுத்து இலங்குகிறது. அந்தப் பெருமாட்டியைத் தன்னுடைய ஒரு பாதியில் வைத்து மாதிருக்கும் பாதியனாக, அர்த்தநாரீசனாக அவன் எழுந்தருளியிருக்கிறான். அவன் எந்த அளவு இருக்கிறானோ, அதற்குச் சமமாக அவன் அருள் இருக்கிறது. சத்தன் பாதி, சக்தி பாதியாக இணைந்து நிற்கும் பெருமான் அவன்.

**மாது இருக்கும் பாதியனை.**

அத்தகைய பெருமான் மணிவாசகரை ஆட்கொண் டான். மணிவாசகர் இறைவன் திருவருளைப் பெற எல்லா வகையிலும் சிறந்த தகுதி பெற்றவர். ஆனால் அவர் தம்மை அப்படிச் சொல்லிக் கொள்வதில்லை. இழித்தே சொல்லிக் கொள்வார். சிறியவர்களே தம்மைத் தாமே வியந்து பாராட்டிக் கொள்வார்கள்.

"பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்பது திருக்குறள். மற்றவர்கள் வியந்து பாராட்ட மாட்டார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்;

அதனால்தான் தாமே தம்மைப் பாராட்டிக் கொள்கிறார்கள் போலும்!

மணிவாசகப் பெருமான் தம்மை அடிக்கடி, 'நாயேன்' என்று சொல்லிக் கொள்வார். அழுக்கை நச்சி உண்பதும், ஒருகால் வெறுத்துக் கக்கியதை மீட்டும் உண்பதும், நல்லோர் அவையில் புகும் தகுதியில்லாததும் நாய்க்கு இயல்பு. அதுபோல அழுக்காகிய உடம்பை வளர்த்து, சிற்றின்பமாகிய அழுக்கை நுகர்ந்து, ஒருகால் தீயதை வெறுத்தாலும் மீட்டும் அதில் ஈடுபடுவதும், நல்லோர் சங்கத்தில் சேராமல் இருப்பதும் இழிந்தவர் இயல்பு. அத்தகைய இயல்புடையவராகத் தம்மை எண்ணிக்கொண்டு,

**நாயான நந்தம்மை**

என்று சொல்லுகிறார் மணிவாசகர்; பிற அடியார்களையும் சேர்த்துக் கொண்டு 'நந்தம்மை' என்கிறார்.

அத்தகைய இழிந்த நிலையில் இருந்த அவரை இறைவன் ஆட்கொண்டானும். அவர் நாய்; அவரை ஆட்கொண்டவன் நாயகன்.

**நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை.**

நாயாக இழிந்த நிலையில் இருந்த அவர் இறைவனுக்கு அடிமையாகி விட்டபிறகு அப்பெருமானுடைய செல்வப் பிள்ளையாகி விட்டார். அவன் எல்லோருக்கும் தாயாக இருக்கிறான். முரட்டுப் பிள்ளைகளிடம் தாய் போக அஞ்சுவாள். நல்ல பிள்ளைகளை அணுகிக் கொஞ்சுவாள். இங்கே இந்தப் பிள்ளை இழிந்த நிலையில் இருந்தாலும் கருணையினால் அவரிடம் வந்து தாயன்பு காட்டினான். அந்தத் தாய்த்தன்மை அவனிடம் என்றும் நிலை பெற்றிருப்பது. அவனே நிலையான உண்மைப் பொருள்; தத்துவன்.

தன் அன்புக்குரிய சேய் அழுக்குப் பண்ணிக் கொண்டாலும், அதைக் கண்டு அருவருப்படையாமல் அதன் அழுக்கைப் போக்கி அணைக்கும் தயை தாய்க்கு உண்டு. தான் பசித்திருந்தாலும் சேயின் பசியைப் போக்குவதிலே கண்ணாக இருப்பாள். அந்தக் குழந்தை மண்ணில் போய்ப் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தாலும், அதற்குப் பசிக்குமே என்று எண்ணி, ஓடிச் சென்று எடுத்து வந்து, நீராட்டி உணவூட்டுவாள். இறைவனும் தன் அன்பர்களுக்கு அவ்வண்ணமே அருள் செய்து சிவானந்தத்தை வழங்குவான்.

**தாயான தத்துவனே.**

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று, சிவபுராணத்தில் மணிவாசகர் கூறுகிறார்.

இந்த உலகம் பலவேறுபட்ட தோற்ற முடையது. பேதமே இதன் சொரூபம். இந்த உலகத்தில் எள்ளுள் எண்ணெய் போல இறைவன் இருக்கிறான். மாயை என்னும் திரை அவனை மூடிக்கொண்டு மறைத்து நிற்கிறது. அதனால் மக்கள் உலகத்தைக் காணுகிறார்களே யன்றி இறைவனைக் காண்பதில்லை. மாயை என்னும் திரையை நீக்கி விட்டுக் காண்கிறவர்கள் ஞானிகள். அவர்கள் மிகவும் அரியவர்களாகவே இருப்பார்கள்.

"மாயைஎனும் திரையை நீக்கி
நின்னையார் அறிய வல்லார்"

என்று தாயுமானவர் பாடுகிறார்.

மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் இந்த உலகத்தையே இறைவனாகக் காண்பார்கள். கோயிலில் இறைவனுக்குத் திரையைப் போட்டு அலங்காரம் பண்ணுவார்கள். அலங்காரம் முடிந்தவுடன் திரையை நீக்குவார்கள். அப்போது

இறைவனுடைய திருக்கோலத்தை நன்கு தரிசிக்கமுடியும். அதுபோல மாயை என்னும் திரை நீங்கிவிட்டால், எங்கும் இறைவன் ஒளிர்வதைக் காணலாம்.

" பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்"

என்று இந்த இருவேறு நிலைகளையும் திருமூலர் சொல்கிறார். மணிவாசகருக்குப் 'பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்'. எனவே, ஏழு உலகங்களும் அவனாகவே இருப்பதை உணர்கிறார்.

**தானே உலகு ஏழும் ஆயானை.**

அவன் அடியாரை ஆட்கொள்கிறான். காமம் முதலிய பொல்லாத குணங்களுக்கு ஆளாக நின்றவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றபிறகு அவர்களுடைய பார்வையே வேறாகிறது. மாயைப் படலம் நீங்கித் தெளிவு பிறக்கிறது. அவன் உலகம் முழுவதும் ஆகியவன் என்பதும், அவனே தம்மை ஆண்டு கொண்டு தம்மைத் தன் அருளாட்சியில் வாழும் குடியாகக் கொண்டு நலம் தருவான் என்பதும் புலனாகின்றன.

**ஆள்வானை.**

'அவனைப் பாடி அம்மானை ஆடுவோம்' என்று பெண்களோடு பெண்ணாக ஒன்றிப் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

**ஆள்வானைப் பாடுதும்காண் அம்மானாய்!**

அவனுடைய இயல்புகள் பல. அவன் கருணைச் செயல்கள் அளவிறந்தவை. அவன் புகழைப் பாடிக் கொண்டே இருக்கலாம். வாழ்நாள் முழுவதும் பாடினாலும் அதற்கு எல்லை காண முடியாது. அவனைப் பலபடியாகப் பாடி அம்மானை ஆட அழைக்கிறார் மணிவாசகப் பெருமான்.

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையில்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகுஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்!

*அம்மானை ஆடும்பெண்ணே, ஒரு கணமும் ஓய்தலின்றித் தன்னை நினைந்து வாழும் மெய்யன்பர்களுடைய அந்தரங்கத்தில் சலனமின்றி எழுந்தருளியிருக்கும் மெய்ப் பொருளை, அன்பர் அல்லாதவர்களுக்கு நெடுந்தூரத்தில் உள்ளவனை, பாண்டியனுடைய ஆட்சியில் நிலவும் திருப் பெருந்துறையில் விரும்பி நித்தியவாசம் செய்கிறவனை, அநாதி அந்தணனை, எம்பெருமாட்டியாகிய பராசக்தி இணைந்து அமர்ந்திருக்கும் ஒரு பாதியை உடைய அர்த்த நாரீசுவரனை, நாய் போல இழிந்த என்னையும் என்போன்ற அடியார்களையும் ஆளாக அடிமை கொண்ட தலைவனை, எமக்கு அன்னையாக நின்று தண்ணளி செய்யும் உண்மைப் பொருளை, வேறு ஏதும் இன்றித் தானே உலகம் ஏழுமாக ஆகியவனை, என்னைத் தன் அருளாட்சியில் அகப்படுத்தி ஆள்பவனைப் பாடுவோமாக!*

[ஓயாதே—இடையீடுபடாமல். உள்குவார் — உள்ளத்தே வைத்து மறவாமல் நினைந்திருப்பவர். உள்—உள்ளத்தில். உள்ளானை - என்றும் உள்ள நித்தியனை; சத்துப் பொருளை. சேயானை—அன்பர் அல்லாதாருக்குச் சேய்மையில் உள்ளவனை; செவ்வண்ணம் படைத்தவனை என்றும் கொள்ளலாம். சேவகன்—வீரன்; சேவகம்—வீரம். தென்னனுக்குரிய பெருந்துறை; தென்னன்—பாண்டியன். மேயானை—மேவுதலை உடையவனை; மேவுதல் என்பதற்கு விரும்புதல் என்றும், தங்குதல் என்றும் இரு பொருள் உண்டு; அவ்விரண்டையும் சேர்த்து விரும்பி வாழ்பவன்

என்று பொருள் கொள்வது சிறப்பு. மாது—உமாதேவி யார். நந்தம்மை என்றது பிற அடியார்களையும் உளப் படுத்திச் சொல்லியது. தம்: சாரியை. ஆட்கொண்ட— ஆளாகக் கொண்ட; அடிமையாக்கிய. நாயகன்—தலைவன். தத்துவம்—உண்மை. தானே: ஏகாரம் பிரிநிலை; தன்னை யன்றி வேறு யாறும் இன்றி இருப்பவன். காண்: அசை.]

இறைவன் தம்மை ஆளாக்கிக் கொண்ட பெருங் கருணையை நினைந்து உருகினார் மாணிக்க வாசகர்.

இது **திருவம்மானையில்** வரும் ஏழாவது பாட்டு.

# 8. புண் சுமந்த பொன்மேனி

இறைவன் மணிவாசகப் பெருமானுக்காகச் சில திருவிளையாடல்களைப் புரிந்தான். உலகமெல்லாம் காண அவன் அவற்றைச் செய்தான். மாணிக்கவாசகரின் பெருமையைப் பாண்டிய மன்னனுக்கு அறிவிக்கும் பொருட்டு அவன் கூலியாளாக வந்து பாண்டியன் அடித்த அடியைப் பெற்றான். மிகமிகச் சிறந்தவனாகிய அவன் மண் சுமக்கும் வேலைக்காரனாக எழுந்தருளி, அடிபட்டு, தன்னுடைய சர்வ வியாபகத் தன்மையை நிரூபித்தான். இதுபற்றிச் **சிவஞான வள்ளலார்** ஒரு பாடல் பாடுகிறார்.

திரிமூர்த்திகள் என்று பிரம விஷ்ணு சிவன் ஆகிய மூவரையும் சொல்வார்கள். மூவரையும் இனமாக வைத்துச் சொன்னாலும் மூவரும் ஒரு நிகரினர் அல்லர். சர்வ வியாபகத்தன்மை பிரம விஷ்ணுக்களுக்கு இல்லை. இது சைவர்களுடைய கருத்து.

எங்கும் வியாபித்திருப்பதைப் புலப்படுத்துவதற்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் அந்த மூவருக்கும் வாய்த்தன. அந்தச் சோதனையில் சிவபெருமானே தன் சர்வ வியாபகத் தன்மையை நிறுவினான். எப்படி?

பிரமன் ஒரு சமயம் குட்டுப்பட்டான். அகங்காரம் கொண்டிருந்த அவன் தலையில் முருகன் குட்டினான்.

பிரமன் எங்கும் பரந்திருந்தவனாக இருப்பின் அந்தக் சூட்டு எல்லார் தலையிலும் பட்டிருக்க வேண்டும். அப்படி ஆக வில்லை. ஆகையால் அவன் எங்கும் நிறைந்தவன் என்று சொல்ல இயலாது.

"எண்கணனைக் குட்டிய குட்டு எங்கேனும் பட்டதோ?" என்று கேட்கிறார் **சிவஞான வள்ளலார்**. அந்தக் குட்டை அருகில் இருந்த எவரும் படவில்லை. அப்படி இருக்க, அவனை எங்கும் பரந்துளன் என்று சொல்ல முடியுமா?

திருமாலுக்கும் அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தது. கண்ணனாக அவன் திருவவதாரம் செய்த காலத்தில் திருட்டுத் தனமாக வெண்ணெயைக் கவர்ந்து உண்ட போது அவனை யசோதை மத்தினால் அடித்தாள். அந்த அடி அவன் மேல்மட்டும் பட்டதே அன்றி, வேறு ஒருவர் மேலும் படவில்லை.

"மங்கைஅரி மேல் அடித்த மத்தடி போய் — எங்கேனும் பட்டதோ?"

என்று **சிவஞான வள்ளலார்** இரண்டாவது கேள்வியை விடுக்கிறார்.

ஆனால் பாண்டியன் இறைவனைப் பிரம்பால் அடித்த போது அந்த அடி எல்லார்மேலும் பட்டது:

"வானவர் மனிதர் நாகர்புள் விலங்கு
மாசுணம் சிதல்எறும் பாதி
ஆனபல் சரமும் மலைமரம் கொடிபுல்
ஆதியாம் அசரமும் பட்ட;
ஊனடை கருவும் பட்டன; தழும்போ
டுதித்தன; உயிரில்ஒ வியமும்
தான்அடிபட்ட சராசர சடங்கள்
தமக்குயிர் ஆயினேன் தழும்பு"

என்று திருவிளையாடற் புராணம் இந்த நிகழ்ச்சியைச் சொல்கிறது.

ஆனால், 'கண்ணன் அடிபட்ட புண்ணில் ஈ மொய்த்த போது அவன் குலுங்க, எல்லா உலகமும் சலித்தன' என்று காளமேகப் புலவர் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார்.

" வாரணங்கள் எட்டும் மகமேரு வும்கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால்—நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி னால்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது "

என்பது அந்தப் பாட்டு. சிவஞான வள்ளலார் காலத்தில் இந்தப் பாட்டு எழவில்லை. ஆதலின் அவர் இறைவனுடைய வியாபகத்தைப் பின்வருமாறு பாடினார்:

" எண்கணனைக் குட்டியகுட்டு எங்கேனும் பட்டதோ?
மங்கைஅரி மேல்அடித்த மத்தடிபோய்—எங்கேனும்
பட்டதோ? எங்கள் பரமன்மேல் பட்டஅடி
பட்டதே எவ்விடத்தும் பார்."

எது எப்படியாயினும் சிவபெருமான் பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனாகத் தான் என்பதற்குத் தட்டில்லை. மண் சுமந்த திருவிளையாடலால் அதை உணர்கிறோம்.

மணிவாசகப் பெருமான் தம்பொருட்டு இறைவன் மண் சுமந்து அடிபட்ட பெருங்கருணையை நினைக்கிறார். அவன் கூலியாளாக வரக்கூடியவனா? எவ்வளவு பெரியவன்! அவன் பரம் பொருள் அல்லவா? அவனுடைய பெருமையைப் பெரியவர்கள் பல மொழிகளிலும் பாடியிருக்கிறார்கள். அவனுடைய தன்மையைப் பண் அமைந்த பாடல்களால் பாடிப் புகழ்ந்திருக்கிறார்கள். அவை ஒன்று,

இரண்டா? அவை மலைபோலக் குவிந்திருக்கின்றன. அத் தகைய பாடற் பகுதியைப் படைத்தது அவன் பரிசு.

**பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்.**

அவன் அடிபட்டான். அவன் ஒரு பாதியில் மெல்லிய லாகிய அம்பிகை இடம் கொண்டிருக்கிறாள். அவளுக்கும் அந்த அடி பட்டிருக்குமே!

**பெண் சுமந்த பாகத்தன்.**

யாவருக்கும் தலைவனாகிய பெருமான் அடியார்கள் வந்து தரிசித்து உய்யும்பொருட்டுத் திருப்பெருந் துறையில் நித்திய வாசம் செய்கின்றான்.

**பெம்மான், பெருந்துறையான்.**

அவனுடைய கீர்த்தி எங்கும் பரவியிருக்கிறது. மனிதர்கள் பேசுவதை விடத் தேவலோகத்தில் உள்ள வர்கள் அதிகமாகப் புகழ்கிறார்கள். அவர்கள் அறிவுடைய வர்களாதலாலும் இறைவன் தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவனாகிய மகாதேவனாதலாலும் அவர்கள் புகழ்கிறார்கள். பக்தர்கள் நிலவுலகத்தில் இறைவன் திருவருள் பெற்று அவனை வாயாரப் புகழ்கிறார்கள். 'நாம் மட்டும் சும்மா இருக்கலாமா?' என்று விண்ணில் உள்ளவர்களும் அவனைப் புகழ்கிறார்கள். இப்படி இறைவனுடைய கீர்த்தி தேவ லோகத்திலும் பரவி நிற்கிறது.

**விண் சுமந்த கீர்த்தி.**

அவன் திருப் பெருந்துறையில் எழுந்தருளி அன்பர் களுக்கு எளிவந்தவனாக இருந்தாலும் அவனுடைய ஆட்சி

எல்லாப் பிரபஞ்சங்களிலும் பரவியிருப்பது. விரிந்து கிடக்கும் எல்லா மண்டலங்களுக்கும் அவன் ஈசன்.

**வியன் மண்டலத்து ஈசன்.**

அவனுடைய திருவடிவில் வேறு யாருக்கும் இல்லாத சிறந்த அடையாளம் ஒன்று இருக்கிறது. ஒருவனுடைய கண்ணைப் பார்த்தே அவன் இயல்பைத் தெரிந்து கொள்ளலாம். இறைவன் ஞானக் கண்ணை நெற்றியிலே கொண்டவன். இடக்கண்ணும் வலக்கண்ணும் பார்க்கும் பார்வையை விட நெற்றிக் கண் நடு நிலையில் நின்று பார்க்கும். அந்தப் பார்வையையுடைய கண்ணுதல் அவன்.

"இமையாத முக்கண் மூவரிற் பெற்றவன்"

என்று இந்தச் சிறப்பை மணிவாசகர் **திருக்கோவையாரில்** சிறப்பித்துப் பாராட்டுவார் ஆகவே அந்தத் தனிச்சிறப்புள்ள திருக்கண்ணை நினைக்கிறார் அவர்.

**கண் சுமந்த நெற்றிக் கடவுள்.**

இவ்வாறு பலராலும் புகழ்ந்து பாடப் பெற்ற பெருமான், அர்த்த நாரீசுவரனாக இருப்பவன், விண்சுமந்த கீர்த்தியை உடையவன், எல்லா உலகங்களுக்கும் தலைவன், வேறு யாருக்கும் இல்லாத ஞானக் கண்ணைப் பெற்றவன், ஓர் ஊரில் வந்து அடிபட்டான்.

இது எங்கோ சிற்றூரில் இரகசியமாக நடந்த செயலா? பாண்டியன் இராசதானி நகரத்தில் நடந்தது. மக்கட்கூட்டம் நிரம்பி ஒரே ஆரவாரம் நிறைந்துள்ள மதுரையில் யாவரும் காண அவன் அடிபட்டான். அடிபடுவதே அவமானம்; பிறர் காண அடிபடுவது பெரிய அவ

மானம்; நகரத்தில் உள்ள பலரும் காண, தன் பக்கத்தில் உள்ள உமாதேவியார் காண, அடிபட்ட அவமானத்தின் அளவை எவ்வாறு எடுத்துச் சொல்வது?

எல்லா மண்டலங்களுக்கும் ஈசனாக இருக்கிறவன் மண் சுமந்தது அவமானம். கூலியில்லாமல் தியாகபுத்தியுடன் செய்தால் அது தொண்டாகும். அவனே கூலி பேசிக் கொண்டான். முன்பணம் வாங்கிக் கொள்வது போலப் பிட்டு வாணிச்சியிடம் உதிர்ந்த பிட்டை முன்கூட்டியே வாங்கி உண்டான். வேலை செய்யாமலே கூலி பெறுவது சரியான செயல் அன்று. ஒவ்வொன்றையும் பார்த்தால் அவமானத்தின்மேல் அவமானமாகத் தோன்றுகிறது. குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் என்பார்கள். அப்படியாவது தன்னைவிடப் பெரியவனால் அடிபட்டானா? எல்லா உலகங்களுக்கும் ஈசனாகிய அவன் தமிழ் மண்டலத்தின் ஒரு பகுதியாகிய பாண்டி நாட்டு அரசனால் அடிபட்டான்! சே, எத்தனை இழிவு!

**கலி மதுரை**
**கூலி கொண்டு அக் கோவால் மொத்துண்டு.**

எல்லோருக்கும் அவரவர்கள் வினைக்கு ஏற்றபடி கூலி கொடுக்கும் இறைவன் இப்போது தானே கூலி பெற்றான். வியன் மண்டலத்து ஈசன் யாரோ ஒருவனால் மொத்துண்டான் இறைவனை அடித்தவன் அரிமர்த்தன பாண்டியன் என்று புராணம் சொல்கிறது. மணிவாசகர் அவன் பெயரைச் சொல்லவில்லை. பாண்டியன் என்றாவது சொல்லக் கூடாதா? அப்படியும் சொல்லாமல் சும்மா கோ என்று ஓரெழுத்தால் சொல்லி விட்டார். 'அந்தப் பாவி' என்று மனம் கடிந்து சொல்வது போல, அவனை நெடுந்தூரத்தில் வைத்துச் சுட்டுவது போல, 'அக்கோ' என்றார்.

மண் சுமந்த பெருமான், பெண் சுமந்த பாகன், விண் சுமந்த புகழான், கண் சுமந்த நெற்றியான் என்று சொல்லும் போது அவனுடைய பெருமைகளெல்லாம் எப்படி வெளிப்படுகின்றன! அவற்றையெல்லாம் அளவிறந்து சுமப்பதனால் அவன் பெருமையும் அளவிறந்து நிற்கிறது. அவன் இப்போது யாரோ ஓர் அரசனால் மொத்துண்டு புண் சுமந்தான்.

இது அவமானம் அல்லவா?

தன்னலத்துக்காக ஒன்றைச் செய்து அடிபட்டாலும், பிறர் பொருளை வவ்வியோ வேறு குற்றம் செய்தோ அடிபட்டாலும் அது அவமானமாகும். மாணிக்கவாசகருக்காக, அவர் விடுதலை பெறுவதற்காக, ஆண்டவன் அடிபட்டான். அது அவனுக்குப் புகழை உண்டாக்குமேயன்றி இகழ்ச்சியைத் தராது. தேச சுதந்தரத்துக்காக அடிபட்டும் உதைபட்டும் சிறைப்பட்டும் தொண்டாற்றிய பல பெரியவர்களை நாம் இப்போது போற்றுகிறோம். தேச நலத்துக்காக அவர் பட்டவற்றை இழிவாகக் கருதாமல் பெரிய தியாகமாகக் கொள்கிறோம். பாரத தேவியின் விடுதலைக்காக அவர்கள் அடிபட்டார்கள். இறைவனும் மாணிக்கவாசகரின் விடுதலைக்காக அடிபட்டான். அந்தப்பாண்டியன் கனவில் போய், "நீ அவனை விடுதலை செய்" என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்தால் மணிவாசகர் பெருமையை உலகம் அறிய இயலாது. இறைவன் ஒரு காரியம் செய்தால் அது பல வகையில் பயன்படும். அவன் பிட்டுக்கு மண் சுமந்தமையால் பிட்டு வாணிச்சி அருள் பெற்றாள்; பாண்டியன் மணிவாசகர் பெருமையை உணர்ந்தான்; உலகமே அவர் உயர்வை உணர்ந்து கொண்டது; இறைவன் எங்கும் பரந்தவன் என்ற உண்மை வெளிப்பட்டது; இறைவன் தன் அடியாருக்காக எந்த நிலைக்கும்

இறங்கி வருவான் என்ற பெருங்கருணை புலனுயிற்று. மண் சுமந்து புண் சுமந்த வரலாறு இவ்வாறு பல உண்மைகளை உணர்த்துகிறது.

**அக்கோவால் மொத்துண்டு**
**புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானுய்!**

அந்தத் திருமேனி எத்தகையது? "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்" என்று **பொன்வண்ணத் தந்தாதி** அந்தத் திருமேனியைப் புகழ்கிறது. முரட்டு மேனியில் புண்பட்டால் அது அவ்வள வாகத் தெரியாது ஆனுல் அவனுடைய பொன் மேனி அடிபட்டு அந்தப் புண்ணைச் சுமந்ததே! செந்நிறம் உடைய வர்கள் உடம்பில் சிறிது அடிபட்டாலும் மிகச் சிவந்து காட்டும். இறைவன் பொன்மேனியில் பட்ட அடி புண்ணைப் போலச் செக்கச் செவேலென்று காட்சியளிக்கிறது. கற்பனைக் கண்ணுல் மணிவாசகர் அதைப் பார்க்கிருர். 'ஐயோ! இந்தப் பொன் போலப் பொலிவு பெற்ற மேனியிலே புண்பட்டதே!' என்று இரங்குகிருர். அதே சமயத்தில் அந்தப் புண் சுமந்த மேனியே அவனுடைய பெருங்கருணைக்கு அடையாளம் என்று எண்ணிப் பார்க் கிருர். 'அந்தப் புண் சுமந்த மேனியையே பண் சுமந்த பாடலால் பாடலாம். வாருங்கள்' என்று அம்மானை ஆடும் பெண்களை அழைக்கிருர்.

**புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானுய்.**

ஆண்டவன் அருள் சுமந்து வந்து, அருட்சத்தியையே சுமந்து வந்து, மண் சுமந்து, புண் சுமந்து, விண் சுமந்த கீர்த்தியைச் சுமந்து, பண் சுமந்த பாடற்பரிசைப் படைத்து விளங்குகிருன். இந்தப் பாட்டு பக்தியைச் சுமந்து, பண்ணைச் சுமந்து, சுவையைச் சுமந்து, சொல் நயத்தைச்

சுமந்து, உருக்கும் இயல்பைச் சுமந்து கொண்டு விளங்குகிறது.

**பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,**
**விண்சுமந்த கீர்த்தி, வியன்மண் டலத்தீசன்,**
**கண்சுமந்த நெற்றிக் கடவுள், கலிமதுரை**
**மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, இசையைத் தாங்கிய பாடல்களுக்கு உரிய இயல்புகளைத் தனக்கு உரியனவாகக் கொண்டருளியவனும், உமாதேவியாகிய பெண்ணைத் தாங்கிய வாம பாகத்தை உடையவனும், எங்கள் தலைவனும், திருப்பெருந்துறையென்னும் தலத்தில் நித்திய வாசம் செய்பவனும், தேவலோகத்தில் நிரம்பித் தங்கிய புகழை உடையவனும், விரிந்த அண்டங்களுக் கெல்லாம் ஈசுவரனும், கண்ணைத் தாங்கிய திருநுதலைப் பெற்ற கடவுளும் ஆகிய சிவபெருமான் இந்த எளியேன் பொருட்டு, மக்கட் கூட்டம் நிரம்பியதனால் ஆரவாரம் மிக்க மதுரையில், மண்ணைச் சுமந்து, அதற்குரிய கூலியையும் பெற்றுக் கொண்டு, அந்த மன்னனால் அடிபட்டு, அதனால் உண்டான புண்ணைத் தாங்கிய திருமேனியை நாம் பாடுவோம்.*

[பண்-இராகம், பாடல் பண்ணோடு இருக்கிறது. பாடலுக்குரிய பரிசு; பாடலாகிய பரிசு என்றும் கொள்ளலாம். படைத்தருளும் சிவன். படைத்தருளும் என்பது அடுத்துவரும் பெண்ணுக்கு அடையாகாமல், பெண் சுமந்த பாகத்தன் என்று அனைத்தும் ஒரு பெயராக நிற்க, அதற்கு அடையாயிற்று. பெண் சுமந்த பாகத்தன் என்பது சிவ பெருமான் என்று ஒரு பெயர் போல நின்றது. பெருமான்

என்பது பெம்மான் என்று விகாரப்பட்டு நின்றது. விண்ணும் தாங்காத கீர்த்தி. மண்டலம் என்பது வட்ட வடிவுள்ள அண்டங்களையெல்லாம் குறித்தது; நிலவட்டம், ககனவட்டம் என்று சொல்வது மரபு. கலி-ஆரவாரம்; மனிதர் கூடுவதனாலும் விழாக்களாலும்நிறைந்த ஆரவாரம். அக்கோ: உலகறி சுட்டு; பண்டறி சுட்டு என்றும் கொள்ளலாம். கோ என்று சிறப்பின்றிப் பொதுவகையால் சுட்டினார், அவன் செய்த செயலின் இழிவை நோக்கி; யாரோ ஒரு சாத்தன் என்று பராமுகமாகச் சொல்வது போல நின்றது. மொத்துண்டு என்றது அடித்த அடியின் கடுமையைப் புலப்படுத்தியது. புண்-தழும்பு. பொன் மேனி-பொன் வண்ணத் திருமேனி; பொலிவுடைய திருமேனி என்றும் சொல்லலாம்.]

இறைவன் தம்பொருட்டு எளிவந்த பெருங்கருணையை நினைந்து இரங்கியும், வியந்தும் அருளியது இந்தப் பாடல்.

**திருவம்மானையில் 8-ஆம் பாடல் இது.**

# 9. அந்தம் இலா ஆனந்தம்

சிவபெருமானை நெடுந்தூரத்திலிருந்து தரிசித்தாலே அவனை அடையாளம் கண்டு கொள்ளலாம். அவன் தன் திருமுடியில் சந்திர கண்டத்தைச் சூடியிருக்கிறான். அரை குறையாக உள்ள சந்திரனிலும் மிகச் சிறிய ஒரு கலையை அணிந்திருக்கிறான். சந்திரன் தேய்வதும் வளர்வதும் இல்லாமல் இருக்கும்படி தன் திருமுடியில் சூடியிருக்கிறான். தக்கன் இட்ட சாபம் அவனை அணுகாமல், அவனுக்குப் புகல் அளித்து அவ்வாறு செய்துள்ளான்.

துண்டப் பிறையான்.

அவன் வேத சொரூபமாக இருக்கிறான். வேதத்தின் பொருளாக இருக்கிறான். அதைத் தானே பாடிக்கொண்டு அதற்கு நித்தியத்துவத்தை வழங்கியிருக்கிறான். அவனே திருப்பெருந்துறைக்கு வந்து, அடியார்கள் வழிபட்டு உய்வதற்காக நித்திய வாசம் செய்கிறான்.

மறையான், பெருந்துறையான்.

அவனுடைய திருமுடியைத் தரிசித்துக் கொண்டு, பார்வையை இறக்கி, அவன் திருமார்பைப் பார்த்தால் அங்கே முப்புரி நூல் பளிச்சென்று தெரிகிறது. அவன் அநாதி அந்தணன் என்பதை அது காட்டுகிறது.

கொண்ட புரிநூலான்.

அவன் மணிவாசகருடைய பெருமையைப் புலப்படுத்துவதற்காகக் குதிரைச் சேவகனாக வந்தான். பார்ப்பதற்கு அழகிய திருக்கோலத்தைக் கொண்ட குதிரையின்மேல் வந்தான். வேதமே குதிரையாக வடிவெடுத்து அவனைத் தாங்கி வந்தது.

### கோல மா ஊர்தியான்.

அவனுடைய திருக்கழுத்து, கருமையாக இருக்கிறது. உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அவன் ஆலகால நஞ்சை உண்டு தன் கழுத்தில் நிறுத்திக் கொண்டான். அந்த அருட்செயலை யாவரும் அறியக் காட்டிக்கொண்டு அந்த நஞ்சு அவன் கண்டத்தில் விளங்குகிறது. அவன் நீலகண்டன் ஆனான்.

### கண்டம் கரியான்.

அவனுடைய திருமேனி செக்கச் செவேல் என்று பவளம் போல விளங்குகிறது. அந்தத் திருமேனியில் தூய்மையும் வெண்மையும் உடைய திருநீற்றைப் பூசியிருக்கிறான். சிவந்த திருமேனியில் பூசிய வெண்ணீறும், அவன் திருமார்பில் அணிந்த முப்புரிநூலும், அவன் திருமுடியில் அணிந்த பிறையும், நீலகண்டமும் எடுப்பாகத் தோன்றுகின்றன.

### செம்மேனியான், வெண்ணீற்றான்.

அண்டங்கள் பல. அவனால் படைக்கப்பட்டவை அவை. அவற்றிற்கெல்லாம் மூலகாரணனாக விளங்குகிறான் அவன்.

### அண்டமுதல் ஆயினான்.

அவன் அடியார்களுக்கு ஆனந்தத்தை வழங்குகிறான். பொறிகளால் நுகரப்படும் இன்பம் அழியக் கூடியது.

சுகம், துக்கம் என்னும் இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. சுகம் இருந்தால் துக்கம் இருக்கும்; துக்கம் இருந்தால் சுகம் இருக்கும். இவை இரண்டும் உயிர்களுக்கு மாறி மாறி வரும். இவை நிலையாக இருப்பன அல்ல.

ஆனால் ஆனந்தம் என்பது அத்தகையது அன்று. அது இந்திரியங்களாலோ, அவற்றின் வாயிலாக மனத்தினாலோ நுகரப்படுவதன்று. அது உயிரினால் அநுபவிக்கப்படுவது. சரீரங்களின் தொடர்பு இருக்கிறவரைக்கும் சுகதுக்கங்கள் இருக்கும். சரீரத்தில் இருக்கும் போதே ஆத்மாவில் ஆனந்தத்தை அநுபவிப்பார்கள் ஜீவன் முக்தர்கள். இங்கே உடம்புடன் இருக்கும் போதே நுகரும் பேரின்பம் அது. இந்த உடம்பை விட்டவுடன் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து விடும் உயிர். அந்த ஆனந்தம் முடிவற்றது. அதை இறைவன் அடியவர்களுக்கு வழங்குகிறான்.

**அந்தம் இலா ஆனந்தம்**
**...............ஈந்தருளும்.**

அவனுடைய அடியார்கள் இந்தப் பிறப்பிலே புதியவர்களாக அன்பு செய்யவில்லை. பிறவிதோறும் அன்புகொண்டு, வர வர அந்த அன்பில் முதிர்ச்சி பெற்று வருவார்கள்; அது முற்றிப் பழுக்கும்போது ஆனந்தம் கிடைக்கும். பல பிறவிகள் எடுத்து அன்பு செய்து, இந்தப் பிறவியில் அது முழுமை பெற்றதனால், இனிப்பிறவாத இன்பத்தை அவர்கள் பெறுகிறார்கள்.

"பல்லூழி காலம் பயின்றுஅரனை அர்ச்சிக்கின்
நல்லறிவு சற்றே நகும்"

என்பர். ஆகவே, இந்த ஒரு பிறவியில் அன்பு செய்தார்கள், அதனால் முத்தி அடைந்தார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் பழ அடியார்கள்.

**"ஐயா! பழவடியேம் வந்தோங்காண்"**

என்று மணிவாசகரே பிறிதோரிடத்தில் கூறுகிறார்.

இறைவன் ஈந்தருளும் ஆனந்தத்தில் வேறுபாடு இல்லை; இது முதல் தரமான ஆனந்தம். இது இரண்டாந் தரம் என்று சொல்ல முடியாது. கிருத யுகத்தில் அன்பு செய்தவர்களுக்கு இந்த உயர்ந்த ஆனந்தம், பின் யுகங்களில் அடியாரானவர்களுக்குச் சற்றே தரம் குறைந்த ஆனந்தம் என்ற வேறுபாடு இல்லை. அநாதிகாலமாக இறைவன் அடியார்களுக்கு இந்த ஆனந்தத்தை வழங்கிவருகிறான். மிகப் பழங்காலத்தில் எப்படி முழுமையான ஆனந்தத்தை அடியவர்களுக்கு வழங்கினானோ, அப்படியே இன்றும் வழங்குகிறான்; இனியும் வழங்குவான்.

**பண்டைப் பரிசே பழ அடியார்க்கு ஈந்தருளும்.**

இத்தகைய அருட்செயல் மிகவும் வியத்தற்குரியது. எதிர் பாராமல் ஒரு வள்ளல் வயிறு நிறையச் சோறு போட்டால் அவனை வியக்கிறோம். தங்கக் கிண்ணத்தைத் தானமாக வழங்கினால் நமக்குப் பெரு வியப்பாக இருக்கிறது. மிகவும் உயர்ந்த உலோகமாகிய அதைப் பல பேருக்குப் பல காலமாக ஒரு வள்ளல் கொடுத்துவருகிறான் என்றால் நம்பவே முடியாது. அதை உண்மை யென்று அறிந்து கொண்டால் அதைக் கண்டவர்கள் வியப்படைவார்கள்; அவர்கள் வாயிலாகக் கேட்டவர்களுக்கும் வியப்பை உண்டாக்கும்.

அவன் புகழ் வர வர எங்கும் பரவி எவருக்கும் வியப்பை உண்டாக்கும். அளிக்கும் பொருளின் தன்மையும் அளவும் மிகுதியாக ஆக, அதனை வழங்குகிறவனுடைய புகழ் எங்கும் பரவும். அவனை யாவரும் வியந்து பாராட்டுவார்கள். எந்தப் பயனையும் எதிர்பாராமல், இரவலர்களுடைய நன்மை ஒன்றையே கருதி, மிக உயர்ந்த பொருள்களை இடையீடில்லாமல் தரும் வள்ளல்கள் இந்த உலகத்தில் இல்லை. இறைவன் ஒருவன்தான் அத்தகைய வள்ளல்.

எல்லாவற்றிலும் உயர்ந்ததும், முடிவே இல்லாததும், உயிரிஞல் நுகரப்படுவதும், எல்லோருக்கும் கிடைப்பதற் கரியதுமாகிய சிவானந்தத்தை அருளும் அந்த வள்ளலின் புகழ் ஓர் ஊரில் மட்டுமா பரவும்? உலகம் முழுவதும் பரவும். எல்லா அண்டங்களிலும் பரவும். அதனுல் அண்டங்களில் எல்லாம் உள்ளவர்கள் அவனை வியந்து பாராட்டுவார்கள்.

இப்படி அவன் பழ அடியார்களுக்கு அந்தமிலா ஆனந்தத்தை ஈய, அந்த வள்ளன்மையை அண்டங்களெல்லாம் அறிந்து வியப்புறுகிறது; 'அவ்வாறு வியப்புறும் செயலை நாம் பாடுவோம்' என்று அம்மானை ஆடும் பெண்ணுகத் தம்மைப் பாவித்துக் கொண்ட மணிவாசகர் பாடுகிருர்.

**துண்டப் பிறையான், மறையான், பெருந்துறையான்**
**கொண்ட புரிநூலான், கோலமா ஊர்தியான்,**
**கண்டம் கரியான், செம்மேனியான். வெண்ணீற்ருன்,**
**அண்டமுதல் ஆயினுன், அந்தமிலா ஆனந்தம்**
**பண்டைப் பரிசே பழஅடியார்க்கு ஈந்தருளும்;**
**அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானுய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, துண்டமாகிய பிறையை அணிந்தவனும், வேத வடிவாக இருப்பவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி யிருப்பவனும், திருமார்பில் அணிந்து கொண்ட முப்புரி நூலை உடையவனும், அழகிய வேதமாகிய குதிரையை வாகனமாக உடையவனும், திருக்கழுத்து நஞ்சுடைமையால் கரியதாக உள்ளவனும், செம்மையான வண்ணம் பெற்ற திருமேனியை உடையவனும், தூய வெள்ளைத் திருநீற்றை அணிந்தவனும், அண்டங்களுக்கெல்லாம் முதல்வனுக இருப்பவனும், முடிவே இல்லாத சிவானந்தத்தைப் பழங்காலத்தில் வழங்கியபடியே பிறவி தோறும் தொடர்புடைய பழைய அடியவர்களுக்கு ஈந்தருள்வான்; அவ்வாறு அவன் ஆனந்தம் வழங்குவதை எல்லா அண்டங்களும் வியந்து பாராட்டும் திறத்தை நாம் பாடுவோமாக*.

[துண்டம்—பிளவு, பிறையான், மறையான், பெருந் துறையான் என்பவற்றில் எதுகை நயம் அமைந்துள்ளது. கோலம்—அழகு. மா—குதிரை. வேதத்தையே இறைவன் குதிரையாகக் கொண்டுள்ளான்.

> அண்டமெலாம் ஆதார மாகத் தாங்கும்
> ஆனந்தத் தனிச்சோதி அண்டம் தாங்கும்
> சண்டமறைப் பரிதனக்கா தார மாகித்
> தரிக்க ”

என்று திருவிளையாடற் புராணத்தில் வருகிறது. 'கண்டங் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றன்' என்ற அடியில் முரண் நயம் அமைந்தது. பண்டைப் பரிசே—பழையபடியே. அந்த ஆனந்தம் அன்றும் இன்றும் ஒருபடித்தாகவே இருப்பது என்பதை அந்தமிலா ஆனந்தம், பண்டைப் பரிசே என்பவற்றால் அறியலாகும். ஈந்தருளும்—வழங்கி யருள்வான். அப்படி அருளும் திறத்தைப் பாடுதும் என்று செயப்படு பொருளை வருவித்து முடிக்க. அண்டம்—எல்லா அண்டங்களும்; தேவலோகத்தில் உள்ள தேவர்கள் என்றும் கூறலாம்; தமக்குக் கிடைத்தற்கு அரிய ஆனந்தத்தை அடியார்கள் பெற்றதைக் கண்டு அண்டவாணர்களாகிய தேவர்கள் வியப்புறுகிறார்கள். வியப்புறுமா—வியப்புறுமாற்றை; விகாரம். ஈந்தருளும் ஆற்றை, அண்டம் வியப்புறும் ஆற்றை எனத் தனித்தனியே கூட்டிப் பொருள் செய்வதும் ஆம். அண்டம் வியப்புறும் வண்ணம் போல நாமும் வியந்து பாடுவோம் என்றும் பொருள் கொள்ளலாம்.]

இறைவன் அடியார்களுக்கு வழங்கும் சிவானந்த அநுபவத்தை வியந்து பாடியது இப்பாட்டு.

இது திருவம்மானையில் வரும் 9-ஆவது பாடல்.

## 10. தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான்

இறைவனுக்கு மகாதேவன் என்பது ஒரு திரு நாமம். அதைக் கொண்டு அவனைத் தேவர்களில் ஒருவனாக வைத்து எண்ணுதல் கூடாது. பிரம விஷ்ணு சிவன் என்று மும்மூர்த்திகளில் ஒருவனாக்கி அவனை மற்றவர்களோடு ஒத்த நிலையில் வைத்து எண்ணுதலும் முறையன்று. "மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல், தேவர் என்றே இறுமாந்து என்ன பாவம் திரிதர்வரே" என்று **திருவாசகத்தில்** ஓரிடத்தில் மணிவாசகப் பெருமான் பாடுகிறார். அவன் தேவர்கோ அறியாத தேவதேவன். மூவர்கோனாய் நின்ற முதல்வன். வேதத்தினால் பரப்பிரம்மமென்று சொல்லப்பட்ட பரம் பொருள் அவன்.

**விண் ஆளும் தேவர்க்கு மேலாய வேதியனை.**

உலகத்தை ஆளும் மன்னவர்கள் அந்த அரசச் செல்வத்தைப் பெற்றதனால் உலகத்தவரால் பாராட்டப் பெறுவார்கள். அரசனை இறைவனாகவே வைத்துப் போற்று வார்கள். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்" என்று ஆழ்வார் பாடுவார். முற்பிறப்பில் செய்த புண்ணியப் பயனாக அரசனாகப் பிறக்கும் பேறு கிடைக்கிறது. பல வகையான போகங்களைத் துய்த்து, பலரும் கொண்டாடும் நிலையில் இருப்பவன்

அரசன். அவனை மாட்சிமை பொருந்திய மன்னன் என்று குடிமக்கள் சிறப்பிப்பார்கள். பதவி, செல்வம், ஆட்சியுரிமை, போகம், மதிப்பு முதலியவைகள் அவனுடைய மாட்சியைக் காட்டும் அடையாளங்கள்.

ஆனால் இவை யாவும் உண்மையான மாண்புகள் ஆவதில்லை. அன்பு, இரக்கம், அறிவுடைமை, நன்மையை நாடும் இயல்பு, பெரியோர் நட்பு முதலிய அருங்குணங்கள் இருந்தால் அவற்றால் உண்டாகும் மாண்பு சிறந்தது. பதவியும் பணமும் விளைவிக்காத மாட்சியை அருங் குணங்கள் உண்டாக்கும். பலரும் காணப் பதவியில் வீற்றிருக்கும் மன்னவன் குணம் இல்லாதவனாக இருந்தால் அவனுடைய குணக்கேடு மதியில் மறுப்போல எல்லாருக்கும் தெரியவரும். ஆதலின் அவன் தீய பண்புகளைச் சேராமல் விலக்கி, நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நல்ல பண்புகளுக்குள் தலையாயது இறைவனிடம் வைக்கும் பக்தி. குடிகளுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டிய மன்னன் பக்தியுடையவனாக இருந்தால் தான், 'மன்னவன் எப்படி, மன்னுயிர் அப்படி' என்றவாறு மக்கள் பக்தியுடையவர்களாக இருப்பார்கள். நாட்டினரை வழிப்படுத்தும் பொறுப்பை உடையவனாதலால் அவன் தன் ஒழுக்கத்தினால் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டும் நிலையில் இருக்கவேண்டும். பழங்காலத்து மன்னர்கள் சிறந்த பக்தர்களாக விளங்கிப் பல ஆலயங்களை எழுப்பி அங்கே நித்திய நைமித்திகங்கள் ஒழுங்காக நடைபெறும்படி செய்தார்கள். திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் இந்த உண்மையைப் புலப்படுத்தும். அவர்கள் செய்த திருத் தொண்டுகள் கல்மேல் எழுத்தாகக் காணுகின்றன.

அந்த மன்னவர்கள் தம் தலைமேல் மணி முடியைத் தரித்திருப்பதைப் பெரிய மாண்பாக எண்ணுவதில்லை

இறைவன் அடியில் முடிவைத்து வணங்குவதையே மாண்பாக நினைத்தார்கள். சக்கரவர்த்தி திருமகனாகிய இராமன் ஸ்ரீரங்கநாதனைப் பணிந்து வழிபட்டு நலம் பெற்றான்.

**மண் ஆளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை.**

அப்படி உள்ள சிவபெருமான் தண்மை நிறைந்த பாண்டி நாட்டைத் தன்னுடைய ஆட்சி நிலமாகக் கொண்டு எழுந்தருளினான். தண்மையுடைய தமிழைப் பாதுகாத்தான்; தமிழை வளர்த்தான். தமிழை வளர்ப்பதில் பாண்டி நாடு சிறப்புற்றிருந்தது. அதனால் அதைத் தமிழ் நாடு என்று சொல்லும் வழக்கு உண்டாயிற்று. அந்த நாட்டை ஆட்சி செய்யும் பாண்டிய மன்னனாகவே இறைவன் இருந்து நலம் செய்தான். தண் பாண்டி நாடு தமிழை அளித்தது. அதனைத் தண்ணளியால் பாதுகாத்து அதற்குத் தெய்விகத் தன்மை ஏறும்படி செய்தான் இறைவன். "பாண்டி நாடே பழம்பதி யாகவும்" என்று பாடுவார் மணிவாசகர்.

**தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை.**

பாண்டிநாடு தண்மை நிறைந்தது; அங்கே தண்மை நிறைந்த தமிழை அளித்துப் பாதுகாத்தான் இறைவன்.

அவனும் தண்மையாகிய அருள் நிரம்பியவன். அதற்கு அடையாளமாக அருளே திருவுருவான உமாதேவியை ஒரு பாதியாகக் கொண்டிருக்கிறான். அவனிடம் அந்த அருள் ஆட்சி செலுத்துகிறது. அருள் இல்லாவிட்டால் ஆள முடியாது. அருள் நிரம்பியவனே குடிமக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவனாவான். தண்பாண்டிநாட்டானாகிய இறைவனுடைய ஒரு பாதியில் அருளுருவாகிய அன்னை குடி கொண்டு ஆட்சியை நடத்துகிறாள்; அவனிடம் அருள் பொங்கும்படி செய்கிறாள்.

**பெண் ஆளும் பாகனை.**

அத்தகைய அருளாளன் மணிவாசகரை ஆட்கொண்டான்; அடியார்கள் பூசித்து வணங்கும் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளி மணிவாசகருக்கு அருள் செய்தான். அவன் திருவடியைக் காண வேண்டுமென்று எத்தனையோ பேர் ஏங்கியிருக்க, அவன் தன் பெருங்கருணையினால் திருப்பெருந்துறைக்கு வந்து கண் நிறைந்த அழகையுடைய தன் திருவடியை மணிவாசகருக்குக் காட்டினான்.

தன்னுடைய அழகிய திருவடியைக் காட்டி அவன் மணிவாசகரை அடிமை கொண்டான். அதற்குப் பல வகையாலும் தகுதியுடையவர் வாதவூரடிகள் என்றாலும் அவர் தம்மைச் சிறிதும் தகுதியில்லாதவரென்றே கருதும் இயல்பு கொண்டவர். 'நான் என் தகுதி காரணமாக இறைவனுடைய அருளைப் பெற்று அவனுக்கு ஆளானேன்' என்று சொல்ல அவருக்குத் தெரியாது. 'நாய் போன்ற இழிவுடைய என்னை அவன் ஆட்கொண்டான்' என்று அடுத்தடுத்துச் சொல்வதே அவர் இயல்பு; அதுவே அவர் பெருமைக்கு அடையாளம்.

**பேணு பெருந்துறையில்**
**கண் ஆர் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட.**

அவன் தன்னுடைய திருவடியைக் காட்டிய பிறகு, அதைக் கண்ட கண் அந்தக் காட்சியாலே நிரம்பிவிட்டது. அது இப்போது வேறு எதையும் காண்பதில்லை. எதைக் கண்டாலும் அந்தத் திருவடியாகவே காட்சி அளிக்கிறது. கண் ஆர்ந்த கழல் அது.

அப்படித் திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட எம்பெருமானே திருவண்ணுமலையிலும் எழுந்தருளியிருக்கின்றான். சோதி வடிவாக நின்ற அண்ணுமலையப்பன் மாணிவாசகப் பெருமானுடைய கண்ணை நிரப்பிய அழகுக் கழல் உடைய

வனுகவே அவருக்குத் தோன்றினன். திருவண்ணமலைக்கு வந்து இறைவனைத் தரிசிக்கையில், திருப்பெருந்துறையில் கண்ணார் கழல் காட்டி ஆண்டுகொண்டவனையே கண்டார். எங்கும் அவன் கழலையே கண்ட அடிகளுக்குத் திருவண்ண மலையில் அவன் காட்சி அளித்தது வியப்பு அன்று. எவன் விண்ணாளும் தேவருக்கு மேலான வேதியனுக நின்றானே, எவன் மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானே, எவன் தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானே, எவன் பெண்ணாளும் பாகனே, எவன் பெருந்துறையில் கழல் காட்டி ஆட்கொண்டானே, அவனே அண்ணு மலையானுக எழுந்தருளியிருக்கிறான்.

'வெள்ளிடை மலை' என்று தெளிவாகப் புலப்படு வதைச் சொல்வது வழக்கம். இறைவன் அருணுசலத்தில் மலையாகவே தோற்றம் அளிக்கிறான். அவனைக் காணுமல் இருக்கலாமா? வழிபடாமல் இருக்கலாமா? பாடாமல் இருக்கலாமா? 'அவனைப் பாடுவோம் வாருங்கள்' என்று அம்மானை ஆடும் பெண்ணை அழைக்கிறார் மணிவாசகர்.

**அண்ணு மலையானைப் பாடுதுங்காண் அம்மானுய்!**

திருப்பெருந்துறையில் அந்தணனுக எழுந்தருளி மணி வாசகப் பெருமானை ஆண்டு கொண்ட இறைவன் அவருக்குத் திருவண்ணுமலையிலும் தன் திவ்விய தரிசனத் தைக் காட்டினன். திருவம்மானை முழுவதும் அந்தத் திருத் தலத்தில் பாடியருளியது.

**விண் ஆளும் தேவர்க்கு மேலாய வேதியனை**
**மண் ஆளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்**
**தண்ணார் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்**
**பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்**
**கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட**
**அண்ணு மலையானைப் பாடுதும்காண் அம்மானுய்!**

"அம்மானை ஆடும் பெண்ணே, தேவலோகத்தை ஆட்சி புரியும் தேவர்களுக்கெல்லாம் மேம்பட்டவனாகி நிற்கும், வேதத்தின் உட்பொருளாய் விளங்குபவனை, நிலவுலகத்தை ஆட்சி புரியும் மன்னவர்க்கு மாட்சியாகி நின்றவனை, தண்மை நிரம்பிய தமிழை வளர்க்கும் தண்மையையுடைய பாண்டி நாட்டைத் தன்னுடைய ஆட்சி நிலமாக உடைய வனை, உமாதேவியார் குடி புகுந்து அருளாட்சி புரியும் வாமபாகத்தை உடையவனை, அன்பர்கள் போற்றி வழி படும் திருப்பெருந்துறையில் எழுந்தருளிக் கண் நிரம்பிய திருவடியைக் காட்டி நாய்போன்ற அடியேனை ஆளாகக் கொண்ட திருவண்ணாமலை வடிவாக இருப்பவனை நாம் பாடுவோமாக."

[விண்-தேவலோகம். வேதியன்-வேதப் பொருளாக விளங்குபவன், அநாதி அந்தணன். மண் - நிலவுலகம். மாண்பு-மாட்சியைத் தரும் பொருள்; ஆகு பெயர். தண்ணார் தமிழ்: தண்மை-இனிமை. தண்பாண்டிநாடு: தண்மை-நீர் வளம்; ஈரத்தைக் குறித்தது; புறத்தண்மையாகிய நீர்வளத் தையும், அகத்தண்மையாகிய அன்பையும் குறித்தது. "இன் சொல்லால் ஈரம் அளைஇ" என்று அன்பை ஈரம் என்றார் **திருவள்ளுவர்**. பெண் ஆளும்-உமாதேவியார் தமக்குஉரிமை யாக்கித் தன் அருளை வெளிப்படுத்தி ஆட்சி புரியும். பாகனை-வாமபாகத்தை உடையவனை. பேணு-போற்றி வணங்கும், பெருந்துறையில் அடிவைத்த பொழுதே பொன் பெற்றாற் போல அடியார்கள் அதைப் பேணி வணங்குவார்கள். கண் ஆர்-கண்ணில் நிறைந்த; கண்-அழகுமாம்; அப்போது அது ஆகுபெயர். கழல் காட்டி-தன் திருவடியைத் தன் பெருங் கருணையினால் காணச் செய்து; "காண்பாரார் கண்ணு தலாய்க் காட்டாக் காலே" (**அப்பர்**) என்னும் திருவாக்கை ஓர்க. நாயேனை-இழிந்த இயல்புடைய நாய் போன்ற என்னை. ஆட் கொண்ட-அடிமையாகக் கொண்ட; தன்

அருளில் என்னைப் பரதந்திரனாக்கிய. அண்ணாமலையானை-திருவண்ணாமலையாக எழுந்தருளி உள்ளவனை; அண்ணாமலைத் திருக்கோயிலில் விளங்குபவனை என்னலும் ஆம். பாடுதும்-பாடுவோம். காண்: அசை.]

ஒன்றுக்கும் பற்றாத எளியேனை ஆட்கொண்ட பெருங்கருணையை நினைந்து நன்றியறிவினால் பாடுவோம் என்றார்.

**திருவம்மானையில்** 10-ஆம் பாடல் இது.

# அப்பாலைக்கு அப்பால்

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு உண்ணாமுலையம்மை என்று பெயர். முருகன், கணபதி ஆகிய புதல்வர்களை ஈன்றும், உலகத்து உயிர்களை யெல்லாம் ஈன்றும் வாய் வைத்து உண்ணாத் தனங்களை உடையவள் அன்னை. ஆதலின் அவள் தாழாக் கொங்கையை உடையவள்.

> "இங்குஅயற்கண் அகன்உலகம் எண்ணிறந்த சராசரங்கள் ஈன்றும் தாழாக்
> கொங்கை" (திருவிளையாடற் புராணம்)

என்று பாடுவார் பரஞ்சோதி முனிவர். அவள் நகில்கள் இளம்பருவ மங்கையைப் போலத் தங்கச் செப்பெனத் தோற்றம் அளிக்கும். அந்தப் பெருமாட்டியைத் தன் வாம பாகத்தில் கொண்டிருக்கிறான் இறைவன்.

> செப்பு ஆர் முலை பங்கன்.

அவன் தென்னாடுடைய சிவன். அங்கே திருப்பெருந்துறையைத் தான் என்றும் வாழும் திருநகரமாகக் கொண்டவன்.

> தென்னன், பெருந்துறையான்.

உலகில் பிறந்த மக்கள் அடைய வேண்டியதை அடைய முயலாமல் வழிதப்பிப் போனவர்களைப் போல் புன்னெறியிலே செல்கிறார்கள்; இந்திரியங்களின் வசப்

பட்டு அவற்றிற்கு இரை தேடுவதையே தொழிலாகக் காலத்தைக் கழிக்கிறார்கள்; புல் நிலத்திலே மேய விட்ட மாடுகளில் குருட்டுமாடு வீட்டை அடைய முடியாமல் எங்கெங்கோ திரிந்து அல்லல்படுவதைப் போல இன்னல் உழந்து திரிகிறார்கள்; அதன் பயனாக மேலும் மேலும் பிறவிக்கு ஆளாகிறார்கள்; இடம் மாறி மாறிப் பிறக்கிறார்கள்; லட்சியத்தை அடையாமல் அவர்கள் தப்பிப் போகிறார்கள்.

ஆனால் இறைவன் திருவருளை விரும்பி அவனிடம் அன்பு செய்யும் பக்தர்கள் இவ்வாறு வழிதப்பிப் போவதில்லை; தம்முடைய லட்சியமாகிய இறைவன் தாளை நோக்கிப் பயணம் செய்து அதை அடைகிறார்கள்; பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு அதுவே புணை என்பதை உணர்ந்து அதனை அடைகிறார்கள்.

**தப்பாமே தாள் அடைந்தார்.**

தாளை அடைவதாவது அவன் திருவடியை இடைவிடாது நினைத்தல். "மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார்" என்ற குறளின் உரையில், சேர்தல்—இடை விடாது நினைத்தல்' என்று உரை எழுதுவார் பரிமேலழகர்.

அவ்வாறு தாளை அடைந்தவர்கள் இறைவனுடைய திருவுருவத்தையும் அனந்த கல்யாண குணங்களையும் நினைந்து நினைந்து உருகுவார்கள். அவர்களுடைய நெஞ்சத்தில் கோயில் கொண்டு இறைவனே உருகச் செய்வான்.

**"உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்"**

என்று பிரிதோரிடத்தில் மணிவாசகர் பாடுவார். கல்லைப் போன்ற திண்மையை உடைய நெஞ்சானாலும் அது இறைவ

னுடைய அன்பினால் உருகும். அவ்வாறு இறைவனே உருகச் செய்வான்.

"உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே"

என்பது அப்பர் அநுபவம்.

**தப்பாமே தாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும் தன்மையினான்.**

அவனுடைய தன்மை அருள். அதை நினைந்து நினைந்து, 'இறைவன் பெருங்கருணை இருந்தவாறு என்னே!' என்று அன்பர்கள் உருகுவார்கள். இந்த உருக்கம் அவர்களிடம் உண்டாவது உறுதி. 'தாள் அடைந்தாரைத் தப்பாமல் நெஞ்சு உருக்கும் தன்மையை உடையவன்' என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். உலகில் உள்ளவர்களுக்கும் தேவர்களுக்கும் அகப்படாமல் ஒளித்து நிற்கும் எம்பெருமான் தன் தாளை அடைந்தாரினின்றும் தப்ப இயலாது.

"ஒளிக்கும் சோரனைக் கண்டனம்...நாள்மலர்ப்
பிணையலில் தாள்தலை யிடுமின்"

என்று புகுந்தவர் மணிவாசகர்; "சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது இனியே?" என்று கேட்டவர். அவ்வாறு தாம் பிடித்தாலும் அதனைத் தம் செயலாகச் சொல்லாமல், 'அவனே அவ்வாறு தப்பாமல் நெஞ்சில் புகுந்து உருக்குகிறான்' என்று சொல்கிறார்.

அவன் தென்திசையிலுள்ள பாண்டி நாட்டைத் தன் ஆட்சிக்குரிய நிலமாகக் கொண்டவன். "அருள்புரிவான் நாடு" என்றும், "தென்பாண்டி நாடே தெளி" (திருத்தசாங்கம்) என்றும் தெளிவுறுத்துவார் மாணிக்கவாசகர். தமக்கு அருள் கிடைத்த ஊரையும் நாட்டையும் அபிமானத்தோடு போற்றுகிறார். தான் பிறந்த ஊரும் நாடும் வேறாக இருந்தாலும் தன்னை மணந்தவனுடைய நாட்டையும்

ஊரையுமே தன்னுடையனவாகக் கொள்ளும் கற்புடை மங்கையைப் போன்றவர் அவர்.

இறைவன் பாண்டியனாகத் திருவவதரித்துத் தன் அருளாட்சியினால் பாண்டி நாட்டையே சிவலோகம் ஆக்கி விட்டான். சிவலோகத்துக்கு வருந்திச் சென்று அன்பர்கள் இடர்ப்படாமல் தென் பாண்டி நாட்டை அடைந்து வழி பட்டு இன்புறச் செய்தான். அத்தகைய சிறப்புடைய நாடு பாண்டி நாடு.

**அப்பாண்டி நாட்டைச் சிவலோகம்
ஆக்குவித்த.**

சிவலோகத்தில் சிவகணத்தினர் எங்கும் காணப்படு வார்கள். எங்கும் அவன் அருளாட்சியே நிலவும். சிவ னோடு தொடர்புடைய பொருள்களே எங்கும் தோற்றம் அளிக்கும். பாண்டி நாடும் அப்படியே விளங்கியது. அதை வியப்புடன் எண்ணி, 'அப்பாண்டி நாடு' என்கிறார். பாண்டி நாட்டில் வாழும் மணிவாசகர் சேய்மைச் சுட்டால் சுட்டி யது, அது நெடுந்தூரத்தில் இருப்பது என்ற எண்ணத் தோடன்று. நினைக்க நினைக்க அளவுபடாமல் செல்லும் பருமையையுடைய நாடாதலின் அந்த வியப்புத் தோன்ற 'அப்பாண்டி நாடு' என்றார்.

அந்தப் பெருமானுடைய திருமுடி முதல் திருவடிவரை ல் எண்ணிப் பார்க்கிறார். அவ்வளவையும் விரிவாகச் சொல்லி எளிதில் எல்லை காண முடியுமா? முடியையும் அடியையும் உள்ளத்திலே பதிக்கிறார். அந்தத் திருமுடியில் கங்கை இருக்கிறாள். அவளுடைய அகந்தையை அடக்கித் தன் சடாபாரத்திலே தேக்கி வைத்துக் கொண்டவன் அவன். தனக்கு ஓர் அப்பன் இல்லாவிட்டாலும் அவன் தானே எல்லோருக்கும் தந்தையாக இருக்கிறான். தன் மகனுக்குத் தான் சேமித்த அரும்பொருளை வழங்குவது தந்தையின்

இயல்பு. இறைவன் தனக்கே உரிய பொருளாகக் கொண்டு ஆளும் சிவலோகத்தைத் தன் அடியார்களுக்கு வழங்கும் தந்தையாக விளங்குகிறான்.

**அப்பு ஆர் சடை அப்பன்**

*[அப்பு-நீர்; இங்கே கங்கை.]*

தண்மை நிறைந்த கங்கையைத் திருமுடியிலே சூடிய இறைவனுடைய திருவடி ஆனந்த மடமாக இருக்கிறது. அவன் திருவடியே வீடாக இருக்குமாதலின் அது ஆனந்த நிலையம். அது கழலை அணிந்தது. அடியார் நினைக்குமிட மெல்லாம் செல்லும் நீளம் உடைய வார்கழல் அது.

**அப்பு ஆர் சடை அப்பன் ஆனந்த வார்கழலே.**

அன்பர்கள் அந்தத் திருவடிகளையே புகலாக அடைந்தவர்கள். தம்முடைய உடல் பொருள் ஆவி யாவற்றையும் அந்தத் திருவடிகளுக்கே உரியனவாகச் சமர்ப்பணம் செய்தவர்கள்.

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ"

என்று வேறிடத்தில் மணிவாசகர் பாடுவார். மெய்யடியார்கள் சர்வசங்க பரித்தியாகம் செய்து 'நின் சரணல்லாற் சரணில்லை' என்று புகுகிறவர்கள்.

**ஆனந்த வார்கழலே**
**ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார்.**

கருவி கரணங்களையெல்லாம் சமர்ப்பணம் செய்த அன்பர்களிடம் இறைவன் எழுந்தருளுகிறான்; அவற்றைத் தன் உரிமை ஆக்கிக்கொள்கிறான். ஒரு வீட்டை ஒருவன் மற்றொருவனுக்கு விற்றுவிட்டால் வாங்கினவன் அந்த

வீட்டை உரிமைப் படுத்திக்கொண்டு அதிலே குடிபுகுவது இயல்பு. அவ்வாறு அடியார்கள் தம் உள்ளத்தை வேறு எதற்கும் ஒப்புவிக்காமல் இறைவன் ஆனந்த வார் கழலுக்கே ஒப்படைக்கிறார்கள். அங்கே அவன் புகுகிறான்.

உலகிலுள்ள மக்கள் ஆசைவயப்பட்டுத் தம் நெஞ்சத்தை எது எதற்கோ ஒப்படைக்கிறார்கள். அப்படி யாவது நிலையாக ஏதேனும் ஒன்றுக்கு ஒப்படைத்து விட்டிருக்கிறார்களா? இல்லை. கணந்தோறும் எந்த எந்தப் பொருளுக்கோ ஒப்படைக்கிறார்கள். அங்கே எதுவும் நிலையாக நிற்பதில்லை. வீதியிலே எப்போதும் மக்களும் விலங்கினங்களும் போய்க் கொண்டே இருப்பது இயல்பு. அங்கே யாரும் தங்கமாட்டார்கள். நம்முடைய மனமும் காமம் குரோதம் முதலிய குணங்களும், நாம் பற்றுக் கொண்ட மக்களும், வேறு எத்தனையோ பொருள்களும் இடைவிடாமல் உலவிக்கொண்டே இருக்கும் வீதிபோல இருக்கிறது. அப்படிப் போகின்றவர்களுடைய சுவடுகளே வீதியில் காணப்படுகின்றன. மக்கள் நடமாட்டத்தினாலும் வண்டிகளின் போக்குவரத்தாலும் மேடு பள்ளமும் புழுதியும் மண்டுகின்றன. மனமும் அப்படித்தான் ஆகிவிடு கிறது. எது எதற்கோ மனத்தை ஒப்படைப்பதனால் வந்த வினை இது.

நாளுக்கு ஒருவர் வந்து குடியேறும்படி ஒரு விடுதி இருந்தால் அதில் குப்பை அதிகமாகச் சேரும். அதை அப் போதப்போது துப்புரவாக வைக்காவிட்டால் வந்தவர்கள் போட்ட குப்பைகள் அதில் சேர்ந்து கொண்டே இருக்கும். பலரும் கூடும் சந்தை எப்படி இருக்கிறது? அங்கே அமைதி இருப்பதில்லை. இந்த மனம் நிரந்தரமாக யாரும் குடியிராத வீட்டைப் போலவும், சந்தையைப்போலவும் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் அழுக்கு, குப்பை, கழித்தபண்டங்கள்.

ஒரு பெரிய செல்வருக்கு ஒருவன் தன் வீட்டை விற்றுவிடுகிறான். அந்த வீடு முன்பு குப்பை நிறைந்து பார்ப்பதற்கு அழகு இல்லாமல் இருந்ததுதான். செல்வன் அதை வாங்கினால் அப்படியே குடிபுகமாட்டான். அதைத் தன் செல்வத்தைக்கொண்டு விரிவாக்கி அழகுபடுத்தி அதில் வாழத் தொடங்குவான்.

அடியவர்கள் உள்ளமும் ஆரம்பத்தில் ஏழையின் வீடாக இருக்கும்; அழுக்கடைந்திருக்கும். ஆனால் இறைவனாகிய பெருஞ்செல்வனிடத்தில் அதை ஒப்படைத்து விட்டால் அவன் அதைத் தூய்மைப்படுத்துவான்; மாசுடன் கலந்த பொன்னை உருக்கித் தூய்மைப்படுத்துவதுபோல மனத்தை உருக்கித் தூய்மைப் படுத்துவதுவான்.

அவனே தன் அடியார் மனத்தைத் தூயதாக்கி அங்கே சலனமின்றித் தங்குவான். இனி அந்த உள்ளம் அடியாருடையதன்று; அவனுடையதே ஆகிவிடுகிறது.

**ஆனந்த வார்கழலே**
**ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும்.**

இவ்வாறு அடியார் உள்ளத்தில் புகுந்து வாழும் அந்தப் பெருமானை எல்லோருக்கும் எளியவன் என்று எண்ண முடியுமா? இந்திராதி தேவர்களும் காண முடியாத பெருமான் அவன்.

நமக்குத் தெரியாத இடங்கள் எத்தனையோ உள்ளன. இந்த உலகத்தில் பிறர் கண்டும் நாம் காணாத இடங்கள் பல உண்டு. அவை நமக்கு அப்பாலாக உள்ளவை. மற்ற உலகங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. பேரறிவுடையவர்கள், பேராற்றலுடையவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று வருகிறார்கள். வானத்தில் பறக்-

கிறார்கள். சந்திர மண்டலத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறார்கள். இவ்விடத்தை விட்டு அப்பால் அவர்கள் சென்றால் இறைவனைக் காண முடியுமா? அந்த இடத்துக்கும் அப்பால் உள்ளவன் அவன். வான விளிம்பைப் பிடிக்கலாம் என்று போனால் போகப் போக அதுவும் போய்க் கொண்டே இருக்கும். அன்பர்கள் உள்ளுறையும் அப்பனை நாம் காணலாம் என்று முயன்றாலும் அவன் எட்ட எட்டப் போய்க் கொண்டிருப்பான்.

'முயற்சியினால், பிறர் அப்பால் என்று கூறும் இடத்தை நாம் அடைந்து கண்டோம்' என்பவர்களுக்கும் அப்பால் இருப்பவன் அவன். எவ்வளவு முயற்சிகளுக்கும் அப்பாற் பட்டவன் அவன். அணுகுவதற்கு மிக அரியது என்று ஒன்றைச் சொன்னால் அதற்கும் அப்பால் இருப்பவன் அவன். எல்லாப் புவனங்களுக்கும் அப்பால் உள்ளவன். அவ்வாறு உள்ள பெருமானைப் பாடி அம்மானையாடுவோம்' என்று அழைக்கிறார் மணிவாசகர்.

**அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

கருதுவார்க்கு ஆற்ற எளியனாய் அவர் உள்ளத்தே சிங்காதனம் போட்டு வீற்றிருக்கும் எம்பெருமான் காண்டற்கரிய கடவுளாகவும் இருக்கிறான். தம் அநுபவத்தைக் கூறி அவனுடைய சிறப்பியல்பை அறிவித்து, அவனுடைய பொதுவியல்பை இறுதியிலே கூறினார்.

**செப்பார் முலைபங்கன், தென்னன் பெருந்துறையான்,**
**தப்பாமே தாள்அடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்,**
**அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த**
**அப்பு ஆர் சடைஅப்பன், ஆனந்த வார்கழலே**
**ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்இருக்கும்**
**அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

* அம்மானை ஆடும் பெண்ணே, செப்புப் போன்ற தனங்களை உடைய உமாதேவியைத் தன்னுடைய வாம

பாகத்தில் கொண்டிருப்பவனும், தென்னாட்டை உடையவனும், திருப்பெருந்துறையில் வாழ்பவனும், வேறு எதனையும் நாடாமல் தன் திருவடியையே தியானித்து அடைந்த மெய்யன்பர்களுடைய உள்ளத்தை உருகச் செய்யும் தன்மையை உடையவனும், அந்தப் பாண்டி நாட்டைத் தான் என்றும் எழுந்தருளியிருக்கும் சிவலோகமாக ஆக்குவித்தவனும், கங்கை நீர் தங்கிய சடாபாரத்தை உடையவனும், ஆனந்தமே உருவான நீண்ட திருவடிக்கே தம்மை அடைக்கலமாக ஒப்படைத்த உள்ளமுடைய அன்பர்கள் உள்ளுக்குள் என்றும் சலனமின்றித் தங்குபவனும், தூரமான பொருளுக்கும் எட்டாத நெடுந் தூரத்தில் உள்ளவனும் ஆகிய சிவபெருமானைப் பாடி அம்மானை ஆடுவோமாக.*

[செப்பு-தங்கச் செப்பு; தந்தச் செப்பும் ஆம். ஆர்: உவமஉருபு. செப்பு-அடியார் செப்பும் புகழ் எனலும் ஆம்.

"கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை"

என்றும்,

"இணங்கு கொங்கை மங்கை"

என்றும் இவர் அதற்குப் புகழ் பாடுவார். பிற அருளாளர்களும்,

"தளிரிள வளர்முலை"

என்று பாடினர். இவ்வாறு புகழைக் கொண்டதாதலின், செப்பு என்பதற்கு அடியார்கள் புகழும் புகழ் என்று பொருள் கொள்வதும் பொருந்தும்.

தென்னன்-தென்னாட்டையுடையவன். தென்னனைப் பாண்டியனுக்கி அவனுக்குரிய பெருந்துறை என்பதும் ஒன்று.

தப்பாமே தாளடைந்தார் என்று அடியாரின் திற மாகவும், தப்பாமே நெஞ்சுருக்கும் என்று எம்பெருமான் திறமாகவும் இருவேறு வகையிலும் பொருள் கொள்ள லாம்.

அடியார் தன் தாளைப் பிடித்தால் அவர் நெஞ்சைப் பிடித்துக் குடியேறுகிறவன் அவன்; அங்கே சென்று பொன்னை உருக்கி மாசறச் செய்து முத்திரை வைப்பது போலத் தன் அருள் முத்திரையை வைப்பவன். தான் புகும் நெஞ்சைச் சிவமாக்குவது போலத் தான் புகுந்து வாழும் நாட்டையே சிவலோகம் ஆக்குபவன். அவன் தண்மை நிரம்பியவன்; தண்மை நிரம்பிய கங்கையைத் தலையிற் சூடி யவன்; அகங்காரத்தால் குழம்பியிருந்த கங்கையைத் தன் திருமுடியில் தேக்கித் தெளிவு பெறவும் பிறருக்குப் பயன் படவும் செய்தவன்.

ஆனந்த வார் கழல்-ஆனந்தமே வடிவான நீண்ட கழல்; கழல்-வீரகண்டை, இங்கே திருவடிக்காயிற்று; தானியாகு பெயர். கழலே-கழலுக்கே. ஒப்பாக-அடைக்கலமாக. உள்ளத்தை ஒப்புவித்தால் ஏனைக் கரணங்களும் அவ னுக்கு ஆட்படும், "மனத்துக்கண் மாசில னாதல் அனைத் தறன்" (குறள்) ஆதலின். உள் இருக்கும்-அந்தரங்கத் தைத் தன் நிலையான இடமாகக் கொண்டு சலனமின்றிச் சிங்காதனத்தில் அமர்ந்திருக்குமாப்போல வாழும். அப் பாலைக்கு: ஐ, சாரியை. அப்பாலை: ஐ, இரண்டாம் வேற்று மை உருபு.காண்: அசை.]

இறைவன் பிறருக்கு அரியவனாக இருப்பினும் அன்பர் களுக்கு எளியவன் என்பது கருத்து.

இது திருவம்மானையில் 11-ஆவது திருப்பாடல்.

# 12. பிறவாமல் காப்பவன்

இறைவனைப் பதவி மோகம் உடையவர்களும் செல்வச் செருக்கு உடையவர்களும் காண்பது அரிது. உலகத்தைப் பாதுகாக்கும் திருமாலும், உலகத்தைப் படைக்கும் பிரமனும் தம்முடைய ஆற்றலால் அவன் அடிமுடியைக் காண முடியவில்லை என்பதைக் காட்டிக் கொடுத்தார்கள். போகத்தில் சிறந்து நின்று, தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்னும் பதவியில் இறுமாந்திருக்கும் இந்திரனும் அவனைக் காணமுடியாது. அவர்கள் எந்தப் பிறவியை எடுத்தாலும் தம்முடைய வினைகாரணமாக அந்தப் பிறவியில் அநுபவிக்க வேண்டியதை அநுபவித்தார்களேயன்றி இறைவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடவில்லை; அப்படித் தேட முயன்றாலும் அவர்கள் காணவில்லை.

மையைக் கண் அழகு மிகும்படி இட்டிருக்கும் பெண்ணைப் பார்த்து, இறைவன் புகழைச் சொல்லத் தொடங்கிய மணிவாசகர், இந்த அருமைப்பாட்டை முதலில் சொல்கிறார்.

> மைப்பொலியும் கண்ணி, கேள்; மால் அயனோடு
> இந்திரனும்
> எப்பிறவியும் தேட.

அத்தகைய அரிய பெருமான் மாணிக்க வாசகரை ஆட்கொண்டான். அவர் தம்மைச் சிறிதும் தகுதி யில்லாத

வராகச் சொல்லிக் கொள்வதைப் பலகால் பார்த்தோம். 'ஒன்றுக்கும் பற்ருத என்னையும் அவன் ஆட்கொண்டான்' என்று இறைவன் கருணையை வியந்து பாராட்டுவது அவர் இயல்பு. 'இறைவன் தகுதியில்லாத என்னையும் தன் இனிய அருளால் இந்தப் பிறவியிலே ஆட்கொண்டான்' என்கிருர்.

இறைவன் திருவருள் இரண்டு வகைப்படும். பாவம் செய்தவர்களை ஒறுத்துத் திருத்துவதும் அவனுடைய அருள் தான். அதனுல் அவர்களுக்குத் துன்பம் நேர்ந்தாலும் முடிவில் அவர்கள் பாவம் கரைந்து இறைவன் திருவருளுக்கு ஆளாவார்கள். அழுக்குள்ள துணியை அடித்துத் துவைப்பது போல, பாவங்களை உடைய உயிர்களை ஒறுத்து அவன் தூய்மைப் படுத்துகிருன். இது அவனுடைய வல்லருள் அல்லது மறக்கருணை. மருத்துவன் நோயாளியின் புண்ணை அறுத்துக் கார மருந்திட்டுச் சிகிச்சை செய்வது போன்றது இது. அழுக்கைப் பூசிக் கொண்ட குழந்தையை அடித்து இழுத்து வந்து குளிப்பாட்டித் தாய் தூய்மை செய்வாள். உயிர்களிடத்தில் கருணையுடைய எம்பெருமான் பாவங்களாகிய அழுக்கை ஏற்றிக் கொண்ட அவற்றைத் துன்பமென்னும் நீரில் தோய்த்து அடித்துத் தூயவை ஆக்குகிருன். அதனுல் இறைவனுடைய அன்பர்கள் தமக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில், அதுவும் இறைவனுடைய அருட் பிரசாதம் என்று ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் இடும்பையைக் கண்டு கவலையடையாமல் ஏற்று அநுபவித்து, 'நம்முடைய கடன் கழிகிறது' என்ற உள்ளத்தோடு இருப்பார்கள். நல்ல பிள்ளைகளைத் தாய் கட்டி முத்தம் இடுவது போல இறைவன் மெய்யன்பர்களைத் திருவருளில் அணைத்து ஆட்கொள்வான். 'இந்தப் பிறவிலேயே என்னைத் தன்னுடைய இனிய அருளால் இறைவன் ஆட்கொண்டான்' என்கிருர் மணிவாசகர்.

**என்னையும் தன் இன் அருளால்**
**இப்பிறவி ஆட்கொண்டு.**

எல்லோருக்கும் துன்பத்தைத் தரும் பிறவி அவருக்கு இறைவனுடைய இனிய அருளை ஈட்டித் தருவதாயிற்று. பல பிறவிகள் எடுத்து வினைகளைப் போக்கி ஞானம் பெற்று இறைவன் திருவடியை அடையவேண்டும். முன் பிறவிகளில் இறைவனை உபாசித்து, அன்பு வரவர வளர்ந்து முறுக, இந்தப் பிறவியில் அந்த அன்பின் முதிர்ச்சியைப் பெற்று விளங்கினார் வாதவூரடிகள். மலர் பிஞ்சாகிக் காயாகிப் பழுத்தால் மரத்தின் தொடர்பு அற்று உதிர்ந்து விடுவது போல, பல பிறவிகளில் இறைவன்பால் அன்பு வளர்ந்து இந்தப் பிறவியில் அது முதிர்ந்து கனிந்துவிட்டது. இனி இந்தப் பிரபஞ்சம் என்னும் மரத்தினுடைய தொடர்பு இராது. இனிமேல் பிறவி உண்டாகாது. இதுவே கடைசிப் பிறப்பாக அமையும். இறைவன் ஆட்கொண்டு விட்டானானால், பிராரப்த வினை கழியுமட்டும் இவ்வுலகில் வாழ்ந்து, பிறகு என்றும் பொன்றாத இன்ப நிலையை அடையும் ஆன்மா.

ரெயில் பயணத்துக்குரிய டிக்கட்டை வாங்கிக்கொண்டவர்கள் தம்முடைய பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்வது போல, இறைவன் இனிய அருளை அடைந்து அவனால் ஆட்கொள்ளப் பெற்றால், இனிப் பிறவா நிலை வரும் என்ற உறுதியுடையவர்களாக இருப்பார்கள் அன்பர்கள்.

**இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து.**

அப்படி ஆட்கொண்ட பெருமானுடைய இயல்புக சொல்ல வருகிறார்.

இறைவனை எப்படிக் காணலாம்? எங்கே காணலாம்? அவன் எங்கும் நிறைந்தவனாக இருந்தாலும் நம்மால் அறிய முடிவதில்லை. உலகத்தில் நாம் காணும் பொருள் யாவும் ஒரு காலத்தில் அழிந்து போகின்றவை. அந்தப் பொருள்களைக் கண்டு, அவை நிலையில்லாத பொய்ப் பொருள்கள் என்பதை உணராமல், அவற்றையே மெய்யாகக் கொண்டு, அவற்றோடு தொடர்புகொண்டு வாழ்கிறோம். உயிர், இறைவன், பாசம் என்னும் மூன்றும் நித்தியமான பொருள்கள் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இறைவன் தான் தனியே எல்லாவற்றையும் கடந்து நின்றாலும், உயிர்களிடத்திலும் அவர்களைக் கட்டுப்படுத்தும் பாசத்திலும் கலந்து நிற்கிறான்; மெய்ஞ்ஞானிகள் இதை உணர்வார்கள். மெய்யான மூன்று பொருள்களிலும் அவனுடைய காட்சியைக் காணுவார்கள்.

மெய்ப்பொருட்கண் தோற்றமாய்.

சில காலம் மெய்யாகத் தோற்றிப் பிறகு அழியும் பொருள்களே பிரபஞ்சத்தில் இருக்கின்றன. உடம்பு, உலகு யாவுமே ஒருகாலத்தில் அழிபவை. அவை சில காலம் உண்மையாக உள்ளவை என்று தோற்றினாலும் அவை நிலையாக நிற்பதில்லை அவற்றிற்கு நிலைபேறு இல்லை.

இறைவன் என்றும் நித்தியமாக உள்ளவன்; என்றும் நிலைபெற்றிருப்பவன், அப்படி உள்ள தன்மையாகிய சத்தே அவன் வடிவம். சச்சிதானந்த உருவுடையவன் இறைவன் என்பார்கள். சத் என்பது உண்மை அல்லது நிலைபேற்றைக் குறிக்கும். அது அவனுடைய திருவுருவம்.

மெய்யே நிலைபேறாய்.

[நிலைபேறே மெய்யாக என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்.]

உலகில் உள்ள ஜடப் பொருள்களுக்கும் சித்துப் பொருள்களுக்கும் ஆதாரமாக இருப்பவன் இறைவன். அவன் அருளாணையினாலே யாவும் இருக்கின்றன; இயங்கு கின்றன. எல்லாப் பொருள்களுக்கும் மூலப் பொருளாக வும் அவன் விளங்குகிறான்.

**எப்பொருட்கும் தானே ஆய்.**

எவ்வகையான ஆன்மாக்களும் அவனிடம் தங்கியிருக் கின்றன. அவனுடைய வடிவமே இப்பிரபஞ்சங்கள். சிவ பெருமானுக்கு எட்டு வடிவங்கள் உண்டாதலின் அவனை அட்டமூர்த்தி என்பர். அந்த மூர்த்தங்களுள் ஒன்று உயிர். உடலென்னும் வடிவுக்குள் இருந்து அதை இயக்கும் உயிரைப் போல, உயிருக்குள் உயிராக இருந்தும் அதை இயக்கும் பெருமான் அவன். எவ்வகை உயிர்களுக்கும் பிறவியினின்றும் விடுதலை அடையும் நிலை வரும்போது, அவன் வீட்டின்பமாகவே இருப்பான்.

**யாவைக்கும் வீடு ஆகும்.**

இதுகாறும் சொல்லி வந்த இயல்புகளையுடைய அந்தப் பரம் பொருளே, சிவபெருமான். அவன் தொண்டர்களுக் குரியவனாக இருப்பவன். அடிமைப்பட்டவர்கள் தம் தலைவனிடம் உரிமை கொண்டாடி, 'எங்கள் எஜமானன்' என்று சொல்வது போல, அடியார்கள் 'நம் சிவன்' என்று உரிமை கொண்டாடுவார்கள். அவன் அவர்களை ஏற்று ஆட்படுத்திய அநுபவமுத்திரையைப் பெற்றவர்களாதலின், அந்த உரிமையைக் கொண்டாடி அவனோடு பிரிக்கலாகாமல்

இறுகப் பிணைந்த உறவை உடையேம் என்று பெருமிதம் கொள்வார்கள்.

**அப்பொருளாம் நம் சிவனை.**

உடன் விளையாடும் பக்தியிற் சிறந்த பெண்களையும் சேர்த்து, 'நம் சிவன்' என்கிருர் மணிவாசக நாயகியார்.

**நம் சிவனைப் பாடுதுங்காண், அம்மாணுய்!**

'மாலும் அயனும் இந்திரனும் தேட அவர்களுக்கு அரியனாக இருக்கும் எம்பெருமானை, ஒன்றுக்கும் பற்ருத அடியேனையும் இனிய அருளால் ஆட்கொண்டு, இனிமேல் இந்தப் பிறவி நோய் என்னை அணுகாமல் பாதுகாத்து விளங்கும் பரம்பொருளை, மெய்யான பொருள்களில் தோற்றம் உடையவனாக, தன்னுடைய நிலைபேறே திருவுருவமாய், எல்லாப் பொருள்களுக்கும் தங்கும் இடமாய் உள்ள அந்தப் பரம்பொருளை, நாம் பாடி அம்மானை ஆடுவோம்' என்கிருர்.

இப்படி உறுதிப்பாட்டோடு சொல்லும் பெருவாழ்வு ஜீவன்முக்தராகிய அவருக்கு உண்டாயிற்று.

மைப்பொலியும் கண்ணி, கேள்;
மால்அயனோடு இந்திரனும்
எப்பிறவி யும்தேட,
என்னையும்தன் இன்அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு
இனிப்பிறவா மேகாத்து,
மெய்ப்பொருட்கண் தோற்றமாய்,
மெய்யே நிலைபேருய்,

எப்பொருட்கும் தானேயாய்,
யாவைக்கும் வீடுஆகும்
அப்பொருளாம் நம்சிவனைப்
பாடுதுங்காண், அம்மானாய்!

*மையினால் விளக்கம் பெற்ற கண்ணையுடைய தோழியே, கேட்பாயாக: திருமாலும் அயனும் இந்திரனும் எந்தப் பிறவி எடுத்தும் தன்னை அறியாமல் தேடி வருந்தவும், ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் தன்னுடைய இனிய திருவருளினால், இந்தப் பிறவியிலே ஆளாகக் கொண்டு, இனிமேல் இங்கே பிறந்து வரும் நோயினின்றும் என்னைப் பாதுகாத்து, எல்லாப் பொருள் களுக்கும் தான் ஒருவனே தலைவனாகி, எல்லாப் பொருள் களுக்கும் தங்கும் இடமாகி விளங்கும் அந்தப் பரம் பொருளாகிய, நம்முடைய சிவபெருமானை, அம்மானை ஆடும் பெண்ணே, பாடுவோம்.*

[மைப்பொலியும் கண்ணீ-இறைவனுடைய திருவுருவத்தை நன்றாகப் பார்ப்பதற்கு மையிட்டுக் கொண்டு, அதனால் பொலியும் கண்ணை உடைய பெண்ணே. மால் அயனோடு-மாலோடு அயனோடு; ஓடு: எண் ஓடு. மாலும் அயனும் இந்திரனும் வெவ்வேறு பிறவி எடுத்த எவரும் என்றும் பொருள் கொள்ளலாம். என்னையும் என்ற உம்மை, இழிவு சிறப்பு; ஒன்றுக்கும் பற்றாத, தகுதியில்லாத அடியேனையும் என்று பொருள் கொள்ளவேண்டும். மால் அயன் இந்திரன் ஆகியவர்கள் பல பிறவி எடுத்துத் தேடியும் காணரிய எம்பெருமான் இந்த ஒரு பிறவியில் என்னைத் தான் தேடி வந்து ஆட்கொண்டான் என்ற நயம் தொனிக்கிறது. இன் அருளால்-அடியேன் தன்னைத் தேடி வருந்தாமல், என்னை ஆண்ட இனிய திருவருளால். இப்பிறவி - இந்த ஒரு பிறவி யிலே. இனி-இனிமேல். இந்தப் பிறவி அவனால் ஆட்கொள் ளப்பயன்பட்ட பிறவி. இந்தப் பிறவியில் பெற்ற பேறு

இனிப் பிறவாத நிலையைத் தந்து விட்டது. நோயினின்றும் காப்பாற்றிப் பாதுகாத்த மருத்துவனைப் போல என்னைப் பிறவி நோயினின்றும் காப்பாற்றினான் என்றார்.

மெய்யான பொருள்களிலெல்லாம் அவன் தோன்றுகிறான். அவனுக்கு, என்றும் நிலைபெற்றிருக்கும் தன்மையாகிய சத்தே வடிவம். ஆதலின் 'மெய்யே நிலைபேறாய்' என்றார். நிலைபேறே மெய்யாய் என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டவேண்டும்.

எப்பொருட்கும் தானே ஆய்-எல்லாப் பொருள்களுக்கும் தானே ஆதாரமாகி; எவ்வகையான பொருள்களுக்கும் தானே தலைவனாகி என்றும் பொருள் கொள்ளலாம்.

யாவைக்கும் வீடு ஆகும்- ஜடப்பொருள், சித்துப் பொருள் என்றுள்ள எல்லாப் பொருள்களுக்கும் தங்கும் இடமாகும். வீடு-விடும் இடம்; விடுதல்-தங்குதல். எவ்வகையான ஆன்மாக்களுக்கும் இறுதியில் பிறப்பினின்றும் விடுதலை பெறும் மோட்ச சாம்ராஜ்யமே ஆகி நிற்கும் என்றும் பொருள் கொள்ளலாம்; அங்கே வீடு என்பதற்கு விடுதலை பெற்றுச் சாரும் இடம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

அப்பொருள்—முன்னே சொன்ன இயல்புகளையுடைய அந்தப் பரம்பொருள். பாடுதும்-பாடுவோம். காண்: அசை.]

இறைவனே ஆட்கொண்டு பிறப்பை அறுத்து வீடு பேறு தரும் வள்ளல் என்பது கருத்து.

**திருவம்மானையில் வரும் 12-ஆம் பாடல் இது.**

# 13. அன்பர்க்கு மெய்யான்

பெண்கள் அம்மானை ஆடும்போது அம்மானைக் காய்களை மேலே வீசி எறிந்தும் கையால் பிடித்தும் மறுபடியும் வீசியும் ஆடுவார்கள். மூன்று அம்மானைக் காய்களில் ஏதாவது ஒன்று மேலே இருக்கும். இரண்டு கைகளில் இருக்கும். எப்போதும் ஒன்று மேலே போக அதைக் கையில் பிடிக்கும் போது கையில் உள்ளதை மேலே வீசி ஆடுவார்கள். இப்படி ஆடுவதற்கு நல்ல பழக்கம் வேண்டும். அது அவர்களுக்குக் கைவந்த கலை.

அப்படி ஆடும் போது அவர்களுடைய கைகளில் உள்ள வளைகள் ஒலியெழுப்புகின்றன.

**கை ஆர் வளை சிலம்ப.**

கன்னிப் பெண்கள் ஆதலின் கைநிறைய வளைகளை அணிந்திருக்கின்றனர். கைகள் மேலும் கீழும் அசைகின்ற போது அவை கலகலக்கின்றன.

அம்மானைக் காய்கள் மேலே போவதும் கீழே வருவது மாக இருக்க அவற்றை நிமிர்ந்து நோக்கியும் கையால் பிடித்தும் ஆடுவதால் அவர்கள் காதுகளில் அணிந்துள்ள குழைகள் ஆடுகின்றன.

**காது ஆர் குழை ஆட.**

அவர்கள் வேகமாக ஆடும்போது தலையை மேலும் கீழும் உயர்த்தியும் தாழ்த்தும் ஆடுவதனால் அவர்களுடைய கூந்தல் அவிழ்ந்து புரள்கின்றது. கருமை நிறம் பொருந்திய அந்தக் குழல், ஆடும் வேகத்திற்கு ஏற்பப் புரள்கிறது.

**மை ஆர் குழல் புரள.**

அவ்வாறு ஆடும்போது அவர்கள் சூடியுள்ள மலர் மாலை அவிழ்கிறது. அந்த மலரில் மொய்க்கும் வண்டுகள் பறக்கின்றன; முரலுகின்றன. தேன் என்னும் சாதி வண்டும் பிற வண்டுகளும் குழலிலிருந்து புறப்படுகின்றன; ரீங்காரம் செய்கின்றன.

**தேன் பாய, வண்டு ஒலிப்ப.**

அவர்கள் அம்மானை ஆடும்போது பாடுகிறார்கள்: அந்தப் பாட்டு இறைவன் புகழைச் சொல்லும் பாட்டாக இருக்கிறது; 'அவனைப் பாடி ஆடுவோம்' என்று சொல்லிப் பாடுகிறார்கள். அவன் இயல்புகளைப் பரவும் பாட்டு அது.

அவன் எத்தகையவன்?

அவன் திருமேனி செக்கச் செவேலென்று பவளம் போல இருக்கிறது. "சிவன் எனும் பெயர் தனக்கே உரிய செம்மேனி எம்மான்" அல்லவா? அவனைப் பாடுவோம் என்கிறார்கள்.

**செய்யானை.**

அந்தத் திருமேனியில் வெண்ணீற்றைப் பூசியிருக்கிறான். மெல்லிய வெண்திரை போர்த்தாற் போல அந்த வெண்ணீறு இலங்குகிறது. அதனூடே செம்மேனித் தேசும் தெரிகிறது.

**செய்யானை, வெண்ணீறு அணிந்தானை.**

சிவபெருமான் எல்லோருக்கும் மேலானவன்; மால், பிரமன், இந்திரன் முதலிய யாவரும் அவனைக் கும்பிட்டு

அருள் பெற்றுத் தம் தம் தொழிலை இயற்றுகின்றனர். அவன் தனக்கு மேல் யாரும் இல்லாதவன். அதனால் அவன் கையெடுத்து அஞ்சலி செய்வதற்கு யாரும் இல்லை. மற்றத் தேவர்களின் கைகள் அவன் முன்னால் கூம்பி அஞ்சலி செய்கின்றன. அவன் கைகள் அஞ்சலி செய்வதில்லை. அவனால் கும்பிடப்படுபவர் யாரும் இல்லாமையால் அவனுடைய திருக்கரங்களுக்கு அஞ்சலி செய்யும் வேலை இல்லை. அஞ்சலி செய்வதற்காகச் சேர்ந்து குவியும் செயலை அந்தக் கைகள் அறியாதவை.

**சேர்ந்து அறியாக் கையானை.**

எல்லாத் தேவர்களின் கைகளும் குவிந்து மொட்டித்திருக்க, அவன் தன் கைகளை விரித்து அபயம் காட்டுகிறான்; வரத முத்திரையைக் காட்டுகிறான். ஆகவே அந்தக் கைகள் விரிந்தே இருக்கின்றன.

அவன் திருக்கைலாயத்தில் எழுந்தருளியிருக்கிறான். தன்னை வந்து வழிபடும் அமரர்களுக்கு அபயவரதம் காட்டுகிறான். அவன் கைலையில் மாத்திரமா இருக்கிறான்? அவன் எல்லா இடங்களிலும் நுட்பமாய் இருக்கிறான்; சர்வவியாபி. அணுவுக்கு அணுவாகவும் விபுவுக்கு விபுவாகவும் செறிந்து எங்கும் பரந்துளான்.

**எங்கும் செறிந்தானை.**

அவன் இருக்கிறான் என்பதை அன்பர்கள் உணர்கிறார்கள். பொறிகளுக்கு எட்டாமல் இருந்தாலும் அவன் எங்கும் பரந்திருக்கிறான். அவனைத் தம் அநுபவத்தால் அன்பர்கள் உணர்கிறார்கள். ஒவ்வொரு செயலிலும் அவன் இருந்து உதவுவதை அவர்கள் உணர்ந்து இன்புறுகிறார்கள்.

கடவுள் உண்டு என்று பிறர் சொல்லக் கேட்பதை அன்றி, யாவரும் அவன் இருப்பை உணர முடிவதில்லை. எனினும் அன்பர்கள் அவனை உணர்கிறார்கள். மற்றவர்கள் உண்டோ இல்லையோ என்று ஐயம் கொள்ள, அவர்களோ அவன் உண்மையான பொருள் என்பதை உணர்ந்து அவனைத் தியானித்து உருகுகிறார்கள். அவன் அவர்களுக்கு உண்மைப் பொருளாக இருக்கிறான்.

**அன்பர்க்கு மெய்யானை.**

அன்பர் அல்லாதவர்கள் அவனை உணரமுடிவதில்லை. அதனால் அவன் இருக்கிறானோ, இல்லையோ என்று எண்ணித் தடுமாறுகிறார்கள். அன்பர் அல்லாதவர்க்கு அவன் மெய்ப் பொருள் அல்லாதவனாக இருக்கிறான். "காண்டற்கு அரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்கு ஆற்ற எளியன் கண்டாய்'' என்று இந்த இரு வகையினரைப் பற்றியும் திருநாவுக்கரசர் சொல்கிறார். அல்லாதார்க்கு உண்மைப் பொருளல்லாதவனாகத் தோற்றினாலும், அவனே மெய்ப் பொருள் என்பதை வேதம் உணர்த்திக் கொண்டிருக்கிறது. அவன் வேதத்தின் பொருளாக விளங்குகிறான்.

**அல்லாதார்க்கு அல்லாத வேதியனை.**

அவன் உருவத் திருமேனி கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கிறான். எங்கும் நுண் பொருளாகச் செறிந்து நிறைந்த அந்தப் பரம்பொருள் சகள வடிவம் கொண்டு அடியார்கள் வழிபடும்படி அமர்ந்திருக்கிறது. எங்கும் செறிந்திருப்பதை அறிய முடியாதவர்கள் வணங்கித் துதித்துத் தியானித்து நலம் பெறும்படி திருக் கோயில்களில் மூர்த்திகரித்துக் காட்சி தருகிறான் அவன். இவ்வாறு உள்ள திருமேனியைக் கண்டும், வேதத்தின்

பொருளை உணர்ந்து அவன் இயல்புகளை அறிந்தும் அவனைத் தியானித்து உள்ளேயும் காணும்படி பல சோபானங்கள் உள்ளன. படிப்படியாக மேல் ஏறிச் சென்றால் அவன் மெய்யான பொருள் என்பதையும், யாவருக்கும் மேலான பரம்பொருள் என்பதையும், எங்கும் செறிந்தான் என்பதையும் உணரமுடியும்.

அவன் ஐயாறு முதலிய தலங்களில் அடியார்கள் கண் காண உருவத் திருமேனி கொண்டு வீற்றிருக்கிறான். அவ்வாறு எழுந்தருளியிருப்பது அவனுடைய கருணையைக் காட்டுகிறது. மிகமிக நுட்பமான பொருளாகிய அவன் தன்னை அடியார்கள்கண்ணால் கண்டு வழிபடுவதற்காகவே பல வடிவங்களை மேற்கொள்கிறான். தலங்களை நாடிச் சென்று தனக்கென்று ஆலயத்தை அமைக்கச் செய்து அங்கே இருந்து காட்சிகொடுத்தருள்கிறான். கரசரணாதி அவயங்களை யும் கண் முதலிய பொறிகளையும் உடைய மக்கள் வாழும் இடத்திற்கே வந்து அவர்கள் எளிதில் தரிசித்து உய்யும்படி அருள்பாலிக்கிறான். கீழுள்ளவன் எப்போதும் மேலே போகவேண்டுமென்று ஆசைப்படுவது இயல்பு. ஆனால் தனக்கு மேல் ஒன்றும் இல்லாத பரம்பொருள், மேலே பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. தனக்குக் கீழே உள்ள தேவர்களையும் அன்பர்களையும் கண்டு அவர்களுக்கு அருள் செய்யஇறைவனே இறங்கி வருகிறான். யாருக்கும் எட்டாத நிலையில் அவன் இருந்தால் அவன் கருணையைப் பெறுதல் யாவருக்கும் அரிது. அந்தக் கருணைச் செல்வம் பயன் படாமலேபோய்விடும். "செல்வத்துப் பயனே ஈதல்" (புறநானூறு)என்றுசொல்வார்கள். பொருட்செல்வமே பிறருக்கு ஈவதற் குரியது என்றால், அருட்செல்வமும் அத்தகைய தன்மை உடையதுதானே? எனவே பெருவள்ளலாகிய இறைவன் தன்னிடம் நிரம்பியிருக்கும் அருட்செல்வத்தை வாரி வாரி வழங்க எண்ணுகிறான்.

கைகால் ஊனமுற்றவர்கள் உள்ள இடத்துக்கே சென்று சோறும் துணியும் கொடுக்கும் வள்ளலைப் போல இறைவன் மக்கள் வாழும் உலகத்துக்கே வந்து அவர்கள் கண்காணும்படி ஐயாற்றிலும் பிற தலங்களிலும் அமர்ந்து காத்திருக்கிறான். அவனிடம் கருணை சுமையாக இருக்கிறது. அதனைச் சிறிது சிறிதாக இறக்குவதற்குரிய இடங்களை அவன் தேடிக்கொண்டிருக்கிறான். அவன் அருளைப் பெறுவதற்கு அடியார்கள் அவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இருவரும் சந்திக்கும் இடம் திருக்கோயில்.

அவ்வாறு தன் அருளை வழங்குவதற்காக அவன் வந்து கோலம் காட்டி அமர்ந்துள்ள இடங்களில் ஒன்று திருவையாறு. சோழ நாட்டில் உள்ள தலம் அது. 'அந்தப் பெருமானைப் பாடி அம்மானை ஆடுவோம்' என்று மணிவாசக நாயகி சொல்கிறாள்.

**ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும்காண், அம்மானாய்!**

குறி குணங்கள் அற்ற ஒன்றை மனத்தால் நினைக்கவோ வாயால் சொல்லவோ ஒண்ணாது. குறி குணங்கள் அற்ற இறைவன் தன் இயல்புப்படியே இருந்தால் அவனை யாரும் அறிந்துகொள்ள முடியாது. ஆகவே, அன்பர்கள் நாடி வரும் போது அவர்கள் கண்ணாற் கண்டும் கையால் தொழுதும் வழிபட்டு நலம் பெறும்படி அவன் ஐயாற்றில் வீற்றிருக்கிறான்; ஒரு நாள் அன்று, இரு நாள் அன்று; அவன் அங்கே நித்திய வாசம் செய்கிறான். 'அந்தக் கருணையாளனைப் பாடுவோம்' என்கிறாள்.

அல்லாதார்க்கு அல்லாத வேதியன் ஐயாற்றில் அமர்ந்து கோலம் காட்டி அன்பர்களுக்கு மெய்யானாக விளங்குகிறான்.

கைஆர் வளைசிலம்பக் காதார் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்துஅறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும்காண் அம்மானாய்!

*அம்மானை ஆடும் பெண்ணே, நம் கைகளில் உள்ள வளைகள் ஒலிக்கவும், காதுகளில் அணிந்த குழைகள் அசையவும், கருமை நிறம் பெற்ற கூந்தல் அவிழ்ந்து புரளவும், தேன் என்ற வண்டு குழலிலிருந்து பாயவும், பிற வண்டுகள் முரலவும், செம்மேனிப் பிரானும், தூய வெண்மையான திருநீற்றை அணிந்தவனும், பிறரைத் தொழ வேண்டிய அவசியம் இன்மையால் கும்பிடுவதற்காகச் சேர்தலை அறியாத திருக்கரங்களை உடையவனும், பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைந்து செறிந்தவனும், மெய் யன்புடைய அடியவர்களுக்கு அநுபவத்தால் உணரப்படும் மெய்யானவனும், அன்பர் அல்லாதவர்களுக்கு மெய் அல் லாதவனும், வேதத்தின் பொருளாய் இருப்பவனும், திருவை யாற்றில் எழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபெருமானைப் பாடுவோம்.*

[கை ஆர் — கையில் நிரம்ப அணிந்த. வருவார்கள் முதலில் வளையொலியைக் கேட்கிறார்கள். பிறகு குழை ஆடுவதையும் குழல் புரள்வதையும் பார்க்கிறார்கள் மை— கருமை; எங்கும் ஒரு படித்தாகச் செறிந்த கருங்குழ லாதலின் 'மையார் குழல்' என்றார். பெண்கள் ஆடும் வேகத்தை அவிழ்ந்து புரளும் குழல் காட்டுகிறது. நீண்ட கூந்தல் ஆதலின் அது நிலத்தில் புரள்கிறது. தேன்—ஒரு வகை வண்டு. குழலில் சூடிய மலர்களிலிருந்து தேன் கட்ட

விழ்ந்து பாய எனவும் சொல்லலாம். தேன் பாய—கூந்தலி லிருந்து வண்டு வெளியே பாய. வளை சிலம்பும் ஒலிக்குச் சுருதி கூட்டியதைப் போல வண்டுகள் முரல்கின்றன.

சிவபெருமான் செம்மேனியம்மான்; ஆதலின் செய்யான் என்றார். செம்மை என்பதற்கு நிறைவு, செப்பம் முதலிய பல பொருள்கள் உண்டு. ஆதலின் அவற்றை உடையான் என்று பண்பு பற்றியும் பொருள் கூறலாம். செய்யானை வெண்ணீறு அணிந்தானை: முரண் தொடையும் அவ்வலங்காரமும் வந்தன. சிலர் சில காலம் அடியாராக இருந்து பிறகு தலைவராவார்கள். பிறரைக் கும்பிட்டுப் பதவி உயர்வு பெற்று அப்பால் பிறர் கும்பிடும் உயர் பதவியைப் பெறுவார்கள். அப்படியின்றி அநாதியாகவே தலைவனாக இருப்பவனாதலின் அவன் கைகள் என்றும் சேர்வதை அறிந்ததில்லை. பிறர் கைகள் சேர்வதையே காண்பவனன்றித் தன் கைகளைக் குவித்துச் சேர்க்கும் நிலையை அறியாதவன் அவன்.

அவன் எங்கும் செறிந்து நின்றாலும் யாவரும் அவனை அறிய முடிவதில்லை. பாலில் எங்கும் நெய் பரந்திருந்தாலும் கடைவார்களுக்கே அது புலனாவது போல அன்பர்களுக்கே அவன் தன் அருளநுபவத்தை வழங்குகிறான். அல்லாதார்—அன்பர் அல்லாதார். அல்லாத — மெய் அல்லாத. வேதியனை—வேதப் பொருளாய் உள்ளவனை. யார் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அநாதிகாலமாக அந்த வேதம் அவன் இயல்பைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. அது சொல்லி வழிகாட்டியும் அதனை உணராது, மெய்ப் பொருளை உணர முயலாது இருப்பவர்கள் பலர். அவர்களுக்கு உண்மைப் பொருள் தான் என்பதை இறைவன் உணர்த்துவதில்லை. செரிக்கும் ஆற்றல் இல்லாத குழந்

தைக்குச் சோற்றை ஊட்டாமல் கூழைக் கொடுக்கும் அன்னைபோல அவன் இருக்கிறான்.

எங்கும் செறிந்தவனாக இருந்தாலும், அதனை உணராத மக்களுக்கு வழிபட்டு உய்யும்பொருட்டு ஐயாற்றில் விரும்பித் தங்கியிருக்கிறான்.

இவ்வாறு கருணையினால் இறங்கிவரும் பெருமானைப் பாடி அம்மானை ஆடுவோம் என்கிறாள்.]

இது திருவம்மானையில் உள்ள 13-ஆவது திருப்பாட்டு.

# 14. தொழும்பில் ஈடுபடுத்தியவன்

இப்போது மானிடராகப் பிறந்த நாம் இதற்கு முன் எத்தனையோ பிறவிகளை எடுத்து வந்திருக்கிறோம். அதற்குக் கணக்கே இல்லை. இன்ன பிறவிதான் எடுத்தோம் என்ற வரையறையும் இல்லை. பல பிறவிகளை எடுத்து எடுத்துப் பிறகே இந்த மனிதப் பிறவி வாய்த்திருக்கிறது. சிறியதும் பெரியதுமாக உள்ள ஜீவராசிகள் பலவாகப் பிறந்திருக்கிறோம். தாழ்ந்த பிறவிகளாகிய விலங்கினங்களில் பெரியதாகிய ஆனையாகப் பிறந்திருக்கலாம்; மிகச்சிறியதாகிய, கண்ணுக்குத் தெரியாத புழுவாகவும் பிறந்திருக்கலாம். இப்படிப் பிறந்த பிறப்புகளை நினைக்கிறார் மாணிக்கவாசகர்.

**ஆனையாய்க் கீடமாய்.**

உயர்ந்த பிறவி மானிடப்பிறவி. அந்தப் பிறவியில் புண்ணியம் மிகுதியாகச் செய்தால் தேவராகப் பிறப்போம்; பாவம் மிகுதியாக இருந்தால் விலங்கினமாகப் பிறப்போம். தேவராகப் பிறந்தாலும் புண்ணியப் பயன் தீர்ந்தால் இந்தப் பூமியில் மானிடராகப் பிறக்க வேண்டும். இப்படி மானிடராகவும் தேவராகவும் வரும் பிறப்புச் சுழற்சியுள்ளும் நாம் அகப்பட்டிருப்போம்.

**மானிடராய்த் தேவராய்.**

இவையல்லாமல் இடைப்பட்ட பல பிறவிகளையும் நாம் எடுத்திருப்போம். பிற என்ற வினையடியாகப் பிறப்பு,

பிறவி என்ற சொற்கள் அமைவது போலப் பிறவு என்பதும் பிறப்பைக் குறிக்க வரும்.

" அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்ற **திருக்குறளில்** வரும் பிறவாழி என்பதற்குப் பிறப்பாகிய கடல் என்று ஒருவர் உரை வகுத்தார்.

"பிறவாழிக் கரைகண் டாரே"

என்ற **வில்லி பாரதச்** செய்யுளில் பிறவாழி என்பதற்குப் பிறவிக்கடல் என்று பொருள். அந்தப் பிறவு என்ற சொல்லை இங்கே ஆளுகிருர் மணிவாசகர். 'ஆனை, புழு, மானிடர், தேவர் ஆகிய பிறப்பு, அல்லாத ஏனைய பிறவிகள் பலவும் பிறந்தும் இறந்தும் இளைத்துப் போனேன்' என்கிருர்.

**ஏனைப் பிறவாய்ப் பிறந்து இறந்து எய்த்தேனே.**

பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. பிறப்பதும் இறப்பதும் இணைந்தவை. அவற்றிலே சிக்கி அல்லற்படுகிறது ஆன்மா. பிறப்பிஞலும் இறப்பிஞலும் துன்பம் உண்டாகிறது என்று அறிவது ஞானத்தின் அடிப்படை; முதல் பாடம். மாணிக்கவாசகர், 'இப்படிப் பல பிறவிகளை எடுத்து அலுத்துப் போனேன்' என்று சொல்கிருர். சிவ புராணத்தில் இந்தப் பிறப்புகளுக்கு ஒரு பட்டியலை கொடுக்கிருர்.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன் எம்பெருமான்"

என்று சொல்கிருர்.

கவலையோ நினைவோ அன்பர்களுக்கு இருப்பதில்லை. அவர்களுக்கு இந்த ஊனைப்பற்றிய எண்ணமே மறந்து போகிறது. அப்படி இறைவன் உருக்கி விடுகிறான்.

பொன்னை உருக்கினால் அதில் உள்ள மாசுகள் பிரிந்து விடும். இறைவன் உடலிடங்கொண்டு அதை உருக்கி விடுவதனால் இந்த உடம்பை எடுப்பதற்குக் காரணமாக வுள்ள வினைகள் நீங்கி விடுகின்றன. அவனருளால் வினைப் பிறவி சாராத நிலை வந்து விடுகிறது. தன் அன்பர்களின் வினையை ஓட்டுவதனால் அவர்களுக்கு உண்டாகும் உகப்பைவிட இறைவனுக்கே மிகுதியான உகப்பு உண்டா கிறது. வயிறு நிரம்ப உண்ட குழந்தைக்குப் பசி நீங்கி மகிழ்ச்சி உண்டாகும் போது அதற்கு உணவை ஊட்டிய அன்னை மகிழ்ச்சியடைவது போல, இறைவன் தன் அடியார் களின் வினைகளை ஓட்டி அதனால் உகப்பை அடைகிறான்.

**ஊனையும் நின்று உருக்கி என் வினையை ஓட்டுகந்து.**

அவ்வாறு உடலை உருக்கின பிறகு அவன் தன் அருளை அந்த ஆன்மாவில் பதிக்கிறான். அப்போது என்றும் அடையாத ஆனந்தத்தை ஆன்மா அடைகிறது.

உயர்ந்த பக்குவம் அடைந்த ஆன்மா இறைவன் அருளைப் பெற்று அதிக முயற்சி இல்லாமலே ஆனந்தத்தை அடைகிறது. தேனை உண்டாற்போன்ற களிப்பு உண்டா கிறது.

சற்றே பக்குவம் குறைந்த ஆன்மாக்களுக்குச் சிறிது வருத்தத்தை உண்டாக்கி அருளின்பத்தை இறைவன் வழங்குகிறான். பாலைக் காய்ச்சிச் சர்க்கரை போட்டு ஆற்றி உண்ணச் செய்வது போல அவர்களுக்குச் சிறிது வருத்தத்தைத் தந்து அவன் அருளின்பத்தைப் பாய்ச்சு கிறான்.

பின்னும் பக்குவம் குறைந்தவர்களுக்கு அதிகமான முயற்சியை மேற்கொள்ளச்செய்து, அல்லலுழந்து எய்த்துப் பின்பு அருளின்பம் பெற வழிசெய்கிறான். கரும்பைப் பிழிந்து சாற்றை நுகரச் செய்வது போன்றது அது.

இவ்வாறு உத்தம அதிகாரிகளுக்குத் தேனைப் போலவும், மத்திம அதிகாரிகளுக்குப் பாலைப் போலவும், அதம அதிகாரிகளுக்குக் கரும்பைப் போலவும் இருந்து இன்பம் வழங்குகிறான். மூவகையினருக்கும் இன்பம் வழங்கினாலும் அப்படி வழங்கும் முறையில் வேறுபாடு இருக்கிறது. அது அவர்களுடைய தகுதியைப் பொறுத்தது. ஆனால் முடிவில் யாவர்க்கும் அருளின்பம் நுகரும் இனிமை கிடைக்கிறது. இவர்கள் மூவகையினரும் இறைவனுடைய அருளைப் பெறுகிறார்கள். பெறும் முறை வேறு பட்டாலும் முடிவில் உண்டாகும் அநுபவம் ஒன்றுதான். அவ்வாறு அருள் செய்யும் தலைவனாக அவன் எழுந்தருளிகிறான்.

**தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய**
**கோனவன் போல் வந்து.**

இனியவனாகத் தலைவனாக அவன் எழுந்தருளி வந்து ஆட்கொள்கிறான்.

அதன் பின் அன்பர்கள் வேறு எதனையும் செய்யாமல் அவனுடைய தொண்டிலே ஈடுபட்டு நிற்கிறார்கள். அவன் அவர்களை அவ்வாறு நிலையாக நிற்கும்படி தன் தொழும்பில் ஈடுபடுத்திக் கொண்டருளுகிறான்.

**இனிய**
**கோனவன் போல் வந்து என்னைத்**
**தன் தொழும்பில் கொண்டருளும் வானவன்.**

பொறிகளுக்கு எட்டாத இறைவன் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய குருநாதனாக எழுந்தருளித் தானே

அன்பர்களை நாடி வந்து, என்றும் மீளா ஆளாக அவர்களை அமைத்துக் கொள்கிருன். அவன் தன் கருணையினுல் ஆட்கொள்ளும் வித்தகம் இது.

அத்தகைய பெருமான் தன் பொலிவு பெற்ற தாமரை போன்ற திருவடியைக் காட்டி அன்பர்களை அடித் தொழும்பில் ஈடுபடுத்தி விடுகிருன். தேவாதி தேவனுகிய அவன் அன்பர்கள் இருக்கும் இடத்துக்கே எழுந்தருளி வந்து தன் அருளில் அவர்களைப் பதியச் செய்கிருன். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தாலும் அவ்விடத்தே சென்று சோற்றை ஊட்டும் தாயின் கருணை போன்றது இது. அவர்கள் உணவை நாடி வரட்டும் என்று காத்திராமல், குழந்தைக்குப் பசிக்குமே என்ற எண்ணத் தால் வலியச் சென்று ஊட்டுகிருள் தாய். இறைவனும் அடியார்களை நாடிச் சென்று தன் அருளை வழங்குகிருன்

அந்த அருளைப் பெற்றபிறகு அன்பர்கள் வேருரு செயலும் இன்றி, அவனை நினைப்பதும், அவன் புகழைப் பாடுவதும், காசரணுதி அவயவங்களை அவன் தொண்டிலே ஈடுபடுத்துவதுமாக இருக்கிருர்கள்.

அத்தகைய மகாதேவனை நாம் பாடுவோம் என்கிருள் மணிவாசக நாயகி.

**ஆனையாய்க் கீடமாய் மானிடராய்த் தேவராய்**
**ஏனைப் பிறவாய்ப் பிறந்துஇறந்து எய்த்தேனை**
**ஊனையும் நின்றுஉருக்கி என்வினையை ஓட்டுகந்து**
**தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்துஇனிய**
**கோனவன்போல் வந்துஎன்னைத் தன்தொழும்பில்**
**கொண்டருளும்**
**வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானுய்.**

*அம்மானை ஆடும் பெண்ணே, ஆனையாகவும் புழுவாகவும், மானிடராகவும், தேவராகவும், இவை

யல்லாத மற்றப் பிறவிகளாகவும் பிறந்து பின்பு இறந்து இளைப்புற்ற அடியேனை, கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய குருநாதனைப் போல எழுந்தருளி வந்து என் உள்ளத்தை உருக்கியதோடு உடம்பையும் இதன் பால் இடங்கொண்டு நின்று உருகச் செய்து, பிறப்புக்குக் காரணமான என் வினைகளை ஓட்டுதலைத் திருவுள்ளத்தில் உகப்பாகக் கொண்டு, தேனைப் போலவும் பாலைப் போலவும் கரும்பைப்போலவும் இருந்து என்னைத் தன்னுடைய தொண்டில் ஈடுபடுத்திக் கொண்டருளும் தேவாதி தேவனாகிய இறைவனுடைய தாமரைமலரைப் போன்ற திருவடியையே நாம் பாடுவோம்*.

[ஆனை, கீடம் என்பன தாழ்ந்த பிறவிகளுக்கு மேலெல்லையும் கீழெல்லையும் ஆவன. மானிடர், தேவர் என்பன உயர்ந்த பிறவிகளுக்கு எல்லையாக உள்ளவை. பிறப்பு இறப்பு என்பவை துன்பம் தருவதால் பக்குவ ஆன்மாக்களுக்கு அவை அலுப்பைத் தருகின்றன. ஊனையும் என்ற உம்மை எச்சவும்மை; உள்ளத்தை உருக்கியதோடு ஊனையும் உருக்கினான் என்றபடி; "உடலிடம் கொண்டாய்" என்றபடி இவ்வூனில் நின்று உருக்கினானும். என் வினை-யான் செய்த வினைகளை. வினைகள் தீர்ந்தாலன்றி இன்பம் வாராமையின் அவற்றை முதலில் ஓட்டினான். ஓட்டுகந்து-ஓட்டுதலை உகந்து; ஓட்டு-ஓட்டுதல்; முதல் நிலைத் தொழிற்பெயர். ஓட்ட உகந்து என்பவற்றின் விகாரம் எனலும் ஆம். தேன், பால், கன்னல் என்பன மூவகை அதிகாரிகளுக்கு அருளும் வகையைக் குறித்தன. இனிய கோன் என்றது குருவை. கோனவன்: அவன், பகுதிப்பொருள் விகுதி. என்னை - ஒரு முயற்சியும் செய்யாதிருந்த அடியேனை. தன் தொழும்பில் கொண்டு-தன் தொண்டிலே ஈடுபடுத்திக் கொண்டு: தொழும்பு என்

யதற்குத் தொண்டர் கூட்டம் என்று பொருள் கொண்டு அந்தக் கூட்டத்தில் ஒருவனாக ஏற்றுக் கொண்டு என்றும் கொள்ளலாம். வானவன்-தேவன்; 'தேவர்கோ அறியாத தேவதேவன்' என்றபடி. பூங்கழல்-தாமரையைப் போன்ற திருவடி; கழல்: ஆகுபெயர்; பூவேலை செய்த கழலை அணிந்த திருவடி என்று அன்மொழித் தொகையாகவும் கொள்ளலாம். கழலே: ஏகாரம், பிரிநிலை; மற்றவற்றைப் பாடுதலை ஒழித்து அதனையே பாடுவோம் என்றபடி.

பாடுதும்-பாடுவோம். காண்: அசை.]

இறைவன் வலிய வந்து ஆட்கொண்ட பெருங் கருணையை நினைந்து வியக்கிறார் மணிவாசகர்.

திருவம்மானையில் வரும் 14-ஆவது பாட்டு இது.

# 15. தக்கயாக சங்காரம்

தக்கன் ஒரு யாகம் செய்தான். இறைவனை அதற்கு அழைக்கவில்லை. அதை அறிந்த சிவபெருமான் வீரபத்திர தேவரை அனுப்பி அதனை அழிக்கச் செய்தான். சிவபெருமானுடைய ஏவலால் அது நிகழ்ந்தமையால் அதை அப்பெருமானுடைய செயலாகவே சொல்வது மரபு. மாணிக்க வாசகர் அதை நினைக்கிறார்.

'சிவபெருமான் யாகத்துக்கு வரவில்லையே! அவன் இல்லாமல் செய்யும் யாகம் யாகம் ஆகாது' என்ற உணர்வின்றித் தேவர்களெல்லாம் அதற்குச் சென்று தமக்கு வழங்கிய அவியைப் பெற்றார்கள். தலைவனைப் புறக்கணித்துச் செய்த யாகத்தில் அவர்கள் கலந்து கொண்டது தவறான காரியம். ஆகையால் சிவபெருமான் அதைக் குலையச் செய்தான். வெவ்வேறு தேவர் வெவ்வேறு தண்டனையைப் பெற்றனர்.

யாகத்திற்கு வந்த சந்திரனைக் கீழ் வைத்துத் தேய்த்தான்.

**சந்திரனைத் தேய்த்தருளி.**

அதற்கு வந்திருந்த இந்திரன் அஞ்சிக் குயிலாக உருவெடுத்து ஓடினான். அவனுடைய சிறகுகளை முறித்தான்; அதனால் அவன் தோள்கள் நெரிந்தன.

**தக்கன்றன் வேள்வியினில் இந்திரனைத்**
**தோள் நெரித்திட்டு.**

யக்ஞத்துக்கு எஜமானனாக இருந்த தக்கனுடைய தலையை அரிந்து யாககுண்டத்தில் இட்டான். பிற பொருள்களை அவியாக இடும் அந்த அக்கினியில் தக்கனுடைய தலையையே அரிந்து போட்டான். என்னைத் தடுப்பவர் யார் என்று தருக்கி நின்ற தலை தீக்கு இரையாகியது.

**எச்சன் தலை அரிந்து.**

வானத்தில் உலாவும் கிரணங்கள் விரிந்த சூரியனுடைய பல்லைத் தகர்த்தான். பற்கள் உதிர்ந்தன: அவன் பல் இல்லாதவன் ஆனான்.

**அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல்தகர்த்துச்**
**சிந்தி.**

சூரியன் பல் இல்லாதவன் என்ற காரணத்தினால் மகர சங்கராந்தியில் அவனுக்குப் பூஜை செய்யும் போது கடித்து உண்ணாமல் விழுங்கும் பொங்கல் முதலியவற்றை நைவேத்தியம் செய்வது வழக்கம்.

தேவர்கள் அஞ்சி நடுங்கி ஓட்டம் எடுத்தார்கள். திசைக்கு ஒருவராக ஓடினார்கள். அவர்கள் அவ்வாறு ஓடுவதைக் கண்டு பெருமான் திருவுள்ளம் மகிழ்ந்தான். தேவர்களுக்கெல்லாம் தலைவன் சிவபெருமான்; "தேவர்கோ அறியாத தேவ தேவன்" என்பது மணிவாசகர் திருவாக்கு. அப்பெருமானை அழைக்காமல் செய்த வேள்வியில், தலை இருக்கவால் ஆடியது போலத் தேவர்கள் அவியுண்டு களித்தார்கள். ஆகவே, அவர்களை அடித்து ஓட்டினான்.

**திசை திசையே தேவர்களை ஓட்டுகந்து.**

அத்தகைய சிவபெருமான் பாண்டியனுடைய ஆட்சியி லிருந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கிறான். அந்தப் பதி சோலைகள் சூழ்ந்து தண்மையாக விளங்குகிறது. அந்தச் சோலைகளில் செவ்வண்ணமுடைய மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. மாலைகளை அங்கங்கே தொங்கவிட்டது போல அவை காட்சியளிக்கின்றன.

**செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன்**
**பெருந்துறையான்.**

அந்தப் பெருமான் தன் திருத்தோளில் பலவகை மாலை களை அணிந்திருக்கிறான். அவற்றில் மந்தார மாலையும் ஒன்று. 'அந்த மாலையைப் பாடி அம்மானை ஆடுவோம்' என்கிறார்.

**மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்!**

தலைவனுடைய அங்கங்களில் மாலையும் ஒன்று. அதைச் சிறப்பித்துப் பாடுதல் மரபு. தசாங்கம் என்ற பிரபந்தத்தில் மாலையைப் பாடும் பாடலும் இருக்கும். திருவாசகத்தில் வரும் திருத்தசாங்கத்தில், "தாளி அறுகாம் உவந்த தார்" என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

தக்கயாக சங்காரம் செய்த பிறகு அந்த வெற்றிக் களிப்பினாலே பெருமான் மாலையை அணிந்து மகிழ்ந்து விளங்குகிறான். அதனால் அந்த மாலையைப் பாடும்படி சொல்கிறாள். தீயவர்களின் தீய செயலை அழிப்பதனால் உலகுக்கு நலம் உண்டாகிறது. அதனால் அந்தச் செயல் போற்றுவதற்குரியது. தீய சக்திகளை ஒழிப்பதும் இறைவனுடைய கருணைதான். அது மறக்கருணை எனப் படும். நோய் தீர்ந்தான் ஒருவன் அதனைத் தீர்த்த மருத்துவனை

வாயார வாழ்த்துவது இயல்பு சமுதாயத்தில் களைகளாக இருந்து தம்முடைய அறமல்லாத செயல்களால் துன்பத்தைச் செய்பவர்களை ஒடுக்குதல் அரசனுடைய கடமை.

> "கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் தீய
> களைகட் டதனொடு நேர்"

என்பது **திருக்குறள்.** ஆதலின் அது பாராட்டுவதற்குரியது.

**சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்**
**இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலைஅரிந்து**
**அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்**
**சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த**
**செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன்**
**பெருந்துறையான்**
**மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, தக்கன் செய்த யாகத்தில் சந்திரனைக் காலால் தேய்த்து, இந்திரனுடைய தோள்களை முறித்து, வேள்வி செய்யும் தலைவனாக இருந்த அந்தத் தக்கனுடைய தலையை அரிந்து, வானத்தில் செல்லும் விரிந்த கதிர்களை உடைய சூரியனுடைய பற்களை உதிர்த்துச் சிந்தும்படி செய்து, வெவ்வேறு திசைகளில் அஞ்சித் தேவர்களை ஓடும்படி செய்து, அந்த ஓட்டத்தைக் கண்டு களித்தவனும், செவ்வண்ணமுடைய மலர்கள் மாலையைப் போலத் தொங்கும் சோலைகள் பக்கங்களில் சூழ இருப்பதும், பாண்டியனுக்கே உரியதுமாகிய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய சிவபெருமானுடைய மந்தார மாலையை நாம் பாடுவோம்.*

[சந்திரனைத் திருவடியால் தேய்த்தாலும் இறைவன் திருவடியின் தொடர்பு கொண்டதனால் அவன் அப் பெருமானுடைய திருமுடியில் இருக்கும் பேறு பெற்றான். அதனால் அதைத் 'தேய்த்தருளி' என்று சொன்னார். தக்கன்றன் வேள்வியினில் என்பதை முன் வைத்துப் பொருள் கொள்ளவேண்டும். சந்திரனைத் தேய்த்தது முதலிய யாவும் அந்த வேள்வியில் நிகழ்ந்தவை. தோள்-சிறகுகள்; சிறகுகள் நெரியவே அவன் தோள்களும் நெரிந்தன: எச்சன்-யஜ்ஞன்; யாகத்தைச் செய்தவனாகிய தக்கனைக் குறித்தது. சூரியன் அஞ்சி வானத்திற் சென்றான். அவனைப் பற்றி அவன் பல்லைத் தகர்த்துச் சிந்தினான். அந்தரமே: ஏகாரம், அசை. அலர் கதிரோன்-விரிந்த கதிரை உடைய சூரியன். பல் தகர்த்து பல்லைச் சிந்தி. திசை திசையே: ஏகாரம், அசை. தேவர்கள் வானத்தை நோக்கி ஓடாமல் எந்தத் திசையில் ஓட முடிந்ததோ அவ்விடங்களி லெல்லாம் ஓடினார்கள். தக்கன் யாகம் செய்தது இமாசலத்தைச் சார்ந்த கனகலம் என்ற இடம் என்பர்.

ஓட்டு உகந்த-ஓட்டுதலை உகந்த; ஓட்ட உகந்த என்பதன் விகாரம் என்றும் கொள்ளலாம். சென்ற பாட்டிலும், ஓட்டுகந்து என்று வந்தது. செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்: அனைத்தும் ஒரு பெயராய் நின்று உகந்த என்ற பெயரெச்சத்தின் முடிபாக நின்றன. புடைசூழ் பெருந் துறை, தென்னன் பெருந்துறை.

மாலைகளைப் போல மலர்க் கொத்துக்கள் நிரம்பிய சோலைகள் புடைசூழ்ந்திருத்தலின் மந்தார மாலை சூடுதல் எளிதாயிற்று. மாலையே: ஏ, அசை பாடுதும் - பாடுவோம்.

அம்மானாய் என்று ஒரு பெண்ணை நோக்கிக் கூறினாலும், யாவரும் ஒருங்கிணைந்து பாடுவோம் என்று கூறினாள். காண்: அசை.*

இறைவன் தக்கயாக சங்காரம் செய்த சிறப்பைச் சொன்னது இப்பாட்டு. ஒட்டக்கூத்தர் இந்தச் சங்காரத்தை விரிவாக அமைத்துத் **தக்கயாகப் பரணி** என்ற நூல் ஒன்றைப் பாடியுள்ளார்.

மகாபுராணங்களில் தக்கயாக சங்காரத்தைச் சொல்ல வேண்டும் என்பது ஒரு நியதி.

இது திருவம்மானையில் வரும் 15-ஆவது திருப்பாட்டு.

# 16. வாஞேர் அறியா வழி

இறைவனுடைய இயல்புகள் பலவற்றைச் சொல்லி, 'அவற்றை யெல்லாம் பாடி அம்மானை ஆடுவோம்' என்று சொல்ல வருகிருள், அம்மானை ஆடும் பெண்.

இறைவன் மணிவாசகரை ஆட்கொண்டான்; அவருக்குள்ளே இணைந்து கலந்தான். பசுகரணங்கள் மாறிப் பதி கரணங்கள் ஆயின. அதுவரையில் உலக இன்பங்களை நுகர்வதற்குக் கருவியாக இருந்த அவை இப்போது சிவானந்த அநுபவத்தில் மூழ்கின.

இந்த உடம்பிலே சிவானந்தம் தட்டுப்பட்டது; இறைவனே உடம்பாகிவிட்டான்; உயிரும் ஆக இணைந்தான். உடலும் உயிரும் இணையும் போதுதான் உணர்வு உண்டாகிறது. ஐம்பொறிகளின் உணர்வுகள் தோன்றுகின்றன. சிவானந்தத் தேறலை மடுத்த பிறகு அந்த உணர்வு சிவமயமாகி விட்டது. அவ்வாறு இறைவனே உள்ளே புகுந்து கலந்து வேறுபாடற்ற நிலையில் இணைந்து நின்ருன்.

**ஊனுய் உயிராய் உணர்வாய் என் உள் கலந்து.**

ஊன் என்றது உடம்பை. அதை இயக்குவது உயிர். உடம்பும் உயிரும் இணைந்த போது எழுவது உணர்வு **கம்பரும்,**

"வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறத்தும் உளன்என்ப"

என்று பாடினார். ஊன் புறத்தே தோன்றுவது; உயிர் அகத்தே உள்ளது; உணர்வு அகத்தே தோன்றிப் புறத்தே மெய்ப்பாடுகளால் புலப்படுவது.

அவ்வாறு இறைவன் கலந்து ஒன்றி நின்ற போது இன்பம் உண்டாகிறது. அந்த இன்பம் எப்படி இருக்கிறது? எந்தப் பொறியின் இனிய அநுபவத்தையும் நாச்சுவைக்குரிய பொருளை உவமையாக வைத்துச் சொல்வது வழக்கம். உண்ணும் உணவுக்குத் தேனையும் அமுதையும் உவமையாகச் சொல்வது இயல்பான பொருத்தம் உடையது. கண்ணால் காணும் குழந்தையை,'கட்டிக் கரும்பே' என்றும், காதால் நுகரும் இசையை, 'தேன் இசை' என்றும் சொல்வதால் இதை உணர்ந்து கொள்ளலாம். தாம் பெற்ற ஆனந்த அநுபவத்தை அத்தகைய உவமைகளால் விளக்க முற்படுகிறார் மணிவாசகர்.

இறைவன் உடம்பெல்லாம் இனிமை ததும்ப உட்கலந்தான்; தேனைப் போன்ற இனிமை அது. வருத்தம் சிறிதுமின்றித் தேனைப் பருகிக் களிக்கலாம். 'எனக்கு யாதொரு வருத்தமுமின்றி எளிவந்து இன்பத்தை நுகரச் செய்தான்' என்பதைப் புலப்படுத்தத் தேனாய் என்றார்.

**தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்.**

இறைவன் உட்கலந்ததனால் மரணமிலாப் பெருவாழ்வு கிடைத்தது. அதனால் அமுதமுமாய் என்றார். தேவர்கள் உண்ட அமுதம் உண்மையில் சாவை நீக்கவில்லை. "விண்ணோர் அமுதுண்டும் சாவ" என்பது சிலப்பதிகாரம். இறை

வன்தான் மெய்யான அமுதம். அவனை உண்டவர்கள் தம்முள்ளே கலக்கப் பெற்றவர்கள், இனிப் பிறந்து வந்து சாவா நிலையைப் பெறுவார்கள். ஆகவே அவனையே அமுதம் என்று சொல்ல வேண்டும்.

"கண்ணார் அமுதக் கடலே போற்றி"

என்று பிறிதோரிடத்தில் திருவாசகத்தில் வருகிறது.

தீங்கரும்பின் கட்டி என்றது கற்கண்டுக் கட்டியை. தீங்கரும்பு-இனிய கரும்பு; கற்கண்டு செய்வதற்குரிய சிறந்த செங்கரும்பைக் கட்டிக் கரும்பு என்று சொல்வார்கள். அத்தகைய இனிய கரும்பிலிருந்து உண்டாக்கிய கற்கண்டைப் போல இறைவன் இருக்கிறான். வாயில் வைத்துச் சுவைக்கச் சுவைக்க இனிக்கும் கற்கண்டைப் போல, இறைவன் 'காண்டொறும் பேசுந்தொறும் எப்பொழுதும்' இனிப்பவன்.

இந்தப் பிறவியிலேயே இறைவன் உடலிடம் கொண்டு தன்னைத் தந்தான்; இனிப் பிறவாத வழியைத் திறந்து விட்டான். இந்த உடம்பை விட்டால் அந்த வழியே சென்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை உண்டாகும். இந்த உடம்பு இருக்கும்போதே சிவானந்த அநுபவம் பெற்றிருப்பது ஜீவன் முக்தி. உடம்பை விட்ட பிறகு அடையும் நிலை விதேகமுக்தி.

இவ்வாறு ஜீவன் முக்தியையும் பிறகு விதேக முக்தியையும் அடையும் வழியை இறைவன் தன் அடியார்களுக்குக் காட்டியருளுகிறான். தேவலோகத்தில் வசமும் தேவர்கள் மனிதர்களைக் காட்டிலும் மேல் நிலையிலிருந்து பல வகையான போகங்களைத் துய்ப்பவர்களாயினும் அவர்கள் இந்த வழியை அறியமாட்டார்கள். அத்தகைய அரிய வழியை இறைவன் அடியார்களுக்கு வழங்கியருளுகிறான்.

**வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்.**

இறைவனுடைய அடையாள மாலை கொன்றை. அது வேறு யாரும் அணியாத சிறப்பை உடையது. பிறரெல்லாம் மணமும் வடிவும் வண்ணமும் உடைய வேறு மலர்களை அணியும்படி அருள் புரிந்து, யாரும் அணியாத கொன்றை மாலையை அவன் அணிந்திருக்கிறான். அது அவனுக்கே உரிய மாலையாக விளங்குகிறது. கொன்றை வேய்ந்த செல்வன் என்று சொன்னாலே போதும்; சிவபெருமான் என்று அறிந்து கொள்ளலாம். அவன் வீரம் பொருந்தியவன்.

**தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார்.**

அவன் அணிந்த கொன்றை மாலையை,

"கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்"

என்று அகநானூற்றுப் பாடல் வருணிக்கிறது.

இறைவனைச் சேவகனார் என்று பாடுகிறார் மாணிக்க வாசகர். சேவகம்-வீரம். வீர விளையாடல்களைச் செய்த வனாதலின் அவ்வாறு கூறினார். சிவபெருமான் செய்த வீரச் செயல்களை நினைவூட்டும் எட்டுத் தலங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றை அட்ட வீரட்டம் என்பர்.

இறைவன் மெய்ஞ்ஞான வடிவாய் விளங்குகிறான். அந்த ஞானம் உள்ளொளியாக நிற்பது. புறத்தே உள்ள பொருள்களைக் காட்டும் கதிரவன் ஒளி, சந்திரன் ஒளி, விளக்கின் ஒளி ஆகியவை புற இருளைமட்டும் போக்கக் கூடியவை. ஆனால் மெய்ஞ்ஞானமோ அக இருளாகிய

அறியாமையை ஓட்டுவது; மெய்ப் பொருளைக் காட்டுவது. அந்த அறிவு என்றும் அழியாதது.

**சீர் ஒளி சேர் ஆனு அறிவாய்.**

ஒளி இருளை ஓட்டிப் பொருள்களின் வடிவையும் வண்ணத்தையும் காட்டுவது. அது புற ஒளி. அதைவிடச் சிறந்தது உள்ளொளி. அதனல் அது சீர் ஒளியாயிற்று. அந்த ஒளியையுடைய அறிவே மெய்ஞ்ஞானம்.

முதலில் தேன் முதலியவற்றுல் இறைவன் ஆனந்த வடிவனுய் இருப்பதைச் சொன்னுர். ஆனு என்றதனல் அழியாமல் நிலைநிற்பதைச் சொன்னுர்; அந்த இயல்பைச் சத் என்பார்கள். அறிவு சித் எனப்படும். ஆகவே ஆனந்தம், சத், சித் என்னும் மூன்றையும் கூறி இறைவன் சச்சிதானந்தன் என்பதைக் குறிப்பாற் பெற வைத்தார்.

இறைவன் எல்லா உயிர்களுக்கும் தலைவனுக இருக்கிருன். உயிர்களை வினைகளுக்கு ஏற்றபடி பிறவியெடுத்து வாழச் செய்கிருன். ஓர் அரசன் தன் குடிமக்களை இன்னவாறு நடக்கவேண்டும் என்று வழிப்படுத்திக் காப்பது போல இறைவன் காத்தருளுகிருன். உயிர்கள் அளவிறந்தன. அந்த அந்த உயிர்களின் வினைக்கு ஈடாக இன்பமும் துன்பமும் துய்க்கச் செய்கிருன் இறைவன். அரசன் நல்லோர்களுக்கு நலம் செய்தும் தீங்கு புரிபவர்களை ஒறுத்தும் தன் ஆட்சியை நடத்துவது போல இறைவனும் தன் அருளாட்சியை நடத்துகிருன். 'அவ்வாறு பல உயிர்களுக்கும் தலைவனுக, அரசனுக விளங்கும் திறத்தை நாம் சொல்லிப் பாடுவோம்' என்கிருள் அம்மானை ஆடும் பெண்.

**அளவிறந்த பல் உயிர்க்கும்**
**கோனுகி நின்றவா கூறுதுங்காண் அம்மானுய்!**

இறைவன் தமக்குச் சிவானந்தத்தைத் தந்தருளியதையும், அளவிறந்த உயிர்களுக்குத் தலைவனாக நின்று காத்தருளுவதையும் சொன்னார்.

**ஊனாய் உயிராய், உணர்வாய்,என் உள்கலந்து**
**தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்,**
**வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்**
**தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார், சீர்ஒளிசேர்**
**ஆனா அறிவாய் அளவிறந்த பல்உயிர்க்கும்**
**கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, என்னுடைய உடம்பாகி, உயிராகி, உணர்வாகி, என் உள்ளே புகுந்து இணைந்து, தேனாகவும் அமுதமாகவும் இனிய செங்கரும்பிலிருந்து உண்டாக்கிய கற்கண்டாகவும் இனிமை தந்து, தேவர்களும் அறியாத பேரின்ப வழியை அடியேமுக்கு வழங்கியருளும், தேன் நிறைந்த கொன்றை மலரை அணிந்த வீரராகிய சிவபெருமான், சிறந்த அகவொளியை யுடையதும் அழியாததுமாகிய மெய்ஞ்ஞானமாகியும், கணக்கு இல்லாத பல உயிர்களுக்கும் தலைவராகியும் நின்ற வண்ணத்தை விரித்துச் சொல்லிப் பாடுவோம்.*

[தேனாய்: தேனுமாய் என்று எண்ணும்மையை விரித்துப் பொருள் கொள்க. அவ்வாறன்றி அமுதமும் கட்டியும் என்பவற்றிலுள்ள உம்மைகளை இறந்தது தழீஇய எச்சவும்மைகளாகக் கொள்வதும் ஒன்று. ஊனாய் முதலிய மூன்றும் கலந்த வகையைச் சொல்லியவை. தேனாய் முதலிய மூன்றும் இன்பம் தந்ததைக் குறித்தவை. ஊனுக்குத் தேனாகவும், உயிருக்கு அமுதமாகவும், உணர்வுக்குத் தீங்கரும்பின் கட்டியாகவும் இனித்தவன் என்று இணைத்துப் பொருள் கொள்வதும் பொருந்தும். தீங்கரும்பு என்றது

கட்டிக் கரும்பாகிய செங்கரும்பை; இனிமையை யுடைய கரும்பு என்பது சொற்பொருள். கட்டி—கற்கண்டு. வானோரும் என்ற சிறப்பும்மை தொக்கது. வழி—அடையு மாறு. எமக்கு என்றது அடியார்களையும் உளப்படுத்திச் சொன்னது. இறைவன் அருளநுபவம் பெற்ற பெருமிதத் தால் தம்மையே சுட்டியதாகவும் கொள்ளலாம். "நாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்று அப்பரும் இத்தகைய பெருமிதத்தில் பாடியது காண்க.

தேன் ஆர்—தேன் நிறைந்த; வண்டு ஒலிக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்; "சூழ்த்தமது கரமுரலும் தாரோயை" என்று திருவாசகத்தில் பிடித்தபத்தில் வருவது காண்க. மலர்க் கொன்றை—கொன்றை மலர். சேவகனார்—வீரர். புற ஒளியை விலக்கச் சீர் என்ற அடை கொடுத்தார்; சீர் ஒளி—உள்ளொளி. ஆறு—அமையாத; அழியாத. கோன்—தலைவன்; அரசன். நின்றவாறு என்றது நின்றவா என நின்றது. சேவகனார் நின்றவா கூறுதும் என்று முடிக்க. கூறுதும்—விரித்துரைத்துப் பாடுவோம். காண்: அசை.]

இறைவன் தமக்குச் சிவானந்த அநுபவத்தை அருளிய சிறப்பை நினைந்து பாடியது இது.

திருவம்மானையில் வரும் 16-ஆவது பாடல் இது.

# 17. காதல் அநுபவம்

"என்னடி இது? ஏதோ ஒருவகையாக இருக்கிறயே?" என்கிறள் தோழி.

இறைவனிடம் ஆராக் காதல் கொண்ட நங்கை பேசுகிறள்.

"நான் மலரைச் சூடப் போகிறேன்."

"எந்த மலர்?"

"கொன்றைப் பூவைச் சூடிக் கொள்ளப் போகிறேன்."

"கொன்றைப் பூவையா? அந்தப் பூவை யாரும் புனைவது இல்லையே!"

"எம்பெருமான் அதைத்தான் அணிந்திருக்கிறன், அதனல் அதுவே எல்லா மலர்களிலும் சிறந்தது. அது பிரணவ மலர் அல்லவா?"

"அதை நீ எதற்காகச் சூடிக்கொள்ள வேண்டும்?"

"அவனுக்கு எது விருப்பமானதோ, அதுவே எனக்கும் ஏற்றது. அவன் திருத்தோளில் அந்த மலர் மாலையே விளங்குகிறது. அதை அணிந்துகொண்டு அதன் மூலமாக அவனுடைய திருத்தோளில் எனக்கு உள்ள விருப்பத்தைப் புலப்படுத்துவேன்."

"பிறகு?"

"இறைவனை அணுகுவேன். நானும் கொன்றை மலரைச் சூடியிருப்பது கண்டு அந்தப் பெருமான் என் உள்ளக் கிடக்கையை உணர்ந்து கொள்வான். என்னிடம் அன்பு காட்டுவான். அவனுடைய திரண்ட தோள்களின் அழகையே பார்த்து இன்புறுவேன். அவன் என்னிடம் காட்டும் அன்புக் குறிப்பை அறிந்து அவனுடைய தோளைத் தழுவுவேன்; அவனை அணைத்துக்கொள்வேன்."

**சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன் திரள் தோள்**
**கூடுவேன்; கூடி முயங்குவேன்.**

"அவ்வாறு தழுவிக் கொள்ளும்போது எனக்கு ஒரு விதமான இன்ப மயக்கம் உண்டாகும். அந்த மயக்கத்தில் ஆழ்ந்து நிற்பேன். அதுவே ஒரு சிறந்த அநுபவம். அவன் என்னைச் சிறிது புறக்கணிப்பவனைப் போலத் தோற்றினால் என் உள்ளத்தில் ஊடல் எழும். அவனை அணைந்த பிறகு நான் அவனை மணந்து கொண்ட காதலியாகி விடுவேன்; மணந்த பிறகு பெண்களுக்குக் கூடுவதற்கும் ஊடுவதற்கும் உரிமை உண்டு. ஆகவே சற்றே ஊடுவேன்."

**கூடி முயங்கி மயங்கி நின்று**
**ஊடுவேன்.**

"நான் ஊடினாலும் என் உள்ளம் அவனையே நாடி நிற்கும். பெண்களின் பலவீனம் இது. அவனிடம் உள்ள காதலே அந்த ஊடலுக்கும் காரணம். அப்போது என் உள்ளத்தில் அவன் அருளைப் பெற வேண்டும் என்ற எண்ணம் வலிமை பெறும். அவன் திருவாயைப் பார்ப்பேன். அந்தத் திருவாயிலிருந்து ஓர் அன்புச் சொல் வராதா என்று ஏங்குவேன். அந்தத் திருவாயமிழ்து ஊறலை நுகர மாட்டேனா என்று உருகுவேன்."

**ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன்.**

"என்னுடைய உள்ளம் உருகும்; உடல் உருகும். அவனுடைய திருவடியையே எண்ணியிருப்பேன். இந்த ஊடல் நீட்டிக்காதபடி நாமே மனம் குழைந்து சிவன் அடியில் விழுந்து பணியலாமா என்று எண்ணமிடுவேன்."

**உள் உருகித்**
**தேடுவேன்; தேடிச் சிவன் அடியே சிந்திப்பேன்.**

"அவன்பால் நான் கொண்ட காதல் புறத்தில் உள்ள தழுவுதல் முதலிய செய்கைகளோடு அமைந்தது அன்று. அவனை என் உள்ளத்தே புதைத்து வைத்திருக்கிறேன். ஆதலால் அங்கே அவன் திருவுருவத்தைத் தேடிச் சிந்தித்து, அவன் திவ்ய தரிசனத்தை உள் முகமாகப் பார்த்து இன்புறுவேன்."

"அதிசயமான காதலாக இருக்கிறதே!" என்கிறாள் தோழி.

"ஆம். இது அப்பிராகிருதமான காதல். உலகியலின் தொடர்பே இதற்கு இல்லை. இறைவன் எங்கே என்னைப் புறக்கணித்து விடுவானோ என்ற ஐயம் எழும். அன்பும் பற்றும் கொண்ட ஒரு பொருள் கையில் இருந்தாலும் அது எங்கே நழுவி விடுமோ என்று ஐயுற்று அஞ்சுவது அந்த அன்பின் இயல்பு. ஆகவே அந்த எண்ணம் வரும்போது நான் வாடுவேன்."

**வாடுவேன்.**

"இறைவனிடத்தில் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. தன்னை நம்பினவரை அவன் கைவிடமாட்டான். தன்னைத் தழுவ இடம் கொடுத்தவன் என் அன்பின் ஆற்றலை உணர்வதற்காகச் சிறிதே கைவிடுபவனைப்

போலத் தோற்றக்கூடும். அதனால் என் உறுதி தளராது இறைவனுடைய அருள் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உறுதியினால், வாடின யான் மறுபடியும் வாட்டம் நீங்கி மலர்ச்சி பெறுவேன்; உள்ளம் மலர முகம் மலர நிற்பேன். குழந்தைக்கு ஒரு பொருளைக் காட்டிப் பிறகு மறைத்து, அது ஏங்கும் போது மறுபடியும் அளிப்பது போன்ற விளையாட்டை அவன் செய்யக்கூடும். என் உள்ளத்தே நிற்பவனாதலின் என் அந்தரங்கத்தை அறிவான்; எனவே அவன் என்னை ஏமாற்றாமல் அருள் புரிவான் என்ற எண்ணம் தோற்றும் போது எனக்கு உற்சாகம் உண்டாகும்; புது மலர்ச்சி எழும்.''

**வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்.**

"இவ்வாறெல்லாம் தன்னிடம் உறுதியான காதல் கொண்ட என்னை அந்த இன்பச் சுழற்சியிலே ஆழ்த்தியும் புறம் போக்கியும் மீட்டும் சிந்தையில் நின்று இனிமை தந்தும் திருவிளையாடல் புரிபவன் அவன். அவன் எது செய்தாலும் அது எனக்கு இன்பமாகவே இருக்கும். உணவை உண்ணும் வாய்ப்பு உடையவனுக்குப் பசி எடுத்தால், பிறகு உண்ணும்போது அந்த உணவின் சுவை மிகுதியாகத் தோன்றும். ஊடியும் வாடியும் நிற்கும் எனக்கு இறைவனுடைய அருள் இன்பம் கிடைக்கும் போது அது தெவிட்டாத தேனாய், ஆராத அமுதமாய் இருக்கும்.''

"அவன் எவ்வாறு இருப்பான்?'' என்று தோழி கேட்கிறாள்.

"அவனை நெடுந்தூரத்திலிருந்து பார்க்கும்போதே அடையாளம் தெரிந்து விடும். அவன் திருக்கரத்தில் அனலை ஏந்தியிருப்பான். அந்த அக்கினியே சாட்சியாக நான் அவனை

அடைவேன். அனலை ஏந்திக்கொண்டு ஆனந்த நடனம் ஆடுபவன் அவன்."

"நீ சொல்வதெல்லாம் புதுமையாக இருக்கிறதே!" தோழி இவ்வாறு சொல்கிறாள்.

"ஆம்! உலகத்தில் எங்கும் காணாத புதுமை இது. அவன் கொன்றையை அணிந்திருப்பது புதுமை. அனல் ஏந்தி ஆடுவது புதுமை. அவனே ஒரு காலைக்கு ஒருகால் அழகும் இளமையும் மிளிரும் திருமேனிப் புதுமையை உடையவன். அவனைக் காதலிக்கும் என் இயல்பும் புதுமை தான்."

"நாம் அம்மானையல்லவா ஆடுகிறோம்? அதை மறந்து விட்டாயா?"

"மறக்கவில்லை. அதே சமயத்தில் அவனையும் மறக்க முடியவில்லை. என் உள்ளம் கவர்ந்து உருக்கும் அந்தப் பெருமானுடைய செவ்வண்ணத் திருவடியையே பாடி ஆடுவோம். அவன் புகழைப் பாடுவதில் உண்டாகும் இன்பம் வேறு எதனாலும் வராது. அவன் திருவடியையே நாம் பாடி அம்மானை ஆடுவோம். அவன் அனலேந்தி ஆடுகிறான். நாம் அவன் திருவடியைப் பாடி அம்மானை ஏந்தி ஆடுவோம்."

**சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன் திரள் தோள்**
**கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்று**
**ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன்; உள்உருகித்**
**தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்;**
**வாடுவேன்: பேர்த்தும் மலர்வேன்; அனல்ஏந்தி**
**ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, யான் சிவபெருமான் பால் காதல் கொண்டவளாதலின் அவனுக்குரிய

கொன்றைப் பூவைச் சூடுவேன்; அவ்வாறு சூடிச் சிவபெருமானுடைய திருத்தோள்களை அணைவேன்; அவ்வாறு அணைந்து அவனைத் தழுவி, அதனால் உண்டாகும் இன்ப மயக்கத்திலே மயங்கி நின்று, பிறகு அவன் சிறிது புறக்கணிப்பதாகக் கண்டாலும் ஊடுவேன்; அவனுடைய செவ்வண்ணத் திருவாயிலிருந்து வரும் சொல்லுக்கும், அதன் இதழூறலுக்கும் ஏங்கி உருகுவேன்; என் உள்ளம் உருக நின்று உள்ளே தேடுவேன்; அவ்வாறு தேடி அப்பெருமானுடைய திருவடியையே தியானிப்பேன்; அது தோற்றாமல் சிறிது தாழ்க்குமானால் வாடுவேன்; அவனருள் கிடைக்கும் என்ற உறுதியினால் மீட்டும் தளர்ச்சி நீங்கிக் கிளர்ச்சியைப் பெறுவேன். தன் திருக்கரத்தில் அனலை ஏந்திக் கூத்தாடும் அந்தப் பெருமானுடைய செம்மையை உடைய திருவடிகளையே இப்போது பாடுவோமாக!*

[சூடுவேன்-தலையில் அணிவேன்; புனைவேன் என்று பொதுவாகவும் கொள்ளலாம். பூங்கொன்றை-கொன்றைப்பூ; முன்பின்னாகத் தொக்க தொகை; பொலிவு பெற்ற கொன்றை என்றும் பொருள் கொள்ளலாம். வீரம் மிக்கதாதலின் திரள் தோள் ஆயிற்று. கூடுதல்-தோளை அணைதல். முயங்குதல் - ஆரத்தழுவுதல். மயங்கி நின்று-அந்த இன்ப மயக்கத்திலே ஆழ்ந்து. ஊடுவேன்-பிறகு சிறிதே புறக்கணிப்பவன் போல இருப்பது கண்டு ஊடல் கொள்வேன். செவ்வாய்க்கு-செவ்வாயிலிருந்து வரும் சொல்லுக்கும் இதழூறலுக்கும்; செவ்வாய்: ஆகுபெயர். தேடுவேன்-உள்ளத்தே தேடுவேன். அவன் என் காதல் திறத்தைக் காணச் சிறிதே மறைய, அப்பொழுது அவனைத் தேடுவேன் என்றும் கொள்ளலாம். கழல்-திருவடி; ஆகுபெயர். கழலே: ஏ, பிரிநிலை; பிறிதொன்றையும் நினையாது அந்தத் திருவடித் தியானத்திலே ஆழ்வேன் என்றபடி. வாடுவேன்-அவனருள் இன்னும் முற்றக் கிடைக்கவில்லையே என்று வாடுவேன்.

மலர்வேன்-அவன் அருள் செய்வான் என்ற உறுதி தோற்றவே மலர்வேன். 'அவன் சிறிதே ஒளித்து நின்றபோது ஏங்கி வாட, அந்த வாட்டம் கண்டு மீட்டும் அவன் காட்சி தருவான்; அப்போது மீட்டும் உள்ளம் தளிர்ப்பேன்' என்றும் பொருள் கொள்ளலாம். அனல் ஏந்தி ஆடுவான்-தன் திருக்கரத்தில் தீயை ஏந்திக் கொண்டு நடனமாடுபவன். ஆடுவான்: வினையாலணையும் பெயர். பாடுதும்-பாடுவோம். காண்: அசை.]

இறைவனிடம் காதல் கொண்ட மணிவாசக நாயகியார் அந்தக் காதலால் உண்டாகும் அநுபவங்களை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

இது திருவம்மானையில் வரும் 17-ஆவது பாடல்.

# 18. எளிவந்த பெருமான்

சிவபெருமானுடைய ஒரு பாதியில் அம்பிகை எழுந்தருளியிருக்கிருள். அவனை, "மாதிருக்கும் பாதியன்" என்று மணிவாசகர் பாடுவார். இறைவனுடைய நிறம் செம்மை; இறைவியினுடைய நிறம் பசுமை. செம்மை நிறத்தின் அருகே அம்மையின் நிறம் எடுப்பாகக் கிளர்ந்து தோன்றும்.

அம்பிகை இனிய மென்மையான சொல்லையுடையவள். நிறத்தால் கிளி போன்ற பசுமையை உடையவளாக இருப்பது போலச் சொல்லாலும் கிளியைப் போல இருப்பவள்; மென் மொழியைப் பேசி இன்புறுத்துவாள். கலைமகளின் வீணையிசையும் தோல்வியடையும் இனிமை அம்மையின் மொழிக்கு உண்டு. இதைச் சங்கராசாரியார் **சௌந்தர்ய லஹரியில்** ஒரு சுலோகத்தில் சொல்கிருர்.

கலைமகள் அம்பிகையின் சந்நிதானத்திலிருந்து வீணை வாசிக்க விரும்பிஞள். அன்னையின் திருவுள்ளச் சம்மதம் பெற்று வாசிக்கத் தொடங்கிஞள். கலைஞர்களுடைய கலைத்திறத்தைப் பாராட்டிஞல்தான் அவர்களுக்கு ஊக்கம் உண்டாகும். ஆதலின் கலைமகளின் இசையைக் கேட்டு மகிழ்ந்த தேவி, "நன்முக இருக்கிறது!" என்று சொன்ஞளாம். அதைக் கேட்டவுடன் கலைமகள் வீணை வாசிப்பதை நிறுத்தி அதை உறையிலிடத் தொடங்கிஞள்.

அம்பிகை பாராட்டிச் சொன்ன மொழி யாழிசையை விட இனியதாக இருந்ததாம். அதைக் கேட்ட கலைமகள், 'இந்த இனிமைக்கு முன் நம் வீணை இசை எம்மாத்திரம்?' என்று நாணி வீணையை உறையில் இட்டாளாம். இப்படி ஓர் அழகிய காட்சியைச் சங்கராசாரியார் காட்டுகிறார்.

அத்தகைய இனிய மென்மையான மொழியைப் படைத்தவள் அன்னை; கிளியின் சொல்லைப் போன்ற இனிய மொழியை உடையவள். அவளை ஒரு பாதியில் கொண்டிருக்கிறான் இறைவன். அந்தப் பாதியின் பச்சை நிறம் நன்றாக விட்டு விளங்குகிறது.

**கிளிவந்த மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனை.**

'கிளிவந்த' என்பதற்கு கிளியின் மொழியினது இயல்பு அமைந்த என்று பொருள் கொள்ள வேண்டும். அம்பிகையின் மொழியைக் கேட்டுக் கிளிகள் தம் இனமென்று வந்தன; அப்படி வருதற்குக் காரணமான மொழி என்றும் கொள்ளலாம்; "ஆயோ எனுங்குரல் ஐயோ புனத்தை அழிக்கின்றதே" என்ற பழம் பாடலில் இந்தக் கருத்து இருப்பதைக் காணலாம். 'ஆலோலம் பாடும் குறமடந்தையின் குரல் கிளிகளை ஓட்டாமல் அது தம் இனத்தின் குரலென்று எண்ணி வந்து கூடித் தினைப்புனத்தை அழிக்கச் செய்கின்றது' என்பது அதனால் விளங்கும் செய்தி.

திருமாலும் பிரமனும் காண இயலாதபடி சோதி வடிவாக நின்றான் இறைவன். அவனை உள்ளத்தில் தியானித்துப் பழகினால் அவன் வடிவைக் காணலாம். "கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க" என்று சிவபுராணத்தில் மணிவாசகர் கூறுவார். அவ்வாறின்றி மாலும் அயனும் வெளியே வந்து அவன் அடிமுடிகளைத் தேடியதனால் அவர்களால் அறிய முடியவில்லை.

அவர்களால் காண முடியாத ஞான சொரூபியாக இருப்பவன் இறைவன்.

**வெளி வந்த மால் அயனும் காண்பரிய வித்தகனை.**

"பத்துடை அடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்று திருவாய் மொழியில் திருமாலைப் பிறருக் கரிய வித்தகன் என்று நம்மாழ்வார் கூறுவது இங்கே நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு மாலயனும் காணற்கரியவனாக உள்ள சிவ பெருமான் தமக்கு எளிவந்தருளிய சிறப்பைச் சொல்ல வருகிறார் மணிவாசகர்.

அடியவர்களுக்கு அவன் தன் அருளை வழங்குவான்; இன்ப அநுபவத்தைத் தருவான். தேனை அடையிலிருந்து பிழியும்போது அது கக்கலும் கரிசலுமாக இருக்கும். அதை வடிகட்டித் தெளிவாக்கி நுகர்வார்கள். இறைவன் தெளிந்த தேனாகவே இருக்கிறான். அவனை அடியார்கள் அநுபவிக்கிறார்கள். "பாலும் தெளிதேனும்" என்று ஔவையார் தம் பாட்டிலும் தெளிந்த தேனைச் சொல்கிறார்.

**தெளிவந்த தேறலை.**

இறைவனுடைய மாதிருக்கும் பாதியனாகிய திருக்கோலத்தைச் சொல்லி, அவன் மாலும் அயனும் காண்பதற்கு அரியவன் என்று கூறி, ஆயினும் அடியார்களுக்குத் தெளிந்த தேனைப்போல இன்பம் தருபவனாக இருப்பதை உரைத்து, பிறகு தமக்கு அருள் புரிந்ததைச் சொல்கிறார்.

இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொள்வதற்காகக் குருவடிவம் கொண்டு காண்பதற்கு எளியவனாக வந்து, திருப்பெருந்துறையில் தங்கியிருந்தான். மணிவாசகர்

அவனைத் தரிசித்தபோது அவர்பால் இரக்கம் வைத்து உபதேசம் செய்தான். பிறராலே இத்தகையது என்று எண்ணுவதற்கரிய இனிமையை உடையது அவன் அருள். அவன் அருளநுபவத்தைப் பெறும்போது யாவும் மறந்த நிலை உண்டாகும். "உணர்ந்தார்க் குணர்வரியோன்" என்று திருக்கோவையாரில் பாடுவார் மாணிக்கவாசகர்:

**சீரார் பெருந்துறையில்**
**எளிவந்து இருந்து இரங்கி எண் அரிய இன்னருளால்.**

இறைவன் கண் காணக் கோலம் காட்டி, காது கேட்க இன்னுரை கூறி, உள்ளம் இரங்கி அருள் புரிந்தான். அந்த அருளால் உள்ளத்தில் உள்ள அறியாமை யென்னும் இருள் முற்றும் போய்விட்டது. அவனுடைய உபதேசத்தால் ஞான ஒளி வந்து அவருடைய உள்ளத்திலே புகுந்தது. அங்கே இருள் போய் ஒளி திகழ்ந்தது.

இருள் நிறைந்த உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சி யருளிய தண்ணளி உடையவன் இறைவன்.

**ஒளி வந்து என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழ**
**அளிவந்த.**

மாணிக்கவாசகரை ஆட்கொள்வதற்காக இறைவன் குருவின் கோலங்கொண்டு எளியவனாக வந்தான். புறக்கண் காண வந்த அப்பெருமான் அகக்கண்ணில் ஒளியேற்றினான்; ஞான ஒளியைப் பாய்ச்சி அஞ்ஞான இருளைப் போகச் செய்தான். இவ்வளவும் மாணிக்கவாசகரின் முயற்சியே இல்லாது அவனுடைய தண்ணளியால் விளைந்தவை.

அவன் அந்தணத் திருக்கோலம் கொண்டு திருப்பெருந் துறைக்கு எழுந்தருளி வந்து மணிவாசகரை ஆட்கொண் டான்.

அளிவந்த அந்தணனை.

அவன் இவ்வாறு திருப்பெருந்துறைக்கு வந்து அருள் புரிந்த செயலைப் பலவிடங்களில் மணிவாசகர் சொல்வார்.

"செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்"

என்று திருப்பள்ளியெழுச்சியில் பாடுவார்.

பிரமனை ஆதியந்தணன் என்றும், சிவபெருமானை அநாதியந்தணன் என்றும் கூறுவது மரபு.

இறைவன் திருப்பெருந்துறைக்கு வந்து இருந்தான். அவனருளால் ஞான ஒளி மணிவாசகர் உள்ளே புகுந்து நின்று நலம் செய்தது.

'அத்தகையவனை நாம் பாடுவோம்' என்கிருள் அம்மானை ஆடும் பெண்ணாக நின்ற மணிவாசக நாயகி.

**கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை,**
**வெளிவந்த மால்அயனும் காண்பரிய வித்தகனைத்**
**தெளிவந்த தேறலைச் சீர்ஆர் பெருந்துறையில்**
**எளிவந்து இருந்துஇரங்கி எண்ணரிய இன்னருளால்**
**ஒளிவந்துஎன் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ**
**அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண், அம்மானாய்!**

*அம்மானை ஆடும் பெண்ணே, கிளியினது மொழியைப் போன்ற மென்மையையுடைய மொழிகளைப் பேசுபவளாகிய உமாதேவியின் பச்சை நிறம் கிளர்ந்து தோன்றும் இடப் பாதியை உடையவனை, உண்முக நோக்கம் இன்றி வெளியே காணுவோம் என்று வந்த திருமாலும் அயனும்

காண்பதற்கரிய ஞான உருவுடையவனை, தன் அடியார்களுக்குத் தெளிந்த தேனைப்போல இனிமை தருபவனை, பல வகைச் சிறப்புக்கள் நிறைந்த திருப்பெருந்துறையில் அடியேன்பொருட்டு எளியவனாக எழுந்தருளி, அடியேனுக்காகத் தங்கிக் காத்திருந்து, அடியேனைக் கண்டு இரக்கம் கொண்டு, நினைப்பதற்கு அரிதாகிய இனிமையை உடைய தன்னுடைய பெருங்கருணையினால் ஞானமாகிய ஒளி வந்து அடியேனது உள்ளத்தின் உள்ளே புக, அதனால் அங்கே ஒளி விளங்கும்படியாக, அன்பு செய்த அநாதியந்தனாகிய சிவபெருமானைப் பாடுவோம்.*

[கிளி - கிளியின் மொழி; ஆகுபெயர். வந்த: உவம உருபு. கிளிகள் தம் இனமென்று வந்து அடைவதற்குக் காரணமான மென்மொழி என்பதும் ஒரு பொருள். கேழ் - நிறம். கிளரும் - கிளர்ந்து தோன்றும். செவ்வண்ண மேனிக்கு அருகில் இருப்பதனால் விட்டு விளங்குகிறது. வெளிவந்த - புறத்தே தேடுவதற்காக வந்த; 'உள்ளே தேடியிருந்தால் கண்டிருக்கலாம்' என்ற குறிப்பு இதனால் புலப்படுகிறது. மால் அயனும் - மாலோடு சேர்ந்த அயனும்; மாலும் அயனும் என்று உம்மையைத் தனித்தனியே கூட்டிப் பொருள் கொள்வதும் பொருந்தும். காண்பு - காணுதல். தெளிவந்த-தெளிந்த. தெளிவந்த என்ற அடை வந்தமையால் தேறல் என்பது தேன் என்னும் துணையாய் நின்றது. சீர் - மூர்த்தி தலம் தீர்த்தம் முதலிய பல வகைச் சிறப்புக்கள். எளிவந்து - எளியனாக வந்து; எளிவா என்பது பகுதி இருந்து - எனக்காகக் காத்திருந்து. இரங்கி - என்னைக் கண்டபோது இரங்கி. எண் அரிய - இன்ன தன்மைத்து என்று நினைப்பதற்கு அரிய. இன் அருள் - இனிமை தருவதற்குக் காரணமான அருள்.

ஒளி திகழ - அவ்வொளி திகழ; ஒளி என்றது இங்கே சுட்டு மாத்திரையாய் நின்றது; "கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே" (அப்பர் தேவாரம்) என்பதில் இரண்டாவது முறையும் கனியைச் சொன்னது போன்றது இது. அளிவந்த - தண்ணளி செய்த; என்பால் தண்ணளி வருதற்குக் காரணமான என்றும் கொள்ளலாம். காண்: அசை.

பாதியனை, வித்தகனை, தேறலை, அந்தணனைப் பாடுதும் என்று முடிக்க.]

இது திருவம்மானையில் வரும் 18-ஆவது பாடல்.

# 19. இன்னமுதை அன்னுன்

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் சிவபெருமான் பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூன்று மூர்த்திகளிடம் ஒப்படைத்திருக் கிருன். அந்த மும்மூர்த்திகளுக்கும் முதல்வனுக, தலைவனுக இறைவன் விளங்குகிருன். அந்த மூவர்களும் வந்து வந்து போவார்கள். ஆனுல் இறைவன் என்றும் நித்தியனுக இருந்து அவர்களைத் தன் ஆணையினுல் தொழில் செய்யும் படி செய்கிருன்.

"மூஅண்ணல் தன்சந்நிதி முத்தொழில் இயற்ற வாளா
மேவுஅண்ணல்"

என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் பாடுவார்.

**முன்னுனை மூவர்க்கும்.**

அவன் எல்லாப் பொருளுமாக இருந்து மறைந் நிற்கிருன். உலகத்தைப் படைத்தல் முதலியவற்றை செய்யும் முத்தேவர்களும் தோற்றுவதற்கு முன்பே அவ இருந்துகொண்டிருக்கிருன். அவ்வாறே அவர்கள் தத்தம குரிய காலம் முடிந்து மறைந்த பிறகும் அவன் இருக்கிருன்

**முற்றுமாய் முற்றுக்கும் பின்னுனை.**

எல்லாவற்றுக்கும் முன் உள்ளவனாய், யாவும் அழிந்த பிறகும் அழியாமல் பின்னும் உள்ளவனாய் விளங்கும் அப்பெருமானை,

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!"

என்று மணிவாசகர் **திருவெம்பாவையில்** பாடுகிறார்.

இறைவன் பின்னு செஞ்சடை உடையவன். அந்தச் சடை அவனுடைய பழமையைக் காட்டும் அடையாளமாக விளங்குகிறது.

**பிஞ்ஞகனை.**

அப்படி உள்ள சிவபெருமான் அடியார்கள் வந்து தன்னை வழிபடும்படி கோலங் காட்டித் திருப்பெருந் துறையில் நித்திய வாசம் செய்து கொண்டிருக்கிறான். அந்தத் தலத்தில் என்றும் தலைவனாக இருந்து விளங்குகிறான். அவ்வப்போது அந்தத் தலத்தில் பெரியவர்கள் என்றும் தலைவர்கள் என்றும் பலர் தோன்றி மறைவார்கள். அவனே அங்கே என்றும் நிலைகொண்டிருக்கிறான்.

**பேணு பெருந்துறையின் மன்னனை.**

தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவன் அவன்; மகா தேவன். வானுலகத்துக்கு அவனே இறைவனாக என்றும் இருக்கிறான். வானுலகில் தத்தமக்குரிய பகுதிகளில் ஆட்சி புரியும் தேவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மேலாக, அவ்வுலகின் மேலான தலைவனாக இருப்பவன் இறைவன். மாநிலங்களில் அமைச்சரவை இருந்து ஆட்சி நடத்தும். எனினும் அவர்களுக்கும் மேலாக ராஷ்டிரபதியாகிய குடியரசுத் தலைவர் பதவி வகிப்பார். அமைச்சரவை கலைக்கப்பட்ட போது அவரே ஆட்சியை நடத்துவார்.

மற்றத் தேவர்கள் மாநிலத்தில் ஆட்சி நடத்தும் அமைச்சர்களைப் போல இருக்கச் சிவபெருமான் குடியரசுத் தலைவரைப்போல இருந்து ஆணை செலுத்துவான்.

**வானவனை.**

அவன் அருளே அம்பிகையாக உருவெடுத்து விளங்குகிறது. "அருளது சத்தி யாகும் அரன் றனக்கு" என்பது **சிவஞான சித்தியார்.** சத்தனாகிய அவனிடத்தில் சத்தியாகிய அருள் நிரம்பியிருக்கிறது. அவன் எந்த அளவுக்கு வியாபித்திருக்கிறானோ அந்த அளவுக்குச் சிறிதும் குறைவின்றி அவன் திருவருள் நிரம்பியிருக்கிறது. சிவன் பாதி, அருள் பாதியாக இருக்கிறான். அதையே அர்த்தநாரீசுவரத் திருக்கோலம் உணர்த்துகிறது.

**மாது இயலும் பாதியனை.**

அவன் எவ்விடத்திலும் இருக்கிறான்? இந்த நாட்டில் பல இடங்களில் திருக்கோயில் கொண்டிருக்கிறான். தமிழ் நாட்டில் சோழ மண்டலம், பாண்டி மண்டலம், சேர மண்டலம் என்ற மூன்று பெரும் பகுதிகள் உண்டு. திருப்பெருந்துறை பாண்டி மண்டலத்தில் உள்ளது; பாண்டியன் ஆட்சிக்கு உட்பட்டு விளங்கியது. அதனால் அதைத் 'தென்னன் பெருந்துறை' என்று பல இடங்களில் வாதவூரடிகள் கூறுவார்.

அவன் சோழ மண்டத்திலும் பல தலங்களில் எழுந்தருளியிருக்கிறான். அவற்றில் ஒன்றாகிய திருவானைக்காவை இப்போது நினைக்கிறார்.

**தென் ஆனைக்காவானை.**

என்றாலும் அடிக்கடி தம்மை ஆட்கொண்ட இடமாகிய திருப்பெருந்துறையையும் அத்தலம் அமைந்த பாண்டி

நாட்டையும் அவர் சொல்வார். இறைவனைத் தென் பாண்டி நாட்டில் தரிசித்து அருள் பெற்றார். தாம் இனங் கண்டு கொண்ட தென்னாடுடைய அந்தச் சிவபெருமானை எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று அவர் சொல்வார்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்பது **போற்றித் திருவகவல்.**

**தென்பாண்டி நாட்டானை.**

திருவானைக்காவிலுள்ள சிவபெருமானுக்கு, 'என்னானைக் கன்று' என்பது ஒரு திருநாமம். அதை நினைக்கிறார்.

**என் ஆனை.**

அவன் யானையைப் போலக் கம்பீரமாக விளங்கு கிறான். "இருகை வேழம் ஒத்து" என்று வேறோரிடத்தில் பாடுவார் மணிவாசகர்.

அன்பர்கள் இறைவனை நெருங்கி உளம் கசிந்து, "என் ஆனை! என் அப்பன்!" என்று போற்றுவார்கள். குழந்தை களை இவ்வாறு சொல்லிப் பாராட்டுவது தாய் தந்தையர் இயல்பு. அவ்வாறு, 'என் ஆனை, என் அப்பன்' என்று அன்பினால் நெருங்கி உள்ளம் உருகிப் போற்றுகின்ற அன்பர்களுக்கு அவன் இனிய அமுதத்தைப் போல உயிரில் இனிமையைப் பெய்கிறான்.

**என் ஆனை என் அப்பன் என்பார்கட்கு இன்னமுதை.**

அன்பர்கள் ஆனை என்றும் அப்பன் என்றும் சொல்வது மட்டும் அன்று; அவன் தமக்கே உரிமையுடையவன் என்று தனித்தனியே 'என் ஆனை, என் அப்பன்' என்கிறார்களாம். அவனைப் பெற்றால் யானையைப் பெற்ற செல்வர்களைப் போலச் செம்மாந்திருக்கலாம். அவன் 'என்னானை' என்று

சொல்லும்படி குழந்தை போலவும், 'என் அப்பன்' என்று சொல்லும்படி தந்தையாகவும் இருக்கிறான். அவனைக் குழந்தையாக எண்ணி, 'என் ஆனை' என்பவர்கள், பிறகு தம்மைக் குழந்தைகளாக்கிக் கொண்டு, 'என் அப்பன்' என்கிறார்கள். ஆனை போலப் பெரியவனாகத் தோற்றமும் மதிப்பும் உடையவனாக இருப்பினும் அன்பர்களுக்கு அவன் எளியவனாக, அவர்களுக்கு உரிமையுடையவனாக, 'என் ஆனை' என்று உறவுகொள்ளும்படியாக விளங்குகிறான். அதே சமயத்தில அவர்களைக் குழந்தையைப் போலக் கொண்டு, குழந்தைக்கு வேண்டுவனவற்றை அது கேட்கும் போது வழங்கி, அது கேளாமல் இருப்பினும் அதற்கு வேண்டியவற்றை அருளும் அப்பனாகவும் இருக்கிறான். "வேண்டத் தக்கது அறிவோய் நீ; வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று சொல்கிறார் அல்லவா?

அன்பின் மிகுதியால், 'என் ஆனை' என்றும், யாவும் அருளும் தகுதியால், 'என் அப்பன்' என்றும் அடியவர்கள் பாராட்ட, அவர்களுக்கு ஆவனவற்றை வழங்குவதோடு அவர்களுடைய உயிரிலே கலந்து இனித்து, என்றும் சாவா மூவாப் பெருவாழ்வைத் தரும் அமுதத்தைப் போல இருக்கிறான்.

**'என் ஆனை என் அப்பன்' என்பார்கட்கு இன் அமுதை**
**அன்னானை**

அவனே தலைவன்; எல்லாவற்றையும் உடையவன். அவனைப் பாடுவோம் என்கிறார்.

**அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

இறைவனுடைய சிறப்பியல்புகளையும் அவன் எழுந்தருளிய இரண்டு தலங்களையும் அவன் தன் அடியார்களின்

உயிரில் கலந்து இனிக்கும் தகைமையையும் நினைத்து உருகுகிறார் மணிவாசகர்.

முன்னானை மூவர்க்கும், முற்றுமாய், முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை, மாதுஇயலும் பாதியனைத்
தென் ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
'என் ஆனை என் அப்பன்' என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை, அம்மானைப் பாடுதுங்காண், அம்மானாய்!

*அம்மானை ஆடும் பெண்ணே, படைப்பு முதலிய மூன்று தொழில்களை இயற்றும் பிரம விஷ்ணு ருத்திரர்களுக்கும் முன்னே இருப்பவனை, எங்கும் உள்ள பொருள்களாய், எல்லாப் பொருள்களும் அழிந்தாலும் அழியாமல் பின்னும் நிலைத்திருப்பவனை, தேவலோகத்தில் தலைவனாக இருக்கும் மகாதேவனை, உமாதேவியார் எழுந்தருளிய ஒரு பாதியை உடைய அர்த்தநாரீச்வரனை, பாரத நாட்டில் தென்திசையிலுள்ள திருவானைக்கா என்னும் தலத்தில் கோயில் கொண்டு நித்திய வாசம் செய்பவனை, தெற்கே உள்ள பாண்டி நாட்டில் உள்ளவனை, 'என் ஆனை, என் அப்பன்' என்று அன்பினால் நெருங்கியும் பணிந்தும் பாராட்டும் அடியவர்களுக்கு இனிய அமுதம் போன்றவனை, யாவருக்கும் தலைவனை நாம் பாடுவோம்.*

[முன் என்பதனுடன் ஆன் என்னும் விகுதி சேர்ந்து முன்னான் என நின்றது; பின்னான் என்பதும் அத்தகையதே. மூவர் என்பது தொகைக்குறிப்புச் சொல். மூவர்க்கும் முன்னானை. முற்றும்-சராசரங்கள் அனைத்தும். அவன் 'பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணன்' என்பதை இது குறித்தது. முற்றுக்கும்-அழியும் தன்மையுடைய எல்லாவற்றுக்கும். பின்னானை-அவை அழிந்

தாலும் தான் அழியாமல் பின்னும் நித்தியனாக விளங்கு பவனை. பிஞ்ஞகன்-பின்னிய சடையை உடையவன். பல காலமாக இருத்தலின் கேசம் சடையாகிவிட்டது. பேணு- அடியார்கள் தமக்குக் கிடைத்த நிதியைப் போல அடைந்து போற்றும். மன்னான்: ஆன் விகுதி பெற்றது; மன் என்னும் சொல் அன் விகுதி பெற்று மன்னன் என்று வருவது போல இது ஆன் விகுதி பெற்று மன்னான் என வந்தது. வானவன் என்றது தேவலோகத்திலும் இறைமை செலுத்தும் இயல்பை நோக்கி. "வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்" என்பது அப்பர் தேவாரம்.

மாது-உமாதேவி. இயலும்-தங்கித் தன் அருளைக் கொழிக்கும். பாதியென்றது வாம பாகத்தை. தென் ஆனைக்கா: தென் என்பது இனத்தைச் சுட்டாத அடை; தென்பாண்டி நாட்டானை என்பதிலுள்ள தென் என்பதும் அத்தகையது; பாரத நாட்டில் தென் திசையிலுள்ளது என் பதைக் குறிக்க வந்தது. என்பார்கள் என்று பொதுவாகச் சொன்னாலும் அவ்வாறு நெருங்கியும் பாராட்டியும் சொல் பவர்கள் அடியார்கள் என்று கொள்ள வேண்டும்.

அமுது என்னாமல் இன்னமுது என்று சிறப்பித்தது, விண்ணோர் தாம் கடைந்த அமுதுண்டும் சாவ, தன்னை உட் கொண்டார் என்றும் பொன்றாத இன்ப நிலையைப் பெறச் செய்வதுபற்றி. இங்கே இனிமை, உயிரிற் கலந்து இனிக்கும் இனிமை; சிவானந்தம். அம்மானை-தலைவனை. காண்: அசை.]

இது **திருவம்மானையில்** வரும் 19-ஆவது **திருப்பாடல்.**

# 20. பேரானந்தம்

மனிதர்களுக்கு ஏனைய விலங்கினங்களுக்கு இல்லாத ஆற்றல்கள் உண்டு. நல்லது தீயது என்று பகுத்துப் பார்க்கும் அறிவை மனிதன் பெற்றிருக்கிறான். மனிதர்களை விடத் தேவர்களுக்கு அதிக ஆற்றல் உண்டு. ஒளியுடைய உடம்பும் பெரிய காரியங்களைச் சாதிக்கும் ஆற்றலும் உடையவர்கள் அவர்கள். தேவர்களை விட மிகுதியான பெற்றியை உடையவன் தேவராஜனாகிய இந்திரன். அவனை விட அதிக ஆற்றலும் அறிவும் உடையவன் பிரமன். பிரமனை விடத் திருமாலுக்குச் சிறப்பான பெற்றிகள் பல உண்டு. திருமாலைவிட உருத்திரனுக்குப் பெற்றிகள் மிக அதிகம். ஆனால் எல்லாரையும் விடப் பேராற்றலும் யாவற்றையும் அறியும் பேரறிவும் உடையவன் சிவபெருமான். அவனுக்கு உள்ள பெற்றிகள் பிறரிடம் காண்பதற்கு அரியனவாக இருக்கும்.

**பெற்றி பிறர்க்கு அரிய பெம்மான்.**

அவ்வாறு அரியவனாக இருக்கும் எம்பெருமான் அடியவர்களுக்கு அருள் வழங்கும்பொருட்டுத் திருப்பெருந்துறை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிறான்.

**பெருந்துறையான்.**

அவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு, அவருடைய பெருமையை உலகத்துக்கு அறிவிக்கும்பொருட்டு வேதத்

தையே குதிரையாகக் கொண்டு அதன்மேல் ஏறிவந்தான். அந்தக் குதிரை அவனுடைய அரசுரிமைக்கு ஏற்றது; எங்கே சென்றாலும் வெற்றியைப் பெறுவது.

**கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி.**

அவ்வாறு அடியவர்களுக்கு எளியவனாக வரும் சிவபெருமான், அவர்களுக்கு அருள் செய்யப் புகுவான். அடியார்கள் மனிதர்களாகையால் அவர்களிடம் குற்றங்களும் குணங்களும் சேர்ந்திருக்கும். என்றாலும் அவர்களிடம் உள்ள பேரன்பினால் அவர்களுடைய குற்றங்களைப் பாராமல் குணங்களை மாத்திரம் திருவுள்ளத்திற் கொண்டு அருள் வழங்க முற்படுவான்.

**தன் அடியார் குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டி.**

மனிதன் உலகில் பிறந்த பிறகு மெல்ல மெல்லப் பாசத்தை வளர்த்துக் கொள்கிறான். முதலில் தாயையும் பிறகு தந்தையையும் அப்பால் மற்றச் சுற்றத்தினரையும் அறிந்து அவர்களோடு உறவு கொண்டு இணைந்து பழகுகிறான். அந்த உறவு இறுக இறுக அவர்களுக்கு வரும் இன்ப துன்பங்களை தன்னுடையனவாக எண்ணி அவற்றால் உண்டாகும் உணர்ச்சிகளைப் பெறுகிறான். இவ்வாறு நாளடைவில் அவனுடைய பாசம் விரிந்து வளர்ந்து தனக்குள் அவனை அழுத்திவிடும். அது காரணமாக அவனுக்கு இன்னலே மிகுதியாகும். இறைவனுடைய திருவருள் கிடைத்தால் இந்தச் சுற்றத் தொடர்பு மெல்ல மெல்ல நீங்கும். சிலர் தம் சுற்றத்தாரென்றும், பலர் அல்லாதவரென்றும் உள்ள வேறுபாட்டுணர்ச்சி நழுவி விடும். உலகில் உள்ள எல்லா உயிர்களும் இறைவனுடைய குழந்தைகள் என்ற உணர்வினால் சர்வஜீவ தயை அவனுக்கு உண்டாகும்.

**சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான்.**

இவ்வாறு அருள் செய்கின்ற தன்மை இறைவனுக்கு நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவன் மிக மிகப் பழையவன். ஆதலால் அவனுடைய புகழும் மிகத் தொன்மையானது. அந்தப் புகழை நன்ருகத் தேர்ந்து பிறவற்றை எண்ணுமல் அதனையே பற்றிப் பாடுவது மெய்யன்பர்களின் இயல்பு.

**தொல் புகழே பற்றி.**

நம்மைக் கட்டுப்படுத்தியிருக்கும் பாசத்தைப் போக்க வேண்டுமானுல் இறைவனுடைய திருவருட்பலம் வேண்டும். பற்று அற்ருல்தான் பேரின்ப வாழ்வு கிடைக்கும். பற்று முழுவதும் அற்றபிறகு இறைவனைப் பற்றலாம் என்பது நடவாத காரியம். பற்று உள்ள போதே அவனைப் பற்றிக் கொண்டால் அவனுடைய அருளால் முதலில் பற்று அற, பிறகு ஆனந்தம் கிடைக்கும்.

நாம் அவனைப் பற்ற முயற்சி பண்ணினுல் அவன் நம்மைப் பற்றிக்கொள்ள வருவான். சிறு குழந்தை தாயைக் கட்டிக்கொள்ளப் போகும் பொழுது, தாய் அவளுடன் முன்வந்து கட்டித் தழுவுவது போல, அன்பர்களுடைய ஆர்வத்தை அறிந்த இறைவன் அவர்களைப் பற்றிக்கொண்டு பேரானந்தத்தை வழங்குவான். பற்றை அறச்செய்வதும் அவன் அருள்; பற்று முற்றும் அற்றபின் பேரின்பம் வழங்குவதும் அவன் அருளே.

**இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்**
**பற்றிய பேரானந்தம்.**

பற்று உள்ளபோதே அவனைப் பற்றிக் கொண்டால் பிறகு அந்தப் பற்று நீங்கி இன்பமடையும் தகுதி உண்டாகும். இதனை,

> "பற்றுக பற்றற்ருன் பற்றினை, அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

என்று திருவள்ளுவர் சொல்கிறார். எனவே, இறைவனுடைய புகழையே பேசி அவனைப் பற்றிக் கொண்டால், அவன் நம் பற்றைக் களைந்து தன்னுடைய அருள் இன்பத்தை நுகரும்படி வைப்பான்.

**இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்**
**பற்றிய பேரானந்தம்.**

இத்தகைய ஆனந்த அநுபவம் பெற்ற பெருமிதம் தோன்ற, 'அதைப் பாடுவோம்' என்கிறார் மணிவாசகர்.

> பெற்றி பிறர்க்கரிய பெம்மான், பெருந்துறையான்,
> கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்அடியார்
> குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிச்
> சுற்றிய சுற்றத் தொடர்வுஅறுப்பான் தொல்புகழே
> பற்றிஇப் பாசத்தைப் பற்றுஅறநாம் பற்றுவான்
> பற்றியபே ரானந்தம் பாடுதும்காண், அம்மானாய்!

*அம்மானை ஆடும் பெண்ணே, தன்னுடைய பெற்றி பிறருக்குக் கிடைப்பதற்கரிய பெருமான், தன் அடியார்களுக்கு அருள் செய்யும்பொருட்டுத் திருப்பெருந்துறை என்னும் தலத்தில் நித்திய வாசம் செய்பவன், வேதமாகிய அரசுரிமைக்குரிய குதிரையின்மேல் எழுந்தருளி வந்து, தன் அடியார்களின் குற்றங்களை நீக்கி, அவர்களுடைய குணங்களைத் திருவுள்ளத்தில் கொண்டு, அவர்களைக் குழந்தைகளைப் போலச் சீராட்டி, அவர்களை அதுகாறும் சுற்றியிருந்த சுற்றத்தின் தொடர்பை அறுப்பவன் ஆகிய சிவபெருமானுடைய பழைய புகழையே உள்ளத்தால் பற்றிக் கொண்டு, நம்மைக் கட்டுப்படுத்தியுள்ள இந்தப் பாசத்தை நம்மோடு பற்றுதல் அறும்படி நாம் பற்றுவதற்கு உரிய அப்பெருமான், எளிவந்து நம்பால் உறவு கொண்டு பற்றிய பேரானந்தத்தைப் பாடுவோம்.*

[பெற்றி-ஆற்றலும் அறிவும் பிறவுமாகிய தன்மைகள். பிறர்க்கு அரிய — பிறருக்குப் பெறுவதற்கரிய; பிறரால் அறிவதற்கரிய என்றும் கொள்ளலாம். பெம்மான்—பெரு

மான். கொற்றக் குதிரை—அரசுரிமைக்குரிய குதிரை; கொற்றம்-அரசுரிமை; வெற்றி எனலும் ஆம். கோதாட்டி-சீராட்டி; "மாகக், குருவி பரவாமல் கோதாட்டி என்னைக், கருதி வளர்த்தெடுத்த தாய்" என்பது பட்டினத்தார் பாடல். கோதாட்டி என்ற தொடர், இறைவன் அன்பர்களைத் தன்னுடைய குழந்தைகளாக எண்ணி அருள்புரிவான் என்ற குறிப்பை உடையது. சுற்றிய சுற்றம் - நம்மைச் சுற்றி அமைந்த உறவினரும் பிற பொருள்களும். தொடர்வு—தொடர்பு. அறுப்பான்—அறுக்கும் சிவபெருமான்; வினையாலணையும் பெயர். அறுப்பானது புகழ். தொல் புகழ் - அநாதிகாலமாக வரும் புகழ். புகழே பற்றி—வேறு எதனையும் உள்ளத்தால் பற்றிக் கொள்ளாமல் அவனுடைய புகழையே பற்றி என்றபடி; ஏகாரம் பிரிநிலை. இப்பாசத்தை—இந்த உலகில் நம்மைக் கட்டுப்படுத்திய பாசத்தை. நாம் பற்றுவான்—நம்மால் பற்றப்படுபவன். பற்றுவான் பற்றிய பேரானந்தம்—பற்றப்படுபவனாகிய இறைவன் நம் முயற்சியைக் கண்டு தானே விரைந்து வந்து நம்மைப் பற்றிக் கொண்டதனால் உண்டான பேரானந்தம்; பொறிகளால் நுகரப்படும் இன்பம் போலன்றி உயிரால் நுகரப்படும் பேரின்பம். பாடுதும்—பாடுவோம். தொல் புகழையும் ஆனந்தத்தையும் பாடுவோம் என்று இணைத்துப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். காண்: அசை.]

இறைவன் அடியார்களிடத்தில் பெருங்கருணை கொண்டு அவர்கள் குற்றம் உடையவர்களானாலும் தன்னை நாடிவந்த அன்பைப் பாராட்டி, அந்தக் குற்றங்களை நீக்கிப் பற்றுக்களை அறச் செய்து பேரானந்தத்தை வழங்குவான் என்ற கருத்து இதனால் தெரியவருகிறது.

திருவாசகத்தில் உள்ள திருவம்மானை என்ற பகுதியில் உள்ள இறுதிப் பாடலாகிய 20-ஆம் திருப்பாட்டு இது.

## கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அலங்காரம் | கி. வா. ஜ. | 3 | 50 |
| 2. | குறிஞ்சிக் கிழவன் | ,, | 3 | 50 |
| 3. | ஆனந்தத் தேன் | ,, | 3 | 50 |
| 4. | வாழ்க்கைக் கூத்து | ,, | 3 | 50 |
| 5. | மரணம் இல்லா வாழ்வு | ,, | 3 | 50 |
| 6. | காலையும் மாலையும் | ,, | 3 | 50 |
| 7. | அடியார்க்கு நல்ல பெருமாள் | ,, | 6 | 00 |
| 8. | மயில் ஏறிய மாணிக்கம் | ,, | 6 | 00 |
| 9. | தனி வீடு | ,, | 6 | 00 |
| 10. | படிக்கும் திருப்புகழ் | ,, | | |
| 11. | ஓங்கார ஒளி | ,, | 3 | 50 |
| 12. | தண்டைச் சிற்றடி | ,, | | |
| 13. | நீர்க்குமிழி | ,, | | |
| 14. | விழிக்குத் துணை | ,, | 3 | 50 |
| 15. | பழநித் திருநாமம் | ,, | | |
| 16. | மனமலர் | ,, | | |
| 17 | இருவிலங்கு | ,, | | |
| 18. | தனிவெளி | ,, | 3 | 50 |
| 19. | உள்ளம் குளிர்ந்தது | ,, | 3 | 50 |

**அமுத நிலையம்**

46, இராயப்பேட்டை ஹைரோடு

சென்னை-600 014